REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 செப்டெம்பர் 18 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 88 இல. 222 | September 18, Friday, 2020 | 24 பக்கங்கள் | 30/-






நாட்டின் எதிர்கால சந்ததியினருக்காக 83,000 வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படவுள்ள கொழும்பு துறைமுக நகர திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் ஆறு வருடங்கள் கடந்துள்ளன. நேற்று கண்காணிப்பு சுற்றுப்பயணம் மேற்கொண்டு துறைமுக நகர திட்டத்தை பார்வையிட்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ச அங்கு, கடற்கரையில் அமைந்துள்ள அக்வா கோல்ப் மைதானத்தில் கோல்ப் விளையாட்டிலும் ஈடுபட்டார்.

## ஜனாதிபதி, பாதுகாப்பு செயலருக்கு

# பகிரங்க கொலை அச்சுறுத்தல் வழக்கு 02 ஆவது பிரதிவாதியாக 'பொடி லெசி'

### காலி மாஜிஸ்திரேட் நீதிமன்றம் அறிவிப்பு

ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளர் உட்பட உயர்மட்ட சிறைச்சாலை அதிகாரிகள் பலருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த சம்பவம் தொடர்பாக 'பொடி லெசி' என்றழைக்கப்படும் அருமஹந்தி ஜனித் மதுசங்க என்ற பாதாள உலக நபரை அது தொடர்பான வழக்கில் இரண்டாவது பிரதிவாதியாக குறிப்பிட காலி பிரதான மாஜிஸ்திரேட் ஹர்ஷன கெக்குலுவல அனுமதி வழங்கியுள்ளார்.



தர்மகீர்த்திகே தாரக பெரேரா என்ற கொஸ்கொட தாரகவும் 'பொடி லெசி' என்பவரும் பூஸா முகாமில் வைத்து ஜனாதிபதி, பாதுகாப்பு செயலாளர் மற்றும் உயர்மட்ட சிறை அதிகாரிகள் மீது பகிரங்கமாக கொலை அச்சுறுத்தல் விடுத்ததாக கடந்த செப்டம்பர் 08 ஆம் திகதி குற்றச் செயல்கள் விசாரணை திணைக்களமும் சட்ட மாஅதிபர் திணைக்களமும் குற்றம் சாட்டி வழக்கு தாக்கல் செய்திருந்தன.

உண்ணாவிரதமிருந்து வந்த சிறைக்கைதிகள் சிலரை நேரில் பார்ப்பதற்காக மேற்படி பிரமுகர்கள் பூஸா சிறைக்கு சென்றிருந்த போதே சம்பந்தப்பட்ட பாதாள உலக நபர்கள் இருவரும் இவ்வாறு பகிரங்க கொலை அச்சுறுத்தலை விடுத்திருந்ததாக தெரிய வந்துள்ளது.

04

## டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட கொழும்பு பங்குச் சந்தை; நேற்று முதல் ஆரம்பம்

03

## உலகளவில் 03 கோடி பேருக்கு கொரோனா

உலகம் முழுவதும் தற்போதைய நிலவரப்படி 3,00,25,097 (மூன்று கோடி) பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனா பாதிப்பிலிருந்து இதுவரை 2,17,81,915 (2 கோடி) பேர் குணமடைந்துள்ளனர். வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை

04

## மோடியின் 70 ஆவது பிறந்த தினம்:

# பிரதமர் மஹிந்த தொலைபேசியில் நேற்று வாழ்த்து தெரிவிப்பு



### தந்தையாகி விட்ட நாமலுக்கும் மோடி வாழ்த்து



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் 70ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, நேற்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தொலைபேசியில் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார். நேற்று மாலை தொலைபேசியில் தொடர்பு கொண்ட பிரதமர் மஹிந்த, இந்தியப் பிரதமரிடம் நலம் விசாரித்ததுடன் தனது பிறந்த நாள் வாழ்த்துக்களையும்

04

# அம்பன் புயலால் அழிவடைந்த செய்கைகளுக்கு நஷ்டஈடு

### அமைச்சர் டக்ளஸின் முயற்சிக்கு அமைச்சரவை தீர்மானம்

யாழ்ப்பாணத்தில் அம்பன் புயலினால் அழிவடைந்த பப்பாசி மற்றும் வாழைத் தோட்ட உரிமையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த பாதிப்புகளுக்கு



நட்டஈடு பெற்றுக் கொடுப்பதற்கு தொடர்ச்சியாக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்த நிலையில் (16) நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் வீசிய அம்பன் புயல்

04

## அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பு தொடர்பில் விரைவில் விசாரணை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பு தொடர்பில் அரசாங்கத்தின் வாழ்க்கைச் செலவு தொடர்பான குழு கூடி ஆராய்ந்து

04

## ஜனாதிபதி, பிரதமரின் பெயர்களை குறிப்பிட்டு அனுமதி கோரினால் தயங்காது நிராகரிக்கவும்

### ஜனாதிபதியின் செயலாளர் அனைத்து அதிபர்களுக்கும் அறிவுறுத்தல்

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் உயர் அரச அதிகாரிகளின் பெயர்களை குறிப்பிட்டு பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளுமாறு முன்வைக்கப்படும் வேண்டுகோள்களை தயங்காது நிராகரிக்குமாறு அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின், ஜனாதிபதி அலுவலக அதிகாரிகளின், பிரதமரின், பிரதமரின் அலுவலக அதிகாரிகளின் மற்றும் ஏனைய உயர் அரச அதிகாரிகளின் உத்தரவென்று குறிப்பிட்டு பாடசாலைகளுக்கு

04

## யாழ். பல்கலைக்கழகத்தில் பகிடிவதை; புலனாய்வு துறையினர் தீவிர கண்காணிப்பு

### குற்றச்சாட்டு குறித்து அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹலிய

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பல்கலைக்கழகங்களில் நடைபெறும் பகிடிவதைகளை தடுப்பது தொடர்பில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தி வருவதாகவும் அது தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் செயற்பட்டு வருவதாகவும் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும்

04



### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்; நீதிமன்றில் அறிக்கை

## சந்தேக நபர்கள் 13 பேர் CID யினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை

**சுபாஷினி சேனாநாயக்க**

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கொழும்பு, கிங்ஸ்பரி ஹோட்டலில் நடத்தப்பட்ட தாக்குதலில் தொடர்புள்ள13 சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுவதாக குற்றப்புலனாய்வு திணைக்களம் கோட்டை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்திற்கு தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் சந்தேக நபர்கள் நேரடியாக சம்பந்தப்பட்டிருப்பது விசாரணையில் தெரிய வந்துள்ளதென்றும்

04

### இ.தொ.கா கள்ள மௌனம் காக்கவில்லை;

# புதிய அரசியலமைப்பு குழுவிற்கு விரைவில் மலையக பிரதிநிதி





### ஏற்பாடு குறித்து மனோவிற்கு செந்தில் பதில்

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவில் மலையக மக்களின் பிரதிநிதி ஒருவரை உள்வாங்குவதற்கான சிபாரிசுகளை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளது. சில நடைமுறை சிக்கல்கள் காரணமாக காலதாமதம் ஏற்பட்டுள்ளதுடன், விரைவில் இதற்குச் சாதகமான பதிலொன்றை அரசாங்கம் வழங்குமென்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான

04

## உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முதல்நாள் CIDயுடன் உரையாடிய ஹரீனின் தந்தை

### ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளிக்கையில் ஹரீன் தெரிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முதல் நாளான ஏப்ரல் 20 ஆம் திகதி தாக்குதல் தொடர்பில் சி.ஐ.டி அதிகாரி ஒருவர் முன்னாள் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவின் தந்தைக்கு தொலைபேசியில் அறிவித்ததாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்தும்




ஜனாதிபதி ஆணைக்குழுவில், தொலைபேசி உரையாடல் தொடர்பான சாட்சியம் முன்வைக்கப்பட்டது.

தனது தந்தை முன்கூட்டியே தகவல் அறிந்தது பற்றி தான் அவரிடம் வினவியதாகவும் அதற்கு "உன்னை விட பல விடயங்கள் எனக்குத் தெரியும்" தந்தை

04

## விசாரணைக்கு வருமாறு விஜயகலாவுக்கு அழைப்பு



ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனுக்கு விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டிலிருந்து 2019ஆம் ஆண்டுவரையான காலப்பகுதிக்குள் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல்கள் குறித்து விசாரணை செய்யவென

04

## 20 ஆவது திருத்தம் பாரதூர விளைவுகளை ஏற்படுத்தும்

### கரு ஜயசூரிய எச்சரிக்கை

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

உத்தேச 20ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் எதிர்காலத்தில் மனநோயாளி ஒருவர் அதிகாரத்தை கைப்பற்றினால் பாரதூரமான விளைவுகள் ஏற்படுமென முன்னாள்

04



## 2021 நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் ஒக்டோபரில் பாராளுமன்றில் சமர்ப்பிக்க அமைச்சரவை அனுமதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

2021ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இரண்டாம் வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

2021ஆம் வருடத்திற்கான வரவு செலவு திட்டம் தயாரிப்பது தொடர்பில் பின்பற்றப்படும் கொள்கை தொடர்பில் நிதியமைச்சரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ள அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை

04



வடக்கில பொலிசாரை மாசத்துல ரெண்டு தரம் வம்புக்கு இழுக்க ஏதாவது காரணம் வந்துடும்....

ஓம்! ஓம்!! இந்தக் கிழமை திலீபன் சிலைக்கு முன்னால நிண்டு போராடுவதை வச்சு ஒரு கிழமைக்கு காலத்தைக் கடத்தலாம்!!!

## மாகாண சபை முறைமைகளுக்கு வலுவூட்டப்படுவதே நிலையான அமைதிக்கு வழி வகுக்கும்

### - ஹாபிஸ் நஸீர் எம்.பி

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**



மாகாண சபை முறைமைகள் வலுவூட்டப்பட்டு அதிகாரங்களை பகிர்வதன் மூலமே நிரந்தர சமாதானத்தையும் நிலையான அபிவிருத்தியையும் எட்ட முடியுமென ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஹாபிஸ் நஸீர் அஹமட் சுட்டிக்காட்டினார். மட்டக்களப்பு காத்தான்குடியில் (16) கனேடிய உயர்ஸ்தானிகர் டெவிட் மெகினனுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாகாண சபைகள் வலுவூட்டப்படுவது மாத்திரமன்றி மாகாண சபைத் தேர்தல்களும் அவசரமாக நடத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் அவர் விளக்கினார்.

04

## டயமன்ட் கப்டனுக்கு நீதிமன்றில் ஆஜராக அழைப்பாணை விடுப்பு

தீப்பற்றி எரிந்த MT New Diamond எண்ணெய்க் கப்பலின் கப்டனுக்கு எதிர்வரும் செப்டெம்பர் 28 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் MT New Diamond எண்ணெய்க் கப்பலின் கப்டனுக்கு இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.



இதேவேளை, MT Diamond கப்பலின் மாலுமியை சந்தேக நபராக பெயரிடுவதற்கும் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்காக சட்டச் சார்பான முன்னறிவிப்பை

04

## கொழும்பு சர்வதேச புத்தக கண்காட்சி இன்று ஆரம்பம்



2020 ஆம் ஆண்டுக்கான 'கொழும்பு சர்வதேச புத்தக கண்காட்சி' இன்று (18) ஆரம்பமாகின்றது. இலங்கை நூல் வெளியீட்டாளர்களின் சங்கம் 22 ஆவது தடவையாகவும் ஏற்பாடு செய்துள்ள கொழும்பு சர்வதேச புத்தக கண்காட்சி, கொவிட் 19 தொற்று நிலைமையின் காரணமாக இம்முறை சுகாதார வழிகாட்டல் ஆலோசனைகளுக்கமைவாக

04

கொவிட்–19 தடுப்பு மருந்து:

# ஏற்கனவே பாதியை வங்கிய உலகின் செல்வந்த நாடுகள்

செல்வந்த நாடுகள் எதிர்காலத்தில் வரப்போகும் கொவிட்–19 தடுப்பு மருந்துகளில் பாதியை ஏற்கனவே வாங்கிவிட்டதாக ஒக்ஸ்பாம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.



அந்த செல்வந்த நாடுகளின் மொத்த மக்கள்தொகை உலக மக்கள் தொகையில் 13 வீதம் மாத்திரமாகும்.

மருந்துத் தயாரிப்பு நிறுவனங்களும் முன்னிலையில் உள்ள 5 தடுப்பு மருந்துத் தயாரிப்பாளர்களும் செய்துகொண்ட ஒப்பந்தங்களை அரச சார்பற்ற அமைப்பான ஒக்ஸ்பாம் ஆராய்ந்துள்ளது. அந்த 5 தடுப்பு மருந்துத் தயாரிப்பாளர்களின் மொத்த உற்பத்தித் திறன் 5.9 பில்லியன் மருந்து அளவு என ஒக்ஸ்பாம் கணக்கிட்டுள்ளது.

ஒருவருக்கு 2 மருந்து அளவு தேவைப்படும் என்றால், அது 3 பில்லியன் மக்களுக்குப் போதுமானது. ஏற்கனவே 5.3 பில்லியன் மருந்து அளவுக்கு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுவிட்டன.

மொடர்னா மருந்து நிறுவனம் 2.5 பில்லியன் டொலர் பொதுப் பணத்தைப் பெற்றுக்கொண்டு தனது மருந்துகள் அனைத்தையும் செல்வந்த நாடுகளுக்கு விற்றுவிட்டதாக ஒக்ஸ்பாம் சுட்டிக்காட்டியது.

பாதுகாப்பான, பயனுள்ள தடுப்பு மருந்தைத் தயாரிப்பது எவ்வளவு முக்கியமோ அந்தத் தடுப்பு மருந்தை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதும் அது மலிவாக இருப்பதும் அதே அளவு முக்கியம் என்று ஒக்ஸ்பாம் குறிப்பிட்டது.

கொவிட்–19 நோய்த்தொற்று எல்லா இடங்களிலும் இருப்பதை அது சுட்டிக்காட்டியது. தடுப்பு மருந்து அனைவருக்கும் இலவசமாகவும் தேவைக்கேற்ப நியாயமாக வழங்கப்பட வேண்டும் என்று அது வலியுறுத்தியது.

# அமெரிக்காவில் சூறாவளியால் கடும் மழை, பாரிய வெள்ளம்

வெப்பமண்டல சாலி சூறாவளி தாக்கியதில் அமெரிக்காவில் அரை மில்லியன் மக்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டிருப்பதோடு அமெரிக்காவின் வளைகுடா கரை பகுதி கடும் மழை மற்றும் காற்றினால் பாதிக்கப்பட்டுள்ளது.




2ஆம் நிலை சூறாவளியாக பலவீனமடைந்து கடந்த புதன்கிழமை கரையைத் தொட்ட சாலி தொடர்ந்து பிளோரிடா மற்றும் அலபாமா பகுதிகளில் வீசிவருகிறது.

மணிக்கு 169 கி.மீ வேகத்தில் வீசிய சூறாவளி காற்று காரணமாக 24 மணி நேரத்தில் மட்டும் சுமார் 46 செ.மீ அளவுக்குக் கனமழை கொட்டியுள்ளது. இதனால், வீதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு வாகனங்கள் நீரில் மூழ்கியுள்ளன. கடலில் நின்றுகொண்டிருந்த படகுகள் பல வீதிகளுக்கு துாக்கி வீசப்பட்டுள்ளன.

இதனால் ஏற்பட்ட வெள்ளத்தில் ஒருவர் உயிரிழந்திருப்பதோடு நூற்றுக்கணக்கானவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர். புளோரிடாவின் பென்சகோலா பகுதியில் அதிக சேதங்களை ஏற்படுத்தியுள்ளது.

“புளொரிடா பான்ஹன்ட் மற்றும் தெற்கு அலபாமாவின் பல பகுதிகளில் பேரழிவு மற்றும் உயிராபத்துக் கொண்ட வெள்ளம் தொடர்ந்து நீடித்து வருகிறது” என்று தேசிய சூறாவளி மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இந்த சூறாவளி பென்சகோலா நகரில் ஒரு மாதத்தில் பெய்ய வேண்டிய மழை ஒரு மணி நேரத்தில் பெய்து தீர்த்துள்ளது என்று அந்த நகர தீயணைப்புப் படைத் தலைவர் கின்னி கார்னோர் தெரிவித்துள்ளார்.

அட்லான்டிக் கடல் பகுதியில் உருவெடுத்த பல சூறாவளிகளில் ஒன்றாக இந்த சாலி சூறாவளி உள்ளது.

# உலகில் கொரோனா தொற்று 30 மில்லியனைத் தாண்டியது

உலகில் கொரோனா வைரஸ் தொற்றுச் சம்பவங்கள் நேற்று 30 மில்லியனை கடந்திருப்பதாக ரோய்ட்டர் செய்தி நிறுவனத்தின் தரவு மூலம் உறுதியாகியுள்ளது. இது நோய்த் தொற்று இன்னும் பலவீனம் அடையாததையே காட்டுகிறது.

கொவிட்–19 தொற்றின் புதிய மையப்புள்ளியாக இந்தியா மாறியிருப்பதோடு வட மற்றும் தென் அமெரிக்க நாடுகளை ஒன்றிணைத்த பிராந்தியத்தில் உலகில் பாதி அளவான நோய்த் தொற்று சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

அண்மைய தினங்களில் சாதனை அளவுக்கு நாளாந்த நோய்த் தொற்று எண்ணிக்கை அதிகரித்திருப்பதோடு உயிரிழப்பு எண்ணிக்கையும் ஒரு மில்லியனை நெருங்கியுள்ளது. வைரஸுக்கு எதிரான தடுப்பு மருந்து ஒன்றை மேம்படுத்துவதற்கு சர்வதேச அளவில் கடும் போட்டி நிலவி வருகிறது.

இதன்படி ஆண்டுதோறும் பதிவாகும் கடுமையான காய்ச்சல் நோயை விட கொரோனா வைரஸ் தொற்று சம்பவங்கள் ஐந்து மடங்காக அதிகரித்திருப்பதாக உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

நோய் அரும்பு காலத்திற்கு இரண்டு வாரங்கள் வரை எடுத்துக்கொள்ளும் இந்த வைரஸினால் உலகெங்கும் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை ஒரு மில்லியனை நெருங்கி இருப்பது ஒரு பின்தங்கிய நிலையாகவே கருதப்படுகிறது. எனினும் சளிக்காய்ச்சலுடன் தொடர்புபட்டு ஆண்டுதோறும் உயிரிழக்கும் 290,000 தொடக்கம் 650,000 எண்ணிக்கையை விட இது அதிகமாகும்.



கடந்த புதன்கிழமை அமெரிக்காவுக்கு அடுத்து 5 மில்லியன் நோய்த் தொற்று சம்பவங்கள் பதிவான ஒரே நாடாக இந்தியா இடம்பெற்றது.

உலகின் இரண்டாவது மிகப் பெரிய சனத்தொகை கொண்ட நாடான இந்தியாவில் கடந்த ஓகஸ்ட் தொடக்கம் அமெரிக்காவை விடவும் நாளாந்தம் புதிய நோய்த் தொற்று சம்பவங்கள் பதிவாகின்றன. இது உலக தொற்று சம்பவங்களில் 16 வீதமாக உள்ளது.

உலக நோய்த் தொற்று சம்பவங்களில் சுமார் 20 வீதத்தை அமெரிக்கா பெற்றுள்ளது. இந்த வரிசையில் மூன்றாவது இடத்தில் இருக்கும் பிரேசிலில் உலக வைரஸ் தொற்றுச் சம்பவங்களில் 15 வீதம் பதிவாகியுள்ளது.

கொரோனா நோய்த் தொற்று 25 மில்லியனில் இருந்து 30 மில்லியனைத் தொட 18 நாட்கள் எடுத்துக்கொண்டுள்ளது.

இதுவே 20 மில்லியனில் இருந்து 25 மில்லியனைத் தொடுவதற்கு 20 நாட்களும் 15 மில்லியனில் இருந்து 20 மில்லியனைத் தொடுவதற்கு 19 நாட்களும் எடுத்துக்கொண்டுள்ளது.

சில இடங்களில் தொற்று பெரிய அளவில் தாக்கம் செலுத்திய நிலையில் பல நாடுகளிலும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதால் உலகில் நாளாந்த நோய்த் தொற்று வேகம் குறைவடைந்துள்ளது.

எனினும் பல நாடுகளிலும் மட்டுப்படுத்தப்பட்ட சோதனைகளே இடம்பெற்று வருவதால் நோய்த் தொற்று எண்ணிக்கை மற்றும் உயிரிழப்பு கூறப்படுவதை விடவும் அதிகமாக இருக்கும் என்று சுகாதார நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

# வெறுப்புப் பேச்சினை எதிர்த்து ஒருநாள் பேஸ்புக் புறக்கணிப்பு

கிம் கார்டேஷியன், லியோனார்டோ டி காப்ரியோ, மைக்கல் டீ. ஜோர்டன் உள்ளிட்ட பிரபலங்கள் நேற்று தங்களுடைய பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் பக்கங்களில் பதிவுகளை இடுவதை புறக்கணித்தனர்.



சமூக ஊடகத் தளங்களில் பகைமை, பொய்த் தகவல் ஆகியவற்றுக்கு எதிராக பேஸ்புக் நிறுவனம் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி அவர்கள் இவ்வாறு செயற்பட்டுள்ளனர்.

வெறுப்புப் பேச்சை நிறுத்தும் இயக்கத்தின் ஓர் அங்கமாக சமூக ஊடகங்களில் பதிவிடப் போவதில்லை என்று பிரபலங்கள் தெரிவித்திருந்தனர்.

“அமெரிக்காவில் வேண்டுமென்றே பிளவை ஏற்படுத்துவதற்குப் பகைமை, பொய்த் தகவல் ஆகியவற்றைச் சில குழுக்கள் பரப்புவதைத் தளங்கள் அனுமதிக்கின்றன. ஒன்றும் செய்யாமல் என்னால் இருக்க முடியவில்லை” என்று 188 மில்லியன் இன்ஸ்டாகிராம் ரசிகர்களைக் கொண்ட கார்டேஷியன் கூறினார்.

பாகுபாடு, பகைமை, வன்முறை ஆகியவற்றை ஏற்படுத்தும் தகவல் மீது நடவடிக்கை எடுக்கும்படி, அரசாங்கங்கள் மட்டுமல்ல ஆர்வலர்களும் பேஸ்புக் நிறுவனத்திற்கு கடும் நெருக்கடி அளித்து வருகின்றனர்.

பேஸ்புக்கில் விளம்பரம் செய்வதைத் தடைசெய்யும் மற்றோர் இயக்கத்தில், ஜூலை மாத நிலவரப்படி 1,000 நிறுவனங்கள் சேர்ந்துள்ளன.

# உகண்டாவில் 200 கைதிகள் நிர்வாணமாகத் தப்பியோட்டம்

உகண்டாவில் ஆயுதங்களைத் திருடி, உடைகளைக் களைந்து நிர்வாணமாக தப்பிச் சென்ற 200க்கும் அதிகமான கைதிகளை படையினர் தேடி வருகின்றனர்.



இதன்போது ஏற்பட்ட மோதல்களின்போது இரு கைதிகள் மற்றும் ஒரு படை வீரர் கொல்லப்பட்டதாக இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

மொரோடோ நகரில் கடந்த புதன்கிழமை இராணுவச் சோதனைச் சாவடி ஒன்றுக்கு அருகில் உள்ள சிறைச்சாலை ஒன்றில் இருந்தே இந்த கைதிகள் தப்பிச்சென்றனர்.

பிராந்தியத்தில் கால்நடைத் திருட்டுடன் சம்பந்தப்பட்ட கடும் குற்றவாளிகளே இந்தச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தமது மஞ்சள் நிற கைதிகள் அங்கியினால் அடையாளம் காணப்படுவதை தவிர்ப்பதற்கு அந்த ஆடைகளை களைந்து விட்டு நிர்வாணமாக காட்டுப் பகுதி ஒன்றை நோக்கி இவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

இவர்களிடம் 15 துப்பாக்கிகள் மற்றும் வெடிபொருட்கள் இருப்பதாக எச்சரித்திருக்கும் இராணுவம் ஆடைகளை பெறுவதற்கு வீடுகளுக்கு ஊடுருவலாம் என்றும் அறிவுறுத்தியுள்ளது.

கால்நடை திருட்டு மற்றும் துப்பாக்கி வன்முறைகளால் பதற்றம் நிறைந்த பிராந்தியமான கரமொஜாவின்மிகப்பெரியநகராகமொரோடோ உள்ளது.

# 20 ஆண்டுகளில் 100 மில். ஹெக்டர் காடுகள் அழிவு

கடந்த 20 ஆண்டுகளில் உலகின் காடுகளில் 100 மில்லியன் ஹெக்டர் அழிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. எனினும் காடுகள் அழிக்கப்படும் வேகம் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.



மொத்த நிலப்பரப்பில் காடுகளின் வீதம் 2000ஆம் ஆண்டில் 31.9 ஆக இருந்தது. தற்போது அது 31.2 வீதமாக உள்ளது. உலகின் காடுகளில் 100 மில்லியன் ஹெக்டர் அழிக்கப்பட்டதை அது குறிப்பதாக உணவு வேளாண்மை அமைப்பு தெரிவித்தது.

சஹாரா பாலைவனத்தை ஒட்டிய ஆபிரிக்க நாடுகள், தென்கிழக்காசியா ஆகிய பகுதிகளில் மிக அதிகமாகக் காடுகள் அழிக்கப்பட்டன. தென்னமெரிக்காவில் அந்தப் போக்கு குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வளரும் நாடுகளில் பயிர்கள், கால்நடைகளுக்காகக் காடுகள் அழிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. 2015இல் தென்கிழக்காசிய நிலப்பரப்பில் 49 வீதமாக இருந்த காடுகள், தற்போது 47.8 வீதமாக குறைந்துள்ளன.

எனினும் ஆசியாவின் மற்ற பகுதிகள், ஐரோப்பா, வட அமெரிக்கா ஆகியவற்றில் காடுகளின் அளவு அதே நிலையில் அல்லது அதிகரித்து உள்ளன.

சீனா, பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகள் அதன் நிலப்பரப்புகளின் மொத்த அளவில் காடுகளின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளன.

# மத நிந்தனை குற்றச்சாட்டில் நைஜீரிய சிறுவனுக்கு சிறை

நைரஜீரியாவில் இஸ்லாமிய நீதிமன்றம் ஒன்றினால் 13 வயது சிறுவனுக்கு மதநிந்தனை குற்றச்சாட்டில் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.



இந்த தண்டனையை மீள் பரிசீலனை செய்யும்படி ஐ.நா சிறுவர் அமைப்பான யுனிசெப் நைஜீரிய நிர்வாகத்தை கேட்டுக்கொண்டுள்ளது.

வடக்கு கானோ மாநிலத்தில் நண்பர் ஒருவருடன் விவாத்தில் ஈடுபட்டிருந்தபோது இறைவன் பற்றி அவமதிக்கும் கருத்துகளை கூறியதாகவே இந்த சிறுவனுக்கு கடந்த மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நைஜீரியாவின் மதச்சார்பற்ற சட்டத்திற்கு மத்தியில் ஷரியா சட்டத்தை பின்பற்றும் 12 மாநிலங்களில் ஒன்றாக கானோ உள்ளது. நாட்டின் வடக்கு பகுதியில் முஸ்லிம்களே பெரும்பான்மையாக உள்ளனர்.

“13 வயது சிறுவன் மீதான தண்டனை, நைஜீரியாவில் சிறுவர் உரிமை மற்றும் சிறுவர் நீதி தொடர்பிலான அனைத்து அடிப்படை கொள்கைகளையும் மீறுவதாக உள்ளது” என்று நைஜீரியாவின் யுனிசெப் பிரதிநிதி பீட்டர் ஹோகின்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தீர்ப்புக்கு எதிராக கடந்த செப்டெம்பர் 9 ஆம் திகதி மேன்முறையீடு செய்ததாக அந்தச் சிறுவனின் வழக்கறிஞர் குறிப்பிட்டுள்ளார்.

# கொலம்பியாவில் ஆக்கிரமிப்பாளர் சிலையை கவிழ்த்த பழங்குடியினர்

கொலம்பியாவில் பழங்குடியினர் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் தென் மேற்கு நகரான பொபானில் உள்ள ஸ்பானிய ஆக்கிரமிப்பாளர் செபஸ்டியன் டி பெலகசாரின் சிலை தரையில் கவிழ்க்கப்பட்டுள்ளது.



1537 இல் இந்த நகரை நிறுவியவரான டி பெலகசார் கொலம்பிய வரலாற்றில் சர்ச்சைக்குரிய ஒருவராக உள்ளார். அவரது சிலை மீது கயிற்றை கட்டி கீழே வீழ்த்திய மிசான் சமூகத்தைச் சேர்ந்தவர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.

அந்த சிலை ஐந்து நூற்றாண்டுகளில் இனப்படுகொலை மற்றும் அடிமைத்துவத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதாக பழங்குடித் தலைவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பல் கலாசார நகர் ஒன்றின் அடையாளத்திற்கு எதிரான தாக்குதலாக இது உள்ளது என்று பொபாயன் நகர மேயர் குறிப்பிட்டுள்ளார்.

தென் அமெரிக்காவின் வட மேற்கு பகுதிகளில் பல்வேறு பயணங்களை மேற்கொண்டவராக டி பெலகசார் உள்ளார். தற்போதைய ஈக்வடோர் தலைநகர் குயிடோவும் அவரால் நிறுவப்பட்டதாகும். இந்த ஆக்கிரமிப்பாளர் தமது ஏனைய முன்னோர்களை கொன்று குவித்து நிலங்களை அபகரித்ததாக மிசாக் மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

2020 செப்டெம்பர் 18 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

தினகரன் விளம்பரம் 0112429367 | விற்பனை பிரிவு 0112429444, 0112429378 | ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 04.45 |
| லுஹர் | 12.06 |
| அஸர் | 03.15 |
| மஃரிப் | 06.09 |
| இஷா | 07.19 |

**இன்றைய சுபதினம்**

சார்வரி வருடம் வைகாசி 16

ராகுகாலம் : பகல் : 10.22 – 11.52வரை

சுபநேரம் : காலை : 5.52 – 7.22வரை

யோகம்: மரணசித்த யோகம்

நட்சத்திரம்: மகம் ந. இரவு 3.42 வரை

திதி: சப்தமி



அனகாரிக தர்மபால அவர்களின் 156வது ஜனன தின நிகழ்வு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று மாளிகாகந்த மகாபோதி அக்ர ஷிராவக மகா விகாரையில் நடைபெற்றபோது. அனகாரிக தர்மபாலவின் உருவச் சிலைக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மலரஞ்சலி செலுத்தினார்.

டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட

# கொழும்பு பங்குச் சந்தை நேற்று முதல் ஆரம்பம்

## பிரதமர் மஹிந்தவால் ஆரம்பித்து வைப்பு

கொழும்பு பங்கு பரிவர்த்தனை மற்றும் இலங்கை பத்திரங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு இணைந்து அறிமுகப்படுத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட கொழும்பு பங்குச் சந்தையை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கொழும்பு பங்குச்சந்தை வளாகத்தில் நடைபெற்றது.

'எதிர்காலத்திற்கான ஒரு பாய்ச்சல்' (Hyper leap to the future)என்ற தொனிப்பொருளின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்து கொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, டிஜிட்டல் மயப்படுத்த பங்குச் சந்தையை திறந்து வைக்கும் நிகழ்விலும் பங்கேற்றார்.

அங்கு நினைவு குறிப்பொன்றை முன்வைத்த பிரதமர், கொழும்பு பங்குச்சந்தையினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய இணையத்தளத்தை இணையத்தில் வெளியிட்டார்.

டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டதனூடாக புதிய முதலீட்டாளர்களுக்கு கிளை அலுவலகங்களுக்கு செல்லாது மத்திய வைப்பொன்றை ஆரம்பித்துக் கொள்ளலாம்.

அதற்கமைய கொழும்பு பங்கு பரிவர்த்தனை கையடக்க தொலைபேசி பாவனையின் ஊடாக நாடு முழுவதும் பரந்து வாழும் முதலீட்டாளர்களுக்கு பங்குச்சந்தை அல்லது தரகு நிறுவனங்களுக்கு செல்லாது கணக்குகளை ஆரம்பிப்பதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் புதிய முதலீட்டாளர்களுக்கு பங்கு கொடுக்கல் 04

**நாணயமாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 131.48 | 137.72 |
| கனடியன் டொலர் | 137.08 | 142.61 |
| யூரோ | 213.86 | 221.45 |
| ஜப்பான் யென் | 1.723 | 1.798 |
| சிங்கப்பூர் டொலர் | 133.22 | 138.55 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 235.23 | 243.05 |
| சுவிஸ் பிராங்க் | 198.83 | 206.53 |
| அமெரிக்க டொலர் | 182.72 | 187.12 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை |
|---|---|
| பஹ்ரின் டினார் | 490.86 |
| குவைத் டினார் | 605.18 |
| ஓமான் ரியால் | 480.72 |
| கட்டார் ரியால் | 50.83 |
| சவூதி ரியால் | 49.34 |
| ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.39 |

## அமைச்சரவை தீர்மானங்கள்



கொரோனா வைரஸ் தொற்றினால் வெளிநாட்டு நாணய பெறுமதியில் ஏற்பட்ட தாக்கத்தைக் குறைக்கும் நோக்குடன் இறக்குமதியை முறையாக முன்னெடுத்தல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை வழமை நிலைக்கு கொண்டுவருவது தொடர்பில் ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரை அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்டது.

★★★

அம்பன் புயல் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட இந்த விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைக்கு அமைவாக தேவையான 52.98 மில்லியன் ரூபா நிதியை மேலதிக மானியமாக யாழ் மாவட்ட செயலாளரிடம் வழங்குவதற்கும் அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

★★★

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் இலக்கை அடைவதற்காக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்புக்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த பரிந்துரைகள் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

★★★

கடவுச்சீட்டு மற்றும் அரசாங்கத்திற்கு தேவையான இரகசிய ஆவணங்கள் தற்போது வெளிநாட்டு அச்சக நிறுவனங்களில் அச்சிடப்படுவதனால் நாட்டிலிருந்து வெளியே செல்லும் அந்நிய செலாவணியை தக்கவைத்துக் கொள்ளக்கூடிய வகையில் இவ்வாறானவற்றை அரசாங்க அச்சக திணைக்களத்தில் அச்சிடுவதற்கு தேவையான இயந்திரங்களை கொள்வனவு செய்வது தொடர்பில் வெகுசன ஊடக அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

★★★

அத்தனகலை மற்றும் வரக்காப்பொல பிரதேச செயலாளர் பிரிவுகள் இரண்டிலும் உள்ள 'பெதியாகந்த வத்த' என்ற காணியில் 194 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த தொழிற் பேட்டையை, பசுமை தொழிற் பேட்டை என்ற ரீதியில் ஸ்தாபிப்பதற்காக கைத்தொழில்துறை அமைச்சர் மற்றும் காணி அமைச்சர் ஆகியோர் சமர்ப்பித்த ஒன்றிணைந்த பரிந்துரையை கொள்கை ரீதியில் அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

★★★

தென்னோலை வாடுதல் மற்றும் அழுகிப் போகும் நோய் பரவுவதை முழுமையாக கட்டுப்படுத்துவதுடன் இதற்கு அமைவாக அந்த வேலைத்திட்டத்தை 2021 – 2023 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் நடைமுறைப்படுத்துவதற்காக பெருந்தோட்டத்துறை அமைச்சினால் சமரப்பிக்கப்பட்ட பரிந்துரை அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

★★★

சாட்சிய கட்டளைச் சட்டத்தில் சில சொற்கள் மற்றும் பயன்பாடுகள் (Applications) முதலானவை தற்பொழுது பயன்படுத்தப்படுவதில்லை என்பதினால் அவற்றிற்கு பதிலாக புதிய சொற்கள் மற்றும் (Applications) பயன்படுத்தி இந்த கட்டளைச் சட்டத்தில் திருத்தத்தை மேற்கொள்வதற்காக 2016 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 05 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

★★★

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தை ஆரம்பிப்பதற்காக பெரா சிகிச்சை கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டு நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்து ஒப்படைக்கும் அடிப்படையில் தேசிய போட்டித் தன்மையான கேள்வி மனு கோரப்பட்டுள்ளது. அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியற் பெறுகைக்குழுவின் சிபாரிசுக்கமைய ஒப்பந்தத்தை வழங்குவதற்காக கல்வி அமைச்சரினால் சமர்ப்பித்த ஆவணத்திற்கு அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

★★★

பெரும்போகத்திற்கு அக்டோபர் மாத இறுதியில் தேவையான இரசாயன உரத்தை கொள்வனவு செய்வதற்காக சர்வதேச பகிரங்க போட்டித் தன்மையுடனான விலை மனுக்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கு அமைவாக 60,000 மெற்றிக் தொன் யூரியாவை (கிரனி யூலர்) அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியற் பெறுகைக்குழுவின் சிபாரிசுக்கமைய 180 நாள் 04

# யாழ். காரைநகர் படகு கட்டும் தொழிற்சாலையை மீண்டும் செயற்படுத்த நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் அதிகாரிகளுக்கு பணிப்பு



காரைநகர் படகு கட்டும் தொழிற்சாலையை உடனடியாக செயற்படுத்துவது தொடர்பில் ஆராயுமாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பணித்துள்ளார்.

அத்துடன், சீனோர் நிறுவனத்தினூடாக பயணிகள் போக்குவரத்து படகுகளை உருவாக்கி அவற்றை கொழும்பில் பயணிகளில் போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ள நிலையில் இவ் வேலைத்திட்டம் தொடர்பிலும் ஆராயுமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்கு தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சின் செயற்றிட்ட ஆய்வு மற்றும் மீளாய்வுக் கூட்டம் நேற்று மாளிகாவத்தையில் அமைந்துள்ள அமைச்சு மாநாட்டு மண்பத்தில் நடைபெற்ற நிலையிலேயே சீனோர் அதிகாரிகளிடம் அமைச்சர் இவ்விடயங்களை தெரிவித்துள்ளார்.

சீனோர் நிறுவனத்தின் படகு கட்டும் செயற்பாடுகள் கடந்த காலத்தில் வினைத் திறனுடன் மேற்கொள்ளப்படாமையினால் அவற்றின் நடவடிக்கைகள் பாதிக்கப்ட்டுள்ளதுடன் சீனோர் நிறுவனம் பற்றிய நன்மதிப்பும் பாதிக்கப்பட்டுள்ளாக சுட்டிக் காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இழந்த நன்மதிப்பை மீண்டும் ஏற்படுத்திக் கொள்வதற்கு, பயணிகள் படகுகளை உருவாக்கி கொழும்பு நகரில் பயணிகள் போக்குவரத்திற்கு பயன்படுத்தும் ஜனாதிபதியின் திட்டத்தை சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

காரைநகரில் அமைக்கப்பட்டுள்ள சிறிய ரக படகுகளை உருவாக்கும் உட்கட்டுமானங்களைக் கொண்ட தொழிற்சாலையை உடனடியாக செயற்படுத்துவதன் மூலம் சிறிய ரக படகுகளை உருவாக்க முடியுமெனவும் தெவித்தார். 04

## பிரபல எழுத்தாளர் முகில்வண்ணன் காலமானார்



**காரைதீவு குறூப் நிருபர்**

நாடறிந்த எழுத்தாளர் 'முகில்வண்ணன்' என அழைக்கப்படும் வேலுப்பிள்ளை சண்முகநாதன் தனது 78ஆவது வயதில் நேற்று காலமானார்.

கல்முனை பாண்டிருப்பைச் சேர்ந்த முகில்வண்ணன் சிறுகதை, கவிதை, நவீனம், கட்டுரை, நாவல் என இலக்கியப்பரப்பில் 20 நூல்களை எழுதி வெளியிட்டவராவார்.

எழுத்துலகில் 50ஆண்டுகள் எழுதி பொன்விழாக்கண்ட எழுத்தாளன் எனப்பெயரெடுத்தவர். 04

## சர்வதேச நாடுகளில் பட்டம் பெற்றோருக்கும் அரச தொழில்

### அரசின் முடிவை அறிவித்தார் அரச நிர்வாக செயலாளர்

சர்வதேச நாடுகளில் பட்டம் பெற்ற மாணவர்களை அரச சேவையில் இணைத்துக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் நாயகம் எப்.ஜே.ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய அவர்களை அரச சேவையில் உள்ளீர்க்க தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அந்தவகையில், சர்வதேச கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு இந்த நாட்டில் தொழிலைப் பெற்றுக்கொள்ள முடியுமென அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இப் பட்டதாரிகளிடமிருந்து 4,100 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். இந்நிலையில் எதிர்காலத்தில் 04

## அதிகாரப் பகிர்வு பற்றி பேசினால் பிரிவினைவாதியாகப் பார்க்கும் நிலை

### M.H.M.அஷ்ரப் ஞாபகார்த்த உரையில் ஹக்கீம் கவலை



அதிகாரப் பகிர்வு என்று பேசுகின்ற ஒவ்வொருவரையும் பிரிவினைவாதியாகப் பார்க்கும் நிலை காணப்படுவதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவர் மறைந்த எம்.எச்.எம்.அஷ்ரபின் 20ஆவது நினைவு நாள் நிகழ்வு மூதூரில் நடைபெற்றது. இங்கு உரையாற்றிய கட்சித் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் மேலும் கூறியதாவது,

2000ஆம் ஆண்டு சந்திரிக்கா பண்டாரநாயக்க இரண்டாவது முறையாக ஜனாதிபதியாக வெற்றிபெற்ற பின்னணியில், அவருடைய புதிய அரசியல் யாப்புக்கான பிரேரணை மும்மொழியப்பட்ட போது மறைந்த எமது தலைவர் அந்த புதிய அரசியல் யாப்பை அறிமுகப்படுத்தி, பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்தினார்.

"ஒரு சமூகத்தின் தலைவிதியை அந்த சமூகமே மாற்ற முன்வராத வரை இறைவன் ஒருபோதும் மாற்றமாட்டான்" என்ற பொருள்படும் திருவசனங்களோடு அந்த உரை தொடர்கிறது. நாங்களும் இன்று அவ்வாறானதொரு கட்டத்தில் தான் வந்து நிற்கின்றோம்.

அண்மைக்கால அரசியல் யாப்பு திருத்தங்களின் போது 17ஆவது மற்றும் 19ஆவது யாப்புத் திருத்தங்களின் உருவாக்கத்தில் நாங்களும் பங்காளிகளாக இருந்தோம். இரண்டு யாப்புக்களும் நல்லாட்சிக்கான பல அம்சங்களை உள்ளடக்கியதாக இருந்தன. 18ஆவது மற்றும் இப்போது 04

## சரிகம இசைக்குழுவின் இசைத்தென்றல் நிகழ்வு

இலங்கையின் முன்னணி இசைக்குழுவான கே. கருணாவின் 'சரிகம' இசைக்குழுவினரின் அதிரடி இசையில் 'இசைத் தென்றல்' நிகழ்வு எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆனந்த சமரக்கோன் கலையரங்கத்தில் இடம்பெறவுள்ளது.

பஸ்லி ரூமி கல்வி நிலைய தலைவர் பஸ்லி ரூமி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நீதியமைச்சர் அலி சப்ரி பிரதம அதிதியாகவும் கௌரவ அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீலும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர் அறிவிப்பாளர் அபூ உபைதா மௌஜூத் தினகரனுக்குத் தெரிவித்தார்.

கல்வியியல் கல்லூரிக்கு ஆட்சேர்ப்பு

# விண்ணப்பங்களை அனுப்புமாறு மாணவர்களிடம் வேண்டுகோள்

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் தேசிய டிப்ளோமா பாட நெறியை கற்பதற்கான ஆட்சேர்க்கும் பொருட்டு தேவையான கல்வித் தகைமைகளையும் தகவு திறன்களையும் உடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 2020.09.04 ஆம் திகதி வர்த்தமானிப் பத்திரிகை மூலமாக கோரப்பட்டுள்ளன.

கல்வியியற் கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்க போதிய தகைமைகளும் தகவுதிறன்களும் இருந்தும் பொருத்தமாக விண்ணப்பிக்காமையால் கடந்த காலங்களில் சில மாணவர்கள் கல்விக் கல்லூரிகளுக்கான அனுமதி வாய்ப்பை இழந்துள்ளனர். ஆகவே மேற்படி விடயந் தொடர்பாக மேற்குறிப்பிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை முற்றாக வாசித்து பொருத்தமான வழிகாட்டலுடன் விண்ணப்பிக்குமாறு விண்ணப்பதாரிகள் வேண்டப்படுகின்றனர்.

2018 ஆம் ஆண்டில் க.பொ.த (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு மாத்திரமே இது செல்லுபடியாகும்.

இம்முறை, விண்ணப்பங்கள் ONLINE ஊடாக அனுப்பப்பட வேண்டுமென கோரப்பட்டுள்ளது. ஏனெனில், விண்ணப்பதாரியொருவர் ONLINE ஊடாக ஒருமுறை விண்ணப்பித்த பின் மீண்டும் விண்ணப்பிக்க முடியாது. மேலும் விண்ணபதாரிகள் பின்வரும் விடயங்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

★2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த.(உயர்தர) பரீட்சையில் பிரதான மூன்று பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

★ விண்ணப்பங்கள் யாவும் 2020.09.25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக அனுப்பப்பட வேண்டும்.

★விண்ணப்பிப்பதற்கான வழிகாட்டல் படிமுறை

www.moe.gov.lk STUDENTS' TAB Online Admission Ncoe Admission2020

★விண்ணப்பதாரர் 2020.01.01 ஆம் திகதி 25 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

★விண்ணப்பதாரர்கள் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தமிழ்மொழி மற்றும் கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் 04

## கொரோனா தொற்றையடுத்து ஜித்தா உதவித் தூதுவர் அலுவலகம் பூட்டு

சவூதி அரேபியாவின் ஜித்தா நகரிலுள்ள இலங்கை உதவித் தூதர் அலுவலகத்தின் ஊழியர்கள் சிலர் கொரோனா தொற்றுக்கு ஆளாகியுள்ளதன் காரணமாக அந்த அலுவலகம் 14 நாட்களுக்கு மூடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதியே தூதரகம் மீண்டும் திறக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. நோய்த்தொற்றினால் பீடிக்கப்பட்ட அலுவலக ஊழியர் அங்கு கடந்த 25 வருடங்களாக வேலைசெய்து வரும் மொழி பெயர்ப்பாளர் என்று தெரிய வருகிறது.

அதேநேரம் மேற்படி அலுவலகத்திலிருந்து கடந்தவாரம் விலகிச் சென்ற ஒருவர் இலங்கைக்கு சென்றபோது 04

## உலகளவில் 03 கோடி...

கொரோனா பாதிப்பிலிருந்து இதுவரை 2,17,81,915 (2 கோடி) பேர் குணமடைந்துள்ளனர். வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 9 இலட்சத்து 44 ஆயிரத்து 680 பேர் உயிரிழந்துள்ளனர்.

வைரஸ் பரவியவர்களில் 72 இலட்சத்து 98 ஆயிரத்து 502 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 61 ஆயிரத்து 204 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதென உலக் சுகாதார அமைப்பின் தரவுகள் தெரிவிக்கின்றன.

## அத்தியாவசிய பொருட்களின்...

உரிய நடவடிக்கை எடுக்குமென அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டின்போது ஊடகவியலாளர்கள் ஒருவர் அது தொடர்பில் கேள்வி எழுப்பினார்.

அவர் தம் கேள்வியின் போது,

வாழ்க்கைச் செலவு வெகுவாக அதிகரித்துச் செல்லும் நிலையில் தேங்காய் ஒன்று 100 ரூபாவாகவும் பெரிய வெங்காயம் 160 ரூபாவாகவும் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றது.

இவ்வாறு அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை வெகுவாக அதிகரித்து செல்கின்றமை மக்களுக்கு பெரும் வாழ்க்கை சுமையாகியுள்ளது.

அரசாங்கத்தின் வாழ்க்கைச் செலவு தொடர்பான குழு அது தொடர்பில் ஏதேனும் தீர்மானங்களை மேற்கொண்டுள்ளதாஎனஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த அமைச்சர், அது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.அத்துடன் தேசிய உற்பத்திகளை அதிகரிக்கும் நோக்குடன் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## பகிரங்க கொலை அச்சுறுத்தல்...

அதனையடுத்து 'பொடி லெசி'யை சிறையில் வைத்து விசாரணை செய்ய அனுமதிக்குமாறு காலி சிரேஷ்ட மாஜிஸ்திரேட்டிடம் குற்றச்செயல்கள் விசாரணை திணைக்களம் விண்ணப்பமொன்றை சமர்ப்பித்திருந்தது. அத்துடன் எதிர்வரும் செப். 25 ஆம் திகதி சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த அனுமதிக்குமாறும் கேட்டிருந்தது. சந்தேக நபர் பலத்த பொலிஸ் மற்றும் பொலிஸ் விசேடஅதிரடி பிரிவு மூலம் பாதுகாப்புடன நீதிமன்றத்துக்கு அழைத்துவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு சர்வதேச...

நடைபெறவுள்ளது. இன்று (18) தொடக்கம் எதிர்வரும் 27 ஆம் திகதி வரையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டப வளவில் இந்த புத்தக கண்காட்சி நடைபெறவுள்ளது.

## ஜித்தா உதவித் தூதுவர்... (3ஆம் பக்க தொடர்)

அவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டு அவர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## அமைச்சரவை தீர்மானங்கள்... (3ஆம் பக்க தொடர்)

கடன் கால எல்லைப்பகுதிக்கு உட்பட்டதாக கொள்வனவு செய்வதற்காக விவசாய அமைச்சர் சமர்ப்பித்த ஆவணத்திற்கு அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

★★★

அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட விஷேட நிலையியற் பெறுகைக்குழுவின் சிபாரிசுக்கமைய 2020.10.01 தொடக்கம் 2021.05.31 ஆம் திகதி வரையிலான எட்டு மாத காலத்திற்காக 8,400,000+/ 5% மர்பன் மசகு எண்ணெய் பீப்பாய்களை கொள்வனவு செய்யும் நீண்ட கால ஒப்பந்தம் சிங்கப்பூரில் உள்ள *M/s Emirates National Oil Company* ( *ENOC*) என்ற நிறுவனத்திடம் வழங்குவதற்காக எரிசக்தி அமைச்சர் சமர்ப்பித்த பரிந்துரைக்கு அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (ஸ)

## கொழும்பு பங்குச் சந்தை... (3ஆம் பக்க தொடர்)

வாங்கல்களுக்கு தடையாக விளங்கிய தொலைதூரம் என்ற விடயம் இல்லாது போகும். டிஜிட்டல் மயப்படுத்தும் வேலைத்திட்டத்துடன் பெருந்திரளான தகவல்களை உள்ளடக்கி கொழும்பு பங்கு பரிவர்த்தனை, மத்திய வைப்பு சேவைகள் அமைப்பு ஆகியவற்றின் இணையத்தளம் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது. அதன் மூலம் முதலீடு, கல்வி, நிதி எழுத்தறிவு என்பவற்றை இலக்காக கொண்டு இலங்கை பத்திரங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு அறிமுகப்படுத்தும் யூ டியூப் (*You Tube*) சேனலும் வெளியிடப்பட்டது.

## விண்ணப்பங்களை... (3ஆம் பக்க தொடர்)

அவற்றுள் யாதேனும் மூன்று (03) பாடங்களில் திறமை சித்திபெற்றிருந்தல் வேண்டும்.

★மேற்குறிப்பிட்ட தகைமை இரண்டு தடவைகளில் பூர்த்தி செய்யப்பட்டிருப்பின் அவற்றுள் முதல் அமர்வில் தமிழ்மொழி உள்ளிட்டதாக ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் அவற்றுள் யாதேனும் மூன்று (03) பாடங்களில் திறமை சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

★ ஒரு விண்ணப்பதாரி ஆகக்கூடியது மூன்று பாட நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியில் , ஆரம்பக்கல்வி, முதலாம் மொழி தமிழ், கணிதம், விஞ்ஞானம், நடனம் (பரதம்) , சங்கீதம் (கர்நாடகம்), சித்திரம் மற்றும் சமூக விஞ்ஞானம் ஆகிய பாடநெறிகள் உள்ளன. கல்லூரிக்கு விண்ணப்பிக்கும் விண்ணபதாரிகள், இந்திய வம்சாவளி தமிழர்களாக இருத்தல் வேண்டும்.

அவர்கள் இலங்கையின் எந்தவொரு மாவட்டத்தையும் வசிப்பிடமாக கொண்டிருக்கலாம். விண்ணப்பதாரியொருவர் தான் இந்திய வம்சாவளி தமிழர் என்பதை பொருத்தமான ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். மேலும், விண்ணப்பதாரர் குறித்த விண்ணப்படிவத்தில் உள்ள "ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பிக்கின்றீரா"? என்ற வினாவுக்கு 'ஆம்' எனக்குறிப்பிடல் வேண்டும். அத்துடன் தோட்ட தொழிலாளியின் பிள்ளை எனின் அது தொடர்பான வினாவுக்கும் 'ஆம்' என குறிப்பிட வேண்டும்.

## சர்வதேச நாடுகளில் பட்டம்... (3ஆம் பக்க தொடர்)

நேர்முகத் தேர்வு வைத்து அவர்கள் பின்தங்கிய பகுதிகளில் ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட கற்பித்தல் பணிகளுக்காக உள்ளீர்க்கப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அதிகாரப் பகிர்வு பற்றி... (3ஆம் பக்க தொடர்)

உருவாக்கப்பட்ட 20ஆவது யாப்பு திருத்தங்களிலும் எவ்வித பங்கும் எங்களுக்கு இல்லை. இந்நாட்டு சிறுபான்மை சமூகங்களின் மீது இன்று அடிக்கடி பிரிவினைவாதம், தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதம் பற்றி மாறி மாறி எடுத்த எடுப்பிலே குற்றச்சாட்டுக்கள் தாராளமாக சுமத்தப்படுகின்ற காலகட்டமாகும். எவ்வளவு தான் மிதவாதப் போக்கை கடைப்பிடித்தாலும் கூட, சமூகத்திற்கான அதிகாரப் பகிர்வு என்று பேசுகின்ற ஒவ்வொருவரையும் பிரிவினைவாதியாகப் பார்ப்பது மட்டுமல்லாமல், எப்படியாவது ஒரு விதத்தில் வாய்ப்பு கிடைத்தால் தீவிரவாதிகளாக பட்டம் சூட்டுகின்ற சூழலிலேயே நாங்கள் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றோம்.

எதற்கெடுத்தாலும் சிறுபான்மையினரின் இனவாதம், பயங்கரவாதம் என்ற பாங்கில் அடக்குமுறைப் போக்கில் விடயங்களை கையாளப் பார்க்கின்றார்கள். இதற்கு வக்காளத்து வாங்கும் சிலரும் இருக்கின்றார்கள்.

## முகில்வண்ணன் காலமானார்... (3ஆம் பக்க தொடர்)

ஆனந்தக்கண்ணீர், அவள் ஒரு தமிழ்ப் பெண், இனியும் நான் இராமன்தான், செல்லக்கிளி, முருகனருள் பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதை அம்மனாலயம் பாவைநோன்பு, பளிங்குமாளிகை, பொங்கல் கவிதைகள், சிங்கராஜா, ஒரு தேடல் கட்டுரைக் களஞ்சியம், நீறுபூத்த நெருப்பு , எழுத்துலகில் 50ஆண்டுகள் போன்ற காலத்தைவென்ற பல இலக்கியப்படைப்புகளை வெளியிட்டவராவார்.

அன்று இப்பிரதேசத்தில் கல்முனை எலக்ரோன் என பிரபலமான பெயரோடு இருந்தவர். தொழிலில் பொறியியலாளராவார். பஞ்சாயக்குழு உபதலைவராகவிருந்தவர்.

1966களிலிருந்து எழுதத் தொடங்கியர். அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தனாதிகாரியாகவிருந்தவர். இலக்கியப்பரப்பில் கலாபூசணம் வித்தகர் எனப் பல விருதுகளுக்கு சொந்தக்காரன்.

இறுதியாத்திரை இன்று(18)பி.பகல் 4 மணியளவில் பாண்டிருப்பு இந்துமயானத்தில் நடைபெறுமென குடும்பத்தினர் தெரிவித்தனர்.

## ஜனாதிபதி, பிரதமரின் பெயர்களை...

மாணவர்களை இணைத்துக் கொள்ளுமாறு அழுத்தங்களை பிரயோகிக்கும் வகையில் பாடசாலை அதிபர்களுக்கு பலர் கடிதங்களை அனுப்பி வைக்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் அரச அதிகாரிகளும் கூட இவ்வாறான கடிதங்களை அனுப்பி வைக்கப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

அதிபர்கள் தமது பாடசாலைக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் போது அவ்வாறான எந்தவொரு கடிதத்தையும் அடிப்படையாக எடுக்கக்கூடாது. உரிய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளுக்கமைவாக மாத்திரமே மாணவர்களை பாடசாலைகளுக்கு இணைத்துக்கொள்ள வேண்டும்.

இந்த ஒழுங்கு விதிகளை மீறுகின்ற அதிபர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஜனாதிபதியின் செயலாளர் அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார்.

## யாழ். பல்கலைக்கழகத்தில்...

செய்தியாளர் மாநாடு நேற்று தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ஊடகவியலாளர் தமது கேள்வியின் போது, அரசாங்கம் தேர்தல் காலங்களில் நாட்டின் பல்கலைக் கழகங்களில் பகிடிவதையை முற்றாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மக்களுக்கு தெரிவித்திருந்தது. எனினும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பீடத்தில் புதிய மாணவர்கள் மத்தியில் பகிடிவதை இடம்பெற்றுள்ளதாக கடந்த சில தினங்களாக செய்திகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. அது தொடர்பில் அரசாங்கம் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதென கேள்வி எழுப்பினர்.

கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, அது தொடர்பில் அரசாங்கம் தீவிரமான கவனம் செலுத்தி வருகின்றது புலனாய்வுப் பிரிவினர் அது தொடர்பில் செயல்பட்டு வருகின்றனர். சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.(ஸ)

## டயமன்ட் கப்டனுக்கு...

பெற்றுக்கொள்ளுமாறு சட்ட மாஅதிபர் தப்புள டி.சி. லிவேரா குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளார். இது தொடர்பான தகவலை சட்ட மாஅதிபரின் இணைப்பாளரான சட்டத்தரணி நிஷாரா ஜயரட்ண தெரிவித்தார்.

2008 ஆம் ஆண்டு இலக்கம் 35 இன் கீழான சமுத்திர மாசடைவதை தடுக்கும் சட்டத்தின் 25, 26, 38 மற்றும் 53 போன்ற சரத்துக்களின் கீழ் தண்டனை பெறக்கூடிய குற்றங்கள் தொடர்பில் போதுமான விடயங்கள் குறித்து நியாயமான சந்தேகம் முன்னிலைப்படுத்தப்பட்டிருப்பது சட்ட மாஅதிபரின் நிலைப்பாடாகும். இது குறித்து சட்ட மாஅதிபர் ஆலோசனை வழங்கியுள்ளமை குறித்து நீதிமன்றத்திற்கு அறிக்கை இடுமாறும் அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சந்தேக நபர்கள் 13 பேர்...

குற்றப்புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. சந்தேக நபர்கள் பல்வேறு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும், மாவனல்லையில் புத்தர் சிலைகளை இடிப்பதில் தொடர்புடைய சந்தேக நபர் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாகவும் குற்றப்புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்திற்கு அறிவித்தது.

பதில் மாஜிஸ்திரேட் ஷலானி பெரேரா முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு வந்த போது குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் இதனைத் தெரிவித்துள்ளனர்.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள பஸ்ருல் ரஹுமான் மற்றும் இரண்டு பேரையும் இந்த மாதம் 30 ஆம் திகதி வரை காவலில் வைக்குமாறும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

## விசாரணைக்கு வருமாறு...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு இந்த அழைப்பை விடுத்திருக்கின்றது. கொள்ளைச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பின் உறுப்பினர் ஒருவர் தடுப்புக் காவலிலிருந்து தப்பிச் செல்லமுற்பட்ட போது உயிரிழந்திருந்தார். இச் சம்பவம் இயற்கையான மரணமென யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. எனினும் நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் முன்னாள் அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் தலையீட்டின் பிரகாரம் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

## மாகாண சபை முறைமைகளுக்கு...

மாகாண சபை செயலிழந்ததனால் கிழக்கு மாகாண மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அதிகாரிகளின் அலட்சியப் போக்குகள் குறித்து, அவர் பல்வேறு உதாரணங்களுடன் கனேடிய உயர்ஸ்தானிகரிடம் எடுத்துரைத்தார்.

கிழக்கு மாகாணத்தில் கல்வி, சுகாதார உட்கட்டமைப்பு வசதிகளில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. மாகாண சபை நிர்வாகம் இல்லாததால் அதிகாரிகள், மக்களை அலட்சியப்படுத்துகின்றனர். பொடுபோக்குத்தனமாக செயற்படுகின்றனர். மக்களின் தேவைகளை இனங்கண்டு செய்வதற்கு பின்னடிக்கின்றனர். அதுமாத்திரமன்றி மாகாண சபை இயங்காத காரணத்தினால் ஆளணிப் பற்றாக்குறை பல நிறுவனங்களில் ஏற்பட்டு இருக்கின்றது.

கனேடியப் பல்கலைக்கழகத்தின் இணைப்பு ஒன்றை மட்டக்களப்பில் அமைத்துத் தர வேண்டுமென உயர்ஸ்தானிகரிடம் கோரிக்கை விடுத்த பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நஸீர் அகமட், அதன்மூலம் கிழக்கிலிருந்து கனடாவுக்குச் சென்று உயர்கல்வி கற்க ஆர்வம் உள்ளவர்கள் பயனடைய வாய்ப்பு உள்ளது என்றார். கொரோனாவின் தாக்கத்தினால் கனடாவுக்கு செல்ல முடியாமல் இருக்கும் இந்த மாணவர்களுக்கு இந்த முயற்சி பெரிதும் உதவுமெனவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

## 20 ஆவது திருத்தம்...

சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், 20ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு எவரும் அடிப்பணியாது போனால் அவரை தலையை சுற்றியெறியும் மோசமான அதிகாரங்கள் இத்திருத்தத்திடன் ஊடாக ஜனாதிபதிக்கு கிடைக்கும். உத்தேச திருத்தத்தின் மூலம் நாட்டின் 21 மில்லியன் பிரஜைகளின் உரிமைகளும் ஒரு நபருக்கு பெற்றுக் கொடுக்கப்படுகிறது. கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாட்டின் பொருளாதாரம் வீச்சியடைந்துள்ள சந்தர்ப்பத்தில் 200 கைத்தொழில்கள் மூடப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் தெற்காசியாவின் உயர்ந்த வாழ்க்கைச் செலவை கொண்ட நாடாக இலங்கை மாறியுள்ள சந்தர்ப்பத்தில் 20ஆவது திருத்தச்சட்டத்தை ஏன் அவசரமாக நிறைவேற்ற முற்படுகின்றனர். தேர்தலுக்கு முன்னர் 20ஆவது திருத்தச்சட்டத்தின் வரைபை மக்களிடம் கையளித்திருந்தால் 69 இலட்சம் மக்கள் வாக்களிப்பது குறித்து சிந்தித்திருப்பார்கள் என்றார்.

## 2021 நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம்...

அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

அதற்கிணங்க வரவு செலவுத்திட்ட தயாரிப்பில் அரசாங்கத்தின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை திட்டங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற போதுஅது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல,

அரசாங்கத்தின் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கை பிரகடனம் மூலம் எதிர்பார்க்கப்படும் பிரதிபலனை பெற்றுக்கொள்ளும் வகையில் தேவையான வளங்களை ஒதுக்குவது உள்ளிட்ட முக்கிய விடயங்கள் அதில் உள்ளடங்குகின்றன.

அதற்கிணங்க அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கு விடயங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் அதற்காக வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் இந்நோக்கத்தை நிறைவேற்றுவது தொடர்பில் தேவையான வளங்கள் ஒதுக்கப்படும்.

நாட்டில் அனைவருக்கும் குடிநீரைப் பெற்றுக் கொடுத்தல், முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் ஒரு இலட்சம் கிலோ மீட்டர் வீதிகளை புனரமைத்தல் வேலைத் திட்டத்தை நடைமுறைப் படுத்தல், நீர் வழங்கல் மற்றும் நீர்ப்பாசனத்துறை தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளது.

அதேவேளை அரசாங்கத்தின் வருமானம் 2021ஆம் வருடத்தில் தேசிய உற்பத்தியில் 10. 2 வீதமாக இருக்கும் அதேவேளை அதற்கிணங்க செலவுகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பில் பின்பற்ற வேண்டிய விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளன.

வர்த்தக நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல் அரச முதலீடுகள் தொடர்பான வேலைத் திட்டங்களுக்கு வளங்களை பெற்றுக்கொடுத்தல், அரசாங்கத்தின் செயற்பாடுகளை டிஜிட்டல் மயமாக்குவது தொடர்பில் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்,

குறைந்த செலவில் அதிக பலன்களை பெற்றுக் கொள்ளும் வகையில் தற்போது நிலவும் முறைகளில் மீளாய்வு செய்தல். அவற்றை முறைப்படுத்துதல்

ஆகியவை உள்ளிட்ட தாக மேற்படி ஸ்வீட் சட்னி நோக்கு கொள்கைக்கு இணங்க 2021ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டம் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். அது தொடர்பில் நிதி அமைச்சரான பிரதமர் சமர்ப்பித்த ஆலோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி உள்ளதாகவும் அவர் மேலும்தெரிவித்தார். (ஸ)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு...

தெரிவித்ததாக ஹரீன் பெர்னாண்டோ ஆணைக்குழுவில் சாட்சியமளித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஹரீன் பெர்னாண்டோ முதன்முறையாக சாட்சியளித்தார்.

குறுக்கு விசாரணையின் போது பதிலளித்த அவர், முதலாவது தாக்குதல் நடைபெற்ற போது எனது சகோதரி தொலைபேசியில் கதைத்தார்.நாம் ஆலயத்திற்கு செல்ல இருந்தோம். கிங்ஸ்பெரி ஹோட்டலுக்கும் செல்ல இருந்தோம். தந்தை இரவு தொலைபேசியில் அழைத்து அங்கு செல்ல வேண்டாம் என்று கூறியதாக என்னிடம் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் போது நான் பதுளையில் இருந்தேன்.பிரதமருடன் தொலைபேசியில் உரையாடியதையடுத்து ஹெலிகொப்டரில் கொழும்பு வந்தேன். அப்பொழுது தந்தை தனியார் ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சை பிரிவில் இருந்தார். தாக்குதல் குறித்து முன்கூட்டி எவ்வாறு அறிந்தீர்கள் என வினவினேன். உன்னை விட பல விடயங்கள் எனக்கு தெரியும் என்று பதிலளித்தார். சி.ஐ.டியினர் முன்கூட்டி தனது தந்தையை அறிவூட்டியிருக்கலாம் என்று சந்தேகிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முதல் நாள் சிஐ.டி அதிகாரி நந்தலால், ஹரீன் பெர்னாண்டோவின் தந்தையுடன் தொலைபேசியில் உரையாடியது தொலைபேசி தரவுகள் மூலம் தெரிய வந்துள்ளதாக அரச தரப்பு சட்டத்தரணி ஆணைக்குழுவில் அறிவித்தார்.

தொடர்ந்து சாட்சியளித்த ஹரீன் பெர்னாண்டோ, ஆலயங்களுக்கு செல்ல வேண்டாமென தந்தை ஒரு போதும் எனக்கு கூறவில்லை.சகோதரியிடம் கூறியது பற்றி ஊடக மாநாட்டில் கூறியிருந்தேன். தன்னைப் பற்றி கார்தினல் மெல்கம் ரஞ்சித் கூறிய விடயங்கள் மனதை நோகடிக்கும் வகையில் இருந்தாகவும் தாக்குதலுக்கு முன்னர் அவர் இது பற்றி அறிந்திருக்கலாம் என சந்தேகிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். அதனால் தான் அவர் அத் தினத்தில் ஆராதனை நடத்தாமல் இருந்திருக்கலாம் என்றும் எனவே இது தொடர்பில் விசேட விசாரணை நடத்த வேண்டும் என்றும் அவர் கூறினார். ஹரீன் பெர்னாண்டோவின் உறவுக்கார மாணவர் ஒருவர் உயிர்த்த ஞாயிறு தினத்திற்கு முதல் நாள் நடந்த பயிற்சியில் கலந்து கொள்ளாதது பற்றியும் வினவப்பட்டது.

ஆவேசத்துடன் இங்கு அவர் சாட்சியமளித்ததையடுத்து அவருக்கு ஆணைக்குழு தலைவர் கடுமையாக எச்சரிக்கை செய்தார்.(பா)

## புதிய அரசியலமைப்பு குழுவிற்கு...

பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், புதிய அரசியலமைப்புக்கான நிபுணர் குழு விவகாரத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கள்ள மௌனம் காப்பதாக கூறியுள்ளமை தொடர்பில் விளக்கமளித்து செந்தில் தொண்டமான் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

அறிக்கையில் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளதாவது,

இ.தொ.கா. கள்ள மௌனம் காப்பதாக மனோ கணேசன் கூறியுள்ள கருத்து தவறான புரிதலாகும். இ.தொ.காவின் உப தலைவர் என்ற அடிப்படையில் அவருக்கும் அந்த செய்தியை வாசித்த மக்களுக்கும் தெளிவுப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளோம்.

மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை கொண்டுள்ள பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் இ.தொ.கா. இரண்டு எம்.பிக்களை கொண்டுள்ளதுடன், மலையக மக்களின் அனைத்துப் பிரச்சினைகள் குறித்தும் கவனம் செலுத்தி வருகிறது.

இ.தொ.காவின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ரமேஸ்வரன் ஆகியோர் பாராளுமன்றம் மற்றும் அரசாங்கத்தின் ஊடாக மலையக மக்களுக்குத் தேவையான அனைத்து பணிகள் குறித்தும் கவனம் செலுத்துவது மட்டுமன்றி மலையக மக்களின் உரிமைகளை பாதுகாப்பதிலும் அவதானமாகச் செயல்பட்டு வருகின்றனர்.

இ.தொ.காவின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் மறைவின் பின்னரும் இ.தொ.கா. கருத்து வேறுபாடுகளின்றி பிளவின்றி செயல்பட்டு வருகிறது. ஒரு தலைவர் இறந்த பின்னர் கட்சிகள் பிளவுபடுவதுதான் வழமையாகும். தலைவர் மறைந்த பின்னரும் இ.தொ.கா சக்திவாய்ந்த அமைப்பாக பிளவுபடாது உள்ளதுடன் கட்சியிலுள்ள அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டு வருகின்றோம்.

அரசியல் ரீதியாக சில முடிவுகள் வெளிப்படையாக எடுக்கும் சூழ்நிலை அமையும் என்பதுடன் சில முடிவுகளை காலம் சென்றே அமுல்படுத்த முடியும். கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணி அரசாங்கத்தை அனைத்து சந்தர்ப்பங்களிலும் காப்பாற்றிய பலமான அமைப்பாக இருந்தது. இரண்டு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களும் ஒரு இராஜாங்க அமைச்சரையும் வைத்திருந்தது. அரசாங்கத்தை காப்பாற்றிய அமைப்பாக இருந்தாலும் பல விடயங்களில் மலையக மக்களுக்குத் தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதில் சிக்கல் நிலைமைகள் இருந்ததை அவர்களும் அறிவர். நாமும் அறிவோம். அப்படியான சூழலில் இன்று மலையக மக்களின் ஆதரவின்றி தனி பெரும்பான்மையை பெற்றிருக்கும் பொதுஜன பெரமுன அரசாங்கத்துடன், அவதானமாகவும் மலையக மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய செயற்படும் ஓர் அமைப்பாகவும் இ.தொ.கா. பணியாற்றி வருகிறது.

## பிரதமர் மஹிந்த...

அவருக்குத் தெரிவித்தார். பிரதமர் மஹிந்தவிற்கு நன்றி தெரிவித்த நரேந்திர மோடி, பிரதமரின் குடும்பத்தில் புதிய வாரிசாக பிறந்துள்ள நாமல் ராஜபக்ஷவின் மகனுக்கும் தனது வாழ்த்தையும் மகிழ்வையும் தெரிவித்துள்ளார். இரு தலைவர்களும் பரஸ்பரம் நாட்டு நடப்பு மற்றும் கொரோனாவின் தற்போதைய நி லைவரம் குறித்தும் தமது உரையாடலில் பகிர்ந்து கொண்டனர்.

## அம்பன் புயலால் அழிவடைந்த...

காரணமாக யாழ்ப்பாணத்தில் கோப்பாய், ஊரெழு, அச்சுவேலி உட்பட பல்வேறு பிரதேசங்களிலும் இருந்த பப்பாசி மற்றும் வாழைத் தோட்டங்கள் சுமார் 500 ஏக்கர் வரையில் அழிவடைந்திருந்தன.

அப்போதைய கொறோனா அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் இப் பிரதேசங்களுக்கு நேரடியாக சென்று நிலமைகளை அவதானித்திருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஏற்பட்ட அழிவுகளுக்கு அரசாங்கத்தினால் நஷ்டஈடு வழங்குவதற்கு ஏற்பாடு செய்து தருவதாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உறுதியளித்ததுடன், அழிவுகள் தொடர்பான மதிப்பீட்டை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு அரசாங்க அதிபரை அறிவுறுத்தியிருந்ததுடன் அது தொடர்பாக அமைச்சரவையின் கவனத்திற்கும் கொண்டு வந்திருந்தார்.

இருப்பினும், பப்பாசி மற்றும் வாழை தோட்டங்கள் அழிவடைகின்ற போது நட்டஈடு வழங்குவதற்கான ஏற்பாடுகள் எவையும் விவசாய அமைச்சிடமோ அல்லது அனர்த்த முகாமைத்துவ அமைச்சிடமோ இல்லாத நிலையில் நஷ்டஈடு வழங்குவதில் நடைமுறை சிக்கல் ஏற்பட்டிருந்தது.

எனினும், இந்த விடயத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்த நிலையில், விசேட அமைச்சரவை பத்திரத்தின் ஊடாக குறித்த அழிவுகளுக்கு நஷ்டயீட்டினை வழங்குவதற்கு ஜனாதிபதி உறுதிளித்திருந்தார்.

இந்நிலையிலேயே இன்றைய அமைச்சரவை கூட்டத்தில் அம்பன் புயலினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் நஷ்டஈடு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் அழிவுகளுக்கு நஷ்டஈடு வழங்கும் விவசாய பயிர்களின் பட்டியலில் வாழை, பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம், உழுந்து, மரமுந்திரிகை போன்றவை இணைக்கப்பட்டுள்ளதாக நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் காட்டு யானை அட்டகாசம்

## உயிர் தப்பிய குடும்பம்; வீடு முற்றாக சேதம்





வவுனியா நிருபர்

வவுனியா ஓமந்தைப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு காட்டு யானை கிராமத்திற்குள் புகுந்து விவசாயின் வீட்டிற்குள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகளை சேதப்படுத்தியதுடன் பயன் தரும் மரங்களையும் அடித்து சேதப்படுத்தியுள்ளதாக வீட்டின் உரிமையாளரால் அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர் தெரிவித்ததாவது,...

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவிலுள்ள சங்கரத்திமோட்டை ஆறுமுகத்தான் புதுக்குளம் கிராமத்திற்குள் நேற்று முன்தினம் இரவு வேளையில் நாங்கள் தற்காலிக வீட்டின் அறையில் உறங்கிக் கொண்டிருந்தபோது வீட்டின் முன் பக்க சுவரை உடைத்துக்கொண்டு உட்புகுந்த யானை ஒன்று அங்கு அடுக்கிவைக்கப்பட்ட நெல் மூட்டைகளை எடுத்துச் சென்றுள்ளது. இதன்போது வீட்டில் நின்ற பயன்தரும் மரங்களையும் அடித்து நொருக்கிச் சென்றுவிட்டதாகவும் காட்டு யானைகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்து தருமாறும் வீட்டின் உரிமையாளர் சிவலிங்கம் சிவரூபன் ஐந்து பிள்ளைகளைக் கொண்ட குடும்பஸ்தர் தனது முறைப்பாட்டில் மேலும் தெரிவித்துள்ளார் .

ஆறுமுகத்தான்புதுக்குளத்திற்கு 18 கிலோ மீற்றர் நீளமான பகுதிக்கு யானை வேலி அமைத்துத்தருமாறு பல அதிகாரிகளிடம் தெரிவிக்கப்பட்டும் இன்று வரையிலும் எவ்வித மான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே பல்வேறு அச்சத்துடன் காட்டு யானைகளின் தாக்குதலுக்கு மத்தியில் வசித்து வருகின்றோம். பாராளுமன்ற உறுப்பினர்கள் இதனைத்தீர்த்து வைப்பதற்குரிய நடவடிக்கையை முன்னெடுக்குமாறும் அப்பகுதி மக்கள் கோருகின்றனர் .

# வடக்கு விவசாயிகளுக்கு இலங்கை வங்கியால் 1.1 பில்லியன் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது

கோப்பாய் நிருபர்

வடக்கு மாகாணத்தில் உள்ள விவசாயிகளுக்கு இலங்கை வங்கி ஊடாக 1.1 பில்லியன் ரூபாய்களை வட்டியுடன் மீள் செலுத்தும் கடன்களாக வழங்கினோம் என இலங்கை வங்கி அதிகாரிகள் தெரிவித்தனர் .

யாழ். மாவட்ட செயலகத்தில் (15) செவ்வாய்க்கிழமை விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தலைமையிலான கலந்துரையாடலின் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் விவசாய அமைப்புகள் அமைச்சரிடம் முன்வைத்த கோரிக்கையில் இலங்கை வங்கிகளில் இன்சூரன்ஸ் செய்யப்பட்ட பயிர்களுக்கான நஷ்டஈட்டை குறித்த வங்கிகள் தராததால் இலங்கை வங்கிகளில் பெற்ற விவசாய கடன்களை செலுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டதாக தெரிவித்தனர் .

இதற்கு பதிலளித்த இலங்கை வங்கி அதிகாரிகள்,..

தாம் அவ்வாறு இன்சூரன்ஸ் செய்யவில்லை எனக் கூறியதுடன் விவசாயிகள் தமது வங்கிகளில் பெற்ற கடன்களை மீளச் செலுத்த கால அவகாசம் வழங்கியும் செலுத்தவில்லை என கூறினார்கள்.

இதற்கு பதிலளித்த அமைச்சர்,...

தான் இலங்கை வங்கியின் தலைவருடன் கலந்துரையாடியதாகவும்

விவசாயிகள் பெற்ற பணத்திற்கு அறவிடும் வட்டி வீதத்தை கழித்து பெற்றுக்கொண்ட தொகையை கட்டுவதற்குரிய பொறிமுறையை ஏற்படுத்துவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ். மாவட்ட சின்ன வெங்காயச் செய்கையாளர்களுக்கு மானியம்

கோப்பாய் நிருபர்

யாழ். மாவட்டத்தில் சின்ன வெங்காயச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு மானியம் வழங்குவதற்குரிய ஏற்பாடுகளை வடக்கு மாகாண விவசாய அமைச்சு மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது

மத்திய அரசாங்கத்தினால் வடக்கு மாகாண விவசாய அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் சுமார் 300 மில்லியன் ரூபாவுக்கு அதிகமான தொகை மாகாண விவசாயத் திணைக்களத்துக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

இந் நிலையில் யாழ். மாவட்டத்தில் சின்னவெங்காய செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளை அடையாளங்கண்டு அவர்களுக்கான மானியத்தை வழங்குவதற்கு உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# கல்வியங்காடு பகுதியில் வாள்வெட்டு; படுகாயமடைந்தவர் வைத்தியசாலையில்

யாழ்.விசேட நிருபர்

வன்முறைக் கும்பலைச் சேர்ந்த விக்டர் சுந்தர் மீது மற்றொரு கும்பலால் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கால்கள் மற்றும் கைகளில் படுகாயமடைந்த விக்டர் சுந்தர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று காலை 7 மணியளவில் யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியில் இடம்பெற்றதாக பொலிசார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், நாயன்மார்க்கட்டு பகுதியைச் சேர்ந்த விக்டர் சுந்தர் பல்வேறு வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் நேற்று காலை கல்வியங்காடு பகுதியில் நின்ற போது, மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த மற்றொரு கும்பல், அவர் மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுவிட்டுத் தப்பித்துள்ளது. சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வடக்கு மாகாணத்தில் 3 ஆயிரத்து 902 பட்டதாரிகளில் 261 பேர் தமது கடமைகளை பொறுப்பேற்கவில்லை

கந்தர்மடம் நிருபர்

வடக்கு மாகாணத்தில் வழங்கப்பட்ட 3 ஆயிரத்து 902 பட்டதாரிகளிற்கான நியமனத்தில் 261 பேர் தமது கடமைகளை பொறுப்பேற்கவில்லை என மாவட்டச் செயலகங்கள் உறுதி செய்துள்ளது.

இதன் அடிப்படையில் கடந்த 2ஆம் திகதி முதல் அழைக்கப்பட்ட பட்டதாரிகள் 10ம் திகதி வரையில் கடமையினைப் பொறுப்பேற்பதனை உறுதி செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டது. 10ம் திகதி கடந்து விட்டபோதும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 80 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டபோதும் ஆயிரத்து 903 பேர் மட்டுமே கடமையினை பொறுப்பேற்றுள்ளனர். இதன் அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் 165 பேர் தமது கடமைகளை பொறுப்பேற்கவில்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது. இதேநேரம் முல்லைத்தீவு மாவட்டத்தில் 233 பட்டதாரிகளில் 216 பேரே கடமைகளை பொறுப்பேற்றுள்ளபோதிலும் 17 பேர் கடமையை பொறுப்பேற்கவில்லை. கிளிநொச்சி மாவட்டத்தில் 267 பட்டதாரிகளிற்கு நியமனம் வழங்கப்பட்ட நிலையில் 247 பேர் தமது கடமைகளை பொறுப்பேற்றுள்ளனர். இங்கே 20 பேர் பணியை பொறுப்பேற்கவில்லை. இதேபோன்று மன்னார் மாவட்டத்தில் 329 பட்டதாரிகளிற்கு நியமன அழைப்பு அனுப்பப்பட்டபோதிலும் 311 பட்டதாரிகளே கடமை ஏற்றுள்ள வகையில் 18 பேர் பணியேற்கவில்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தினைப் பொறுத்தமட்டில் அங்கே 383 பட்டதாரிகளிற்கு நியமனம் கிடைத்தபோதும் 342 பேர் மட்டுமே கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்ட போதிலும் 41 பட்டதாரிகள் கடமையை பொறுப்பேற்கவில்லை எனக் கட்டறியப்பட்டுள்ளது.

# மன்னார் மாவட்ட திருவள்ளுவர் விழா







மன்னார் குறூப் நிருபர்

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று காலை திருவள்ளுவர் விழா இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் விழா நடைபெற்றது.

நேற்று காலை 10 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் திருவள்ளுவர் சிலையை ஏந்தியவாறு பவனியும் இடம்பெற்றது.

முதலில் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் திருவள்ளுவரின் உருவச்சிலைக்கு மாலை அணிவித்தார்.

அதனைத் தொடர்ந்து திருவள்ளுவர் சிலையை ஏந்தியவாறு மாவட்டச் செயலகம் நோக்கி ஊர்வலம் இடம் பெற்றது.

இந் நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் அரசாங்க அதிபர்,மேலதிக அரசாங்க அதிபர், பிரதேசச் செயலாளர்கள், மாவட்டச் செயலக அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# தடை செய்யப்பட்ட மீன்பிடி தொழில்களை தடுப்பது தொடர்பில் கலந்துரையாடல்

மன்னார் குறூப் நிருபர்

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் 'தடை செய்யப்பட்ட மீன் பிடி முறைகளை தடுத்து நிலையான மீன் பிடி தொழிலை ஊக்குவிப்போம்' எனும் தொனிப்பொருளில் மீனவ சமூகம், பொறுப்பு மிக்க அதிகாரிகள் மற்றும் ஒத்துழைப்பாளர்களுக்கிடையிலான கலந்துரையாடல் நேற்று காலை மன்னார் பொது மண்டபத்தில் இடம்பெற்றது.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் பெனடிற் குரூஸ் தலைமையில் நேற்று காலை 9 மணியளவில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன் போது தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வடக்கு, கிழக்கு மாகாண இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன் கலந்து கொண்டிருந்தார். குறித்த கலந்துரையாடலில் நீரியல் வள திணைக்கள அதிகாரிகள் மற்றும் மீனவர்கள் தொடர்பாக செயற்பட்டு வரும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் ஊடாக விசேட தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டது. நாட்டில் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது தொடர்பாகவும் அவற்றினால் ஏற்படும் சமூக பொருளாதார ரீதியான பாதிப்புக்கள் மற்றும் விளைவுகள் தொடர்பாக மீனவ சமூகத்தை சேர்ந்த பிரதிநிதிகளுக்கு தெளிவூட்டப்பட்டது.

மேலும் தடை செய்யப்பட்ட மீன்பிடி தொடர்பாக மக்கள் சார்பான கருத்துக்கள் தொடர்பாகவும் அவர்கள் மத்தியிலான சந்தேகங்கள் தொடர்பாகவும் பொதுக் கலந்துரையாடல் மூலம் உரிய பதில் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அறநெறி ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கு ஈ.பி.டி.பி நடவடிக்கை



வவுனியா விசேட நிருபர்

வன்னி மாவட்டத்தில் சேவை அடிப்படையில் பணி புரிந்து வரும் அறநெறி ஆசிரியர்களிற்கான கொடுப்பனவு ஒன்றை வழங்குவதற்கு ஈ.பி.டி.பி யின் இளைஞரணி தலைவரும் பிரதேச சபை உறுப்பினருமான இராசையா விக்டர்ராஜ் மேற்கொண்ட முயற்சியின் ஊடாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் மற்றும் அறநெறி ஆசிரியர்களுக்கிடையில் விசேட சந்திப்பு இடம்பெற்றது.

இதன் போது அறநெறி ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டார்.

இதற்கான மேலதிக நடவடிக்கையாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு சென்று அமைச்சரவையில் சமர்ப்பித்து இவர்களுக்கான ஊதியம் வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உதவி மூலம் வட மாகாண அறநெறி ஆசிரியர்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதன் போது கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் தமிழ்த்திரு மாதவனும் கலந்து கொண்டார்.






வவுனியா ஸ்ரீ கந்தசாமி கோவில் தர்மகர்த்தா சபை, தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடத்திய, சிவநெறிப்புரவலர் சீ.ஏ.இராமசுவாமியின் 80 ஆவது வயது,அமுதவிழாவில் எடுக்கப்பட்ட படங்கள். வவுனியா ஸ்ரீ கந்தசாமி

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் புரட்டாதி மாதம் 02ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 முஹர்ரம் பிறை 29


### குறள் தரும் சிந்தனை



தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும்

*பிள்ளைகளைத் தம் செல்வம் என்று அறிந்தோர் கூறுவர். அப்பிள்ளைகள் உள்ளபடியே செல்வமாவது அவரவர் செய்யும் நற்செயல்களால் அமையும்.*

## மாணவரையும் இலக்கு வைக்கும் சமூக விரோத கும்பல்கள்!

கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, நாட்டில் போதைப் பொருள் பாவனையை ஒழிப்பதற்காக அரசாங்கம் மிகத் தீவிரமான நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கின்றது. சமூக மட்டத்தில் மாத்திரமன்றி, சிறைச்சாலைகளில் கைதிகள் மத்தியிலும் போதைப் பொருள் பாவனையை முற்றாக ஒழிப்பதற்கு தற்போது தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முன்னைய நல்லாட்சிக் காலத்தின் போது நாட்டிலுள்ள சிறைச்சாலைகளுக்குள் கைதிகள் மத்தியில் கூட போதைப் பொருள் பாவனை அதிகரித்துக் காணப்பட்டது. போதைப் பொருள் கடத்தல் மற்றும் குற்றங்களின் பேரில் சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்ற கைதிகளே, போதைப் பொருள் பாவனையாளர்களாக இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

அது மாத்திரமன்றி, அக்கைதிகள் சிறைக்குள் இருந்தவாறே சிறைக்கு வெளியே போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்பு கொண்டிருந்ததாக அக்காலத்தில் தகவல்கள் வெளிவந்தன. சிறைச்சாலைக்கு வெளியே குற்றச் செயல்களை வழிநடத்துகின்ற அளவுக்கு சிறைக் கைதிகள் சிலர் அவ்வேளையில் செல்வாக்குப் பெற்று விளங்கினர்.

ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர்தான் சிறைச்சாலைகளுக்குள் போதைப் பொருள் பாவனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. அதேசமயம் நாட்டில் போதைப் பொருள் கடத்தல் மற்றும் பாவனையும் தற்போது பெருமளவில் கட்டுப்பாட்டுக்குள் வந்திருக்கின்றது. ஆனாலும் போதைப் பொருள் பாவனையை நாட்டுக்குள் முற்றாகவே கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதென்பது இலகுவான காரியமல்ல. கண்டிப்பான நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டாலேயே நாட்டில் இருந்து போதைப் பொருளை முற்றாகத் துடைத்தெறிய முடியும் என்பதே உண்மை.

இவ்வாறான நிலையில், நாட்டில் ஆங்காங்கே மாணவர்கள் மத்தியில் 'ஐஸ்' எனப்படுகின்ற போதைப் பொருளின் பாவனை சமீப காலமாக அதிகரித்து வருவதாக தகவல்கள் வெளிவருகின்றன. மாணவர்களுக்கு இவ்வாறான போதைப் பொருளை விற்பனை செய்கின்ற சமூகவிரோதக் கும்பல்களும் காணப்படுவதாகத் தெரியவருகின்றது. 'ஐஸ்' என்ற போதைப் பொருள் பாவனை வடக்கு, கிழக்கு மாணவர்கள் சிலரிடமும் காணப்படுவதாக ஊடகங்களில் செய்திகள் வெளிவருகின்றன.

மாணவர்கள் மத்தியில் இவ்வாறான போதைப் பொருள் பாவனை ஊடுருவுவது ஆபத்தான அறிகுறியாகும். இந்த சமூகவிரோத செயலை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருவது அவசியம். இல்லையேல் எமது எதிர்கால சந்ததி ஆபத்தான நிலைமைக்குச் சென்று விடக் கூடும். எதிர்காலத்தில் குற்றவாளிகள் பெருகிய சமூகமொன்று உருவாவதற்கு இடமளித்து விடக் கூடாது.

போதைப் பொருளை ஒழிக்கும் விடயத்தில் பொலிசாருக்கு மாத்திரமே பொறுப்பு உள்ளதென்று எவருமே நினைத்து விடக் கூடாது. சமூகநலனில் அக்கறை கொண்ட அனைவருமே இவ்விடயத்தில் தங்களது பங்களிப்பை வழங்கினாலேயே நாட்டில் போதைப் பொருள் பாவனையை முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும்.

மாணவர்கள் மத்தியில் போதைப் பொருள் பாவனையை இல்லாதொழிப்பதாயின் பெற்றோர், ஆசிரியர்கள், அதிபர், நலன்விரும்பிகள் போன்றோரின் முழுமையான பங்களிப்பு மிகவும் அவசியமாகின்றது. பெற்றோர் எவ்வேளையிலும் தங்களது பிள்ளைகளின் நடத்தை மீது அவதானம் செலுத்துவது முக்கியம்.

மாணவர்களின் நடத்தைக் கோலத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள், அவர்களது நட்பு வட்டம் போன்றவை குறித்தெல்லாம் பெற்றோர் எவ்வேளையிலும் கவனம் செலுத்தியபடியே இருத்தல் வேண்டும். இவ்விடயத்தில் பெற்றோரின் பங்களிப்பு அவசியம். பெரும்பாலான மாணவர்கள் சிறிய வயதிலேயே வழிதவறுவதற்கு முற்படுகின்றனர்.

க.பொ.த. உயர்தர வகுப்புக்கு பிரவேசித்த பின்னர் மாணவர்கள் மனப்பக்குவம் அடைகின்றனர். அதன் பின்னர் அவர்கள் நெறி பிறழ்ந்து செல்வதற்கான வாய்ப்பு குறைந்து விடுகின்றது. ஆகவே இளம் வயது முதலே பிள்ளைகள் மீதான கண்காணிப்பு அவசியமாகின்றது. மாணவர்கள் அவர்களது பெற்றோரால் கண்காணித்து பராமரிக்கப்படுகின்ற போது, வழிதவறுவதற்கான வாய்ப்பும் குறைந்து போகின்றது.

அதேசமயம் மாணவர்களிடத்தில் அவசியமின்றி நெருக்கம் கொள்ள முற்படுவோர் விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்படுவதும் அவசியமாகின்றது. மாணவர்களுடன் நெருக்கத்தைப் பேணுகின்ற கும்பல்களே 'ஐஸ்' போன்ற போதைப்பொருட்களை மாணவர்களுக்கு விற்பனை செய்வதாக தகவல்கள் வெளிவருகின்றன. இவ்வாறான சமூகவிரோதக் கும்பல்கள் தொடர்பாக நலன்விரும்புகள் கண்காணிப்புடன் செயற்பட்டு பொலிசாருக்கு தகவல் அளித்தாலேயே குற்றவாளிகளை கைது செய்வதற்கு வழியேற்படும்.

இன்றைய மாணவர்களே நாட்டின் எதிர்கால சொத்துக்களாவர். அப்பாவியான அவர்களை சமூகவிரோதிகள் இலக்கு வைப்பதற்கு ஒரு போதுமே இடமளிக்க முடியாது.

editor.tkn@lakehouse.lk

# 13 கோடி 60 இலட்சம் தமிழர்களுக்காக உலகத் தமிழ் பாராளுமன்றம் உதயம்




உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு துறை சார்ந்த வல்லுநர்களைக் கொண்டு பல பிரிவுகளை உருவாக்கி வருகிறது. அதில் அரசியல் பிரிவில் உலகத் தமிழ் பாராளுமன்றம் என்ற ஓர் அமைப்பை உருவாக்கி உள்ளது. இந்த அமைப்பில் இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரிஷியஸ், கனடா, பப்புவா நியூ கினி, கயானா போன்ற எட்டு நாடுகளில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், செனட்டர்கள் 147 பேரும், மத்திய அமைச்சர்களாக 14 பேரும் உள்ளனர்.

உலகில் அனைத்து நாடுகளிலும் தமிழ் இளைஞர்கள் அரசியலில் ஈடுபடவும் அரசியல் மூலம் தமிழர்கள் அரசாங்கத்தின் சலுகைகள் பெறவும் பல்வேறு நாடுகளில் உள்ள பொதுப் பிரச்சினைகளை அந்தந்த நாட்டு பாராளுமன்றத்தில் குரல் கொடுத்து தீர்வு காணவும் இவ்வமைப்பு பாடுபடவுள்ளது.

அரசியலில் பல்வேறு கொள்கைகள் இருந்தாலும் தமிழராய், பொதுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், பல்வேறு நாடுகளுக்கு அரசுமுறைப் பயணம் செய்து அரசாங்கங்களுடனான அனுசரணையோடு பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்வு காணவும், பல்வேறு நாடுகளுடன் இறையாண்மையுடன் நல்லுறவு ஏற்படுத்தவும் இவ்வமைப்பு செயல்படும்.

இவ்வமைப்பிற்கு பன்னாட்டு ஒருங்கிணைப்பாளராக செல்வகுமார் பணியாற்றுவார். இலங்கைக்கு சுப்பிரமணிய தியாகுவும், சிங்கப்பூருக்கு ராஜேந்திர பூபதியும், மலேசியாவிற்கு தீனதயாளனும், மொரிஷியஸுக்கு நித்யானந்தாவும் ஒருங்கிணைப்பாளர்களாக பணியாற்றுவர். கனடாவிற்கு ஆலன் டீன் மணியம், கயானா மற்றும் பப்புவா நியூ கினிக்கு ஜனகன் ஆகியோர் ஒருங்கிணைப்பாளராக செயல்பட உள்ளனர்.

உலகில் 13 கோடி 60 இலட்சம் தமிழர்கள் உள்ளனர். உலக மக்கள் தொகையில் 2% உள்ள தமிழர்களின் நலன் பேண அனைத்து நாடுகளில் அரசின் பிரதிநிதிகளைப் பெற்று மக்கள் நலனில் அக்கறை கொண்ட சமுதாயமாக மாற்ற முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும் எனவும், விரைவில் எட்டு நாடுகளில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து இணையவழியில் ZOOM பொதுவிவாதம் ஒன்றை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக உலகத் தமிழ் பாராளுமன்ற பன்னாட்டு ஒருங்கிணைப்பாளரும், உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவருமான செல்வகுமார் தெரிவித்தார்.

### உறுப்பினர்களாக எட்டு நாடுகளின் எம்.பிக்கள், செனட்டர்கள், அமைச்சர்கள்



# எழுத்தாளர்களில் ஆளுமை நிறைந்தவர் கொட்வின் இராஜேந்திரநாத் சாமுவேல்



மலை நாட்டு எழுத்தாளர் மன்ற முக்கிய ஆளுமைகளில் ஒருவரான கொட்வின் இராஜேந்திரநாத் சாமுவேல் தனது 71 வயதில் காலமாகி விட்டார்.

மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் வீரகேசரியுடன் இணைந்து 1976 இல் நடத்திய ஐந்தாவது மலைய சிறுகதை போட்டியில் பரிசு பெற்றவர் அவர். 1970 முதல் மலை நாட்டு எழுத்தாளர் மன்ற தலைவர் என்.எம் ராமையா மற்றும் எஸ்.எம். கார்மேகம் ஆகியோரோடு தொடர்புகளை ஏற்படுத்தி மன்றத்தின் பணிகளுக்கு பக்கபலமாக நின்று பணியாற்றியவர்.

இர. சிவலிங்கம், எஸ். திருசெந்தூரன் தலைமையில் செயல்பட்ட மலையக இளைஞர் முன்னணி நடவடிக்கைகளிலும் தன்னை இணைத்துக் கொண்டு பங்களிப்பு நல்கியவர். பெருந்தோட்ட நிர்வாகத் துறையில் நன்கு அனுபவங்களை பெற்றுக் கொண்ட இவர் சமூக அபிவிருத்தி துறையிலும் புலமை மிக்கவர். வீரகேசரி, தினகரன், தினபதி, சிந்தாமணி செய்தி பத்திரிக்கைகளில் மலையக மேம்பாட்டு குறித்து எழுதியதோடு ஆங்கிலம், சிங்கள மொழிகளிலும், சமூக ஆராய்ச்சி கட்டுரைகளையும் எழுதியுள்ளார். மக்கள் பணி இயக்கமான வெண்சிலுவை இணையத்தின் ஸ்தாபகருமான இவர் ஒரு இயேசு உபாசருமாவார்.

'புனிதர்களை நீங்கள் தனியாக அடையாளம் காண முடியாது. ஏனெனில் அவர்கள் நம்மில் ஒருவர்களாக வாழ்கிறார்கள்' என்ற ஒரு ஆங்கில பழமொழியை அடிக்கடி நினைவு கூரும் கொட்வின் நம்மில் ஒருவராகவே வாழ்ந்த காயத்திரி சித்தர் ஸ்ரீ முருகேசு மகரிஷி சுவாமிகளின் அன்புக்கு அருளுக்கும் பாத்திரமானவர். 'சுவாமிகளின் வாழ்வையும், பணியையும் பற்றி கேட்டும், வாசித்தும் அறிந்தது எனது அதிர்ஷ்டம் என்றாலும் அவரை உணர்ந்து அனுபவிக்க முடிந்தது பரத்தில் எனக்கென வாய்த்த அரிதான கிருபையாகும்' என்ற சிந்தனையோடு வாழ்ந்த கொட்வின் இராஜேந்திரநாத் சாமுவேல் 'காயத்திரி ஸ்ரீ முருகேசு மகரிஷி வாழ்வும் பணியும்' என்ற நூலை எழுதி சித்தர் பரம்பரைக்கு பெருமை சேர்த்திருக்கிறார்.

சுவாமிகளுடன் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தொடர்புகளையும் வைத்திருந்தவர். நடைமுறை மத வாதங்களில் இருந்து அனைவரும் விடுதலை அடைந்து மீண்டும் பாரம்பரிய இறைகொள்கைகளை கடைப்பிடிக்க விரும்புவர்.

நம்மில் நாம் நேசம் கொள்ளும் விதமாகவே அயலவர்களையும் நேசிக்க வலியுறுத்தும் காயத்திரி சித்தர், பிரமரிஷி மலை அன்னைச்சித்தார் ராஜ்குமார் சுவாமிகளால் ஈர்க்கப்பட்டவர். மக்கள் பணியையே மகேசனிட்ட ஆணையாக இலங்கையிலும், பல ஐரோப்பிய ஆபிரிக்க நாடுகளிலும் பல குழுவினர்களுக்கு சமூகப் பணிகளில் பயிற்சி அளித்துள்ளார். பல அரசசார் நிறுவனங்களுக்கும், ஏனைய சமய ஸ்தாபனங்களுக்கும் ஆலோசகராக பணியாற்றிய இவர், அனுபவம் வாய்ந்தவர்.

மலைநாட்டு எழுத்தாளர் மன்ற சிறுகதை போட்டியில் பரிசு பெற்ற இவரது சிறுகதை பற்றி இர.சிவலிங்கம் கருத்து தெரிவிக்கையில் "சாமுவேல் எழுதியுள்ள சிறுகதை உணர்ச்சி பிரவாகம் பெருக்கெடுத்து ஓடுகிறது.உணர்ச்சி ததும்பும் நடை,சருகுகளும் தளிர்களும் சேர்ந்து விழும் சோகப் படலம் முழுமையுடன் சித்தரிக்கப்பட்டுள்ளது. தோட்டங்கள் 1970களில் கையேற்கப்படும் முறையை வெகு அழகாக ஆசிரியர் சித்தரிக்கின்றார். கதை சிறியதுதான், எனினும் அதில் நீண்ட ஒரு வரலாற்றையே காட்டியுள்ள பாணி கதைக்கு மெருகூட்டுகிறது.

பல்வேறு வகைகளில் சிறப்புடையதாக 'அந்த எமதூதன் எக்காலம் ஊதிய போது' என்ற கதை அமைகின்றது" என்று பதிவு செய்திருக்கிறார். அன்னாரின் ஆத்மா 16.09.2020 புதன்கிழமை அன்று ஹல்துமுல்ல புனித செபஸ்தியன் தேவாலயத்தில் இளைப்பாறச் சென்று விட்டது. மலையக எழுத்தாளர் மன்ற சார்பில் எங்கள் அஞ்சலிகள். ஓம் ஜெயகுருவே துணை.

### மலையக எழுத்தாளர் மன்றம் அனுதாபம்

**எச்.எச்.விக்கிரமசிங்க...**

# இலக்கிய உலகில் அழியாத தடம் பதித்தவர் முகில்வண்ணன்

கிழக்கிலங்கையின் மூத்த இலக்கியவாதி வே.சண்முகநாதன் (முகில்வண்ணன்) காலமாகி விட்டார். இவரது மறைவு குறித்து இலக்கிய அன்பர்கள் உட்பட பல தரப்பினரும் அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

'முகில்வண்ணன் மறைந்த செய்தி கேட்டு துயரடைந்தேன். பார் போற்றும் பாண்டிருப்பு மண்ணில் பல இலக்கியவியலாளர்கள் தோன்றி தமிழ் பேசும் உலகில் தமது அழியாத தடங்களை பதித்துள்ளனர். இவர்களின் வரிசையில் அமரத்துவமடைந்த முகில்வண்ணன் என்னும் புனை பெயரைக்கொண்ட வே.சண்முகநாதனும் ஒருவர். இவரின் இழப்பு தமிழ் இலக்கிய பரப்புக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் முருகேசு இராஜேஸ்வரன் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அமரத்துவமடைந்த வே.சண்முகநாதன் (முகில்வண்ணன்) வெறுமனே ஓர் இலக்கியவாதி மட்டுமல்ல. அன்னார் அரசதுறையில் உதவிப் பொறியியலாளராக கடமையாற்றியவர். போர்ச்சூழல் நிரம்பிய காலத்தில் ஏற்பட்ட சமாதான சூழ்நிலையில் மக்கள் பணி புரிந்துள்ளார்.

இலங்கையின் புகழ் பூத்த திரௌபதை அம்மன் ஆலயம் என்று உலக மக்களால் பேசப்படும் கல்முனை பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய அறங்காவல் சபையின் தலைவராக சில காலம் பணியாற்றி மக்கள் மத்தியில் நன்மதிப்பை பெற்றவர். சிறுகதை, நாவல், கவிதை என பல்துறைகளிலும் தனது ஆற்றலையும் ஆளுமையையும் வெளிக்கொணர்ந்த அன்னார் மிகவும் அமைதியாகவே ஆர்ப்பரிப்பு எதுவுமின்றி தனது இலக்கிய பயணத்தை இறுதி மூச்சுவரை தொடர்ந்தவர்.

கிழக்கிலங்கையில் இடம்பெற்ற பல்வேறுபட்ட இலக்கிய நிகழ்வுகளில் தனது பிரசன்னத்தை வெளிப்படுத்தி அனைவரோடும் இலக்கிய உலகில் அன்பைப் பகிர்ந்தவர். இத்தகைய விருட்சம் ஒன்று வீழ்ந்தது என்று செய்தி கேட்டு அனைவரும் துயரம் கொள்கின்றோம் என்று இராஜேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

### கிழக்கின் மூத்த இலக்கியவாதியின் மறைவுக்கு அன்பர்கள் அனுதாபம்



**செ.பேரின்பராசா...**
(துறைநீலாவணை நிருபர்)

# தமிழகத்தின் உண்மையான தந்தை ஈ.வெ.ரா. பெரியார்

20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஈ.வெ. ராமசாமி நாயக்கர் எனும் செல்வந்தர் காங்கிரஸ் பேரியக்கத்தில் பணிபுரிந்தார். பெரும் செல்வந்தரின் மகன். அவரது மொழிகளில் சொல்வதானால் இளம்பராயத்தில் மைனராக அலைந்து திரிந்தவர். சமூக வேறுபாடுகளைக் கண்டு மனம் கொந்தளித்தார். காங்கிரஸ் பேரியக்கத்தில் இருந்து கொண்டே கல்வி, வேலை வாய்ப்பில் வகுப்புவாரி பிரதிநித்துவத்துக்காக போராடினார். காங்கிரஸ் இதை கண்டுகொள்ளவில்லை. இதனால் 1925 ம் ஆண்டு காங்கிரஸில் இருந்து வெளியேறி சுயமரியாதை இயக்கத்தை ஆரம்பித்தார். சாதிய அடிப்படையிலான சமூக வேறுபாடுகளுக்கு காரணமான அனைத்தையும் பெரியார் கண்டித்தார், விமர்சித்தார், எதிர்த்தார்.

சாதியை, மதத்தை ஒழித்து நாத்திகனாக, மானமும் அறிவும் உள்ள சுயமரியாதைக்காரனாக மனிதர்கள் வாழ பிரசாரம் செய்தார். தம் பெயருக்கு பின்னால் போட்டிருந்த நாயக்கர் சாதி பட்டத்தை பெரியாரும் தூக்கி எறிந்தார். அவரை பின்பற்றியோரும் தூக்கி எறிந்தனர்.

சமூகத்தின் சரிபாதி பெண்கள் சுதந்திரமாக வாழ வேண்டும் என குரல் கொடுத்தார். 1929 ம் ஆண்டு செங்கல்பட்டில் முதலாவது சுயமரியாதை மாகாண மாநாடு நடைபெற்றது. பெண்களுக்கு சொத்தில் சமபங்கு உள்ளிட்ட புரட்சிகர தீர்மானங்களை அம்மாநாட்டில் நிறைவேற்றினார். அன்றைய சென்னை மாகாணத்தில் நீதிக்கட்சியும் சுயமரியாதை இயக்கமும் இரட்டை குழல் துப்பாக்கிகளாக செயல்பட்டன. அரசாங்கத்தில் இருந்த நீதிக்கட்சி மூலமாக இடஒதுக்கீடு, கோவில் நுழைவு என சாத்தியமான அத்தனையையும் சாத்தியப்படுத்தினார் தந்தை பெரியார். அதுவரை ஒடுக்கப்பட்டிருந்த பெரும்பான்மை மக்கள் தங்களது சமூக விடுதலைக்கான பயணத்தில் மானமும் அறிவும் உள்ளவர்களாக பெரியாரின் தலைமையை ஏற்றனர்.

தம் வாழ்நாள் முழுவதும் தேர்தல் அரசியல் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார் தந்தை பெரியார். தம்மை தேடிவந்த முதல்வர் பதவியை தூக்கி எறிந்தவராக இருந்தார். சிறைக்கு அஞ்சாத சிங்கமாக இருந்தார். இந்திய அரசியல் சாசனத்தில் முதலாவது திருத்தமாக இடஒதுக்கீட்டை இடம்பெறச் செய்தவர் தந்தை பெரியார்.



### 142வது பிறந்த தினம் நேற்று

# மாகாண சபை முறையை அரசாங்கம் ஒருபோதும் ரத்து செய்ய போவதில்லை

**'மாகாண சபை முறையை அரசாங்கம் ரத்து செய்யப் போவதில்லை' என்று கூறுகின்றார் முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க. எமக்கு வழங்கிய பேட்டியின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

## சம்பிக்க ரணவக்கவுடன் சந்திப்பு



**கேள்வி: இம்முறை பொதுத்தேர்தலில் தோல்வியடைந்தது குறித்து நீங்கள் என்ன எண்ணுகிறீர்கள்?**

**பதில்:** உண்மையில் இந்தத் தோல்விக்கு நல்லாட்சி அரசாங்கத்துக்கு எதிராக பல பக்கங்களிலிருந்தும் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களே காரணமாகும். விசேடமாக அன்றைய ஆட்சியில் மைத்திரிபால மற்றும் ரணிலுக்கிடையே காணப்பட்ட கயிறிழுப்பு காரணமாக நாடு பாதிப்புக்குள்ளானதென மக்களிடையே கருத்தொன்று உருவானது. அதே போன்று சில ஊடக நிறுவனங்கள் மத மற்றும் இனரீதியாக துவேஷமான கருத்துகளை மக்களிடையே விதைத்து அது தொடர்பாக குற்றச்சாட்டுகளை நல்லாட்சி அரசாங்கத்தின் மீது சுமத்தி திட்டமிட்டு பல நடவடிக்கைகளை மேற்கொண்டன. விசேடமாக சஹ்ரானின் தாக்குதலை காரணமாகக் காட்டி யுத்த காலத்தில் கூட ஏற்படாத மதவிரோதத்தை உருவாக்கினார்கள். இவ்வாறான நிலைமையில் நல்லாட்சி அரசாங்கம் நாட்டின் அனைத்து மக்களுக்கும்,அரச ஊழியர்களுக்கும் செய்த நல்லவற்றை மறந்து மக்கள் நல்லாட்சி அரசாங்கத்தை பிரதிநிதித்துவம் செய்த அனைவருக்கும் எதிராக வாக்களித்தார்கள்.

**கேள்வி: எமது முன்னோர்களின் கூற்றொன்றுள்ளது. விதைத்ததைத் தான் அறுவடை செய்ய முடியும் என்பதே அதுவாகும். இந்த முடிவையும் நீங்கள் விதைத்தது தான் கிடைத்துள்ளது என ஏற்றுக் கொள்ள மாட்டீர்களா?**

**பதில்:** இந்தத் தேர்தலில் நாம் தோல்வியை அவ்வாறு அர்த்தப் படுத்த மாட்டோம். ஏனென்றால் அரசு ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்தது, சமுர்த்தி கொடுப்பனவை அதிகரித்தது, நாட்டில் 2015ஆம் ஆண்டு இருந்ததை விட பொருளாதாரத்தை இரண்டு மடங்காக உயர்த்தியது, கல்வியிலும் சுகாதாரத்திலும் குறிப்பிட்டளவு மாற்றத்தை ஏற்படுத்தியது நாமேயாகும். விதைத்ததுதான் அறுவடை செய்ய முடியும் என்றால் நாம் வெற்றி பெற்றிருக்க வேண்டும். ஆனால் ஊடகங்கள் திட்டமிட்டு எம் மீது குற்றங்களை சுமத்தி மக்களை வெறுப்படையச் செய்தன. குருநாகல் அரசசேவை மண்டபத்தை எமது அரசாங்கம் உடைத்திருந்தால் அரசாங்கத்தையே கவிழ்க்கும் அளவுக்கு பிரசாரத்தை மேற்கொண்டு இருந்திருப்பார்கள். ஆனால் கடந்த 9 மாதங்களாக அரசாங்கம் செய்த எந்த ஒரு விடயம் தொடர்பாகவும் மக்கள் மனதை தட்டி எழுப்ப எவரும் முன்வரவில்லை.அதனால் எதிர்காலத்தில் இவற்றின் பின் விளைவுகளை இந்த அரசாங்கம் எதிர்கொள்ள வேண்டி நேரிடும்.

**கேள்வி: மக்கள் இந்த அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கி அரசியலமைப்பை சீர்திருத்தி, புதிய அரசியலமைப்பை கொண்டுவர ஆணையை வழங்கியுள்ளார்கள். இதனை எவ்வாறு நீங்கள் நோக்குகின்றீர்கள்?**

**பதில்:** இவர்கள் மக்களுக்கு அரசியலமைப்பு திருத்தத்தைக் கொண்டு வருவோம் என்று கூறினாலும் அவர்கள் ஒருபோதும் புதிய அரசியலமைப்பு ஒன்றை தயாரிக்க மாட்டார்கள். ராஜபக்ஷக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக 19 ஐ திருத்தி, மாற்றி அமைத்து 20ஆவது திருத்தத்தை கொண்டு வந்து அங்கீகாரம் பெறுவார்கள். ஆனால் புதிய அரசியலமைப்பை உருவாக்க மாட்டார்கள்.

**கேள்வி: நீங்கள் அவ்வாறான முடிவை எதனை அடிப்படையாகக் கொண்டு கூறுகின்றீர்கள்?**

**பதில்:** நீங்கள் அறிவீர்கள், 2012ல் இவர்களுக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறக் கூடியதாக இருந்தது. அன்றும் இவர்கள் அரசியலமைப்பை மாற்றுவதாகக் கூறினார்கள். ஆனால் செய்தார்களா? அன்றும் மாகாணசபையை ரத்து செய்வதாக கூறினார்கள், நிறைவேற்று ஜனாதிபதி முறையையும் நீக்குவதாகக் கூறினார்கள். ஆனால் என்ன செய்தார்கள்? 18 ஆவது திருத்தத்தை கொண்டு வந்து இன்னும் ஐந்து வருடங்களுக்கு அதிகாரத்தை கேட்பதற்கு பயன்படுத்திக் கொண்டார்கள். இம்முறையும் அதனையே செய்வார்கள். அவர்கள் கூறுவது போன்று மாகாணசபை முறையை ரத்து செய்யுமாறு கூறுங்கள். நான் கூறுகிறேன், இவர்கள் ஒருபோதும் மாகாண சபை முறைமையை ரத்து செய்ய மாட்டார்கள். தேசியவாத சக்திகள் இவ்வாறான தேவதைக் கதைகளை கூறித் தாமும் ஏமாறுவதுடன் மக்களையும் ஏமாற்றுவார்கள்.

**கேள்வி: நீங்கள் அரசியலமைப்பில் 13வது அரசியல் திருத்தம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று கூறுகின்றீர்களா?**

**பதில்:** பதின்மூன்றாவது திருத்தம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று நான் கூற மாட்டேன். தற்போது அதனை ரத்து செய்ய வேண்டுமென யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது. நானும் அதனையே கூறுகின்றேன். ஆனால் இந்த அரசாங்கம் அதனை செய்யாது. அரசாங்கத்துக்கு அதனை செய்யவும் முடியாது.

**கேள்வி: பொதுமக்களின் வாக்குகளால் ஒரு பிரதிநிதியை கூட பாராளுமன்றத்துக்கு அனுப்ப முடியாத ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைக்கு உங்கள் பெயரும் கூறப்பட்டதாக சில செய்திகள் கூறுகின்றனவே?**

**பதில்:** இல்லை, அது தவறாகும். ஐக்கிய தேசியக் கட்சி தலைவரை மாற்றி அதனை மீட்கக் கூடிய நிலையில் கட்சி இல்லை. தற்போது ஐக்கிய தேசியக் கட்சி அரசியல்ரீதியாக இறுதிப் பயணத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. அதைத் தடுக்க எதைச் செய்தாலும் பிரயோசனமில்லை.

## 'ரணில் விக்கிரமசிங்கவினாலேயே ஐக்கிய தேசியக் கட்சி வீழ்ச்சியைச் சந்தித்து, இறுதிப் பயணம் செய்து கொண்டிருக்கிறது. அதைத் தடுக்க எதைச் செய்தாலும் பிரயோசனமில்லை'

**கேள்வி: ஐக்கிய மக்கள் சக்தியை ஆக்கிரமித்து அதனை உங்கள் வசப்படுத்த போவதாக உங்கள் கட்சியிலேயே சிலர் கூறுகின்றார்கள். அது தவறான செய்தியா?**

**பதில்:** ஐக்கிய தேசியக் கட்சி பெயரளவில் வேறாக போட்டியிட்டாலும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 95 வீதமானோர் ஐக்கிய மக்கள் சக்திக்கே வாக்களித்தார்கள். அதனால் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியை தொடர்ந்தும் எதிர்பார்க்க மாட்டார்கள். அது ரணில் விக்கிரமசிங்க உடனேயே ரத்தாகியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி அரசியல் ரீதியாக தோல்வி அடையவில்லை. சரிவையே சந்தித்துள்ளது. அது மீள எழுந்து விடும் எனக் கூற முடியாது. எவ்வேளையிலாவது ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவதாக அவர்கள் கூறினால் அது பற்றி ஆலோசிக்க முடியும். ஐக்கிய தேசியக் கட்சி ரணில் விக்கிரமசிங்கவினாலேயே வீழ்ச்சியை சந்தித்துள்ளது. அவர்தான் அதற்கு பொறுப்புக் கூற வேண்டும். அவ்வாறான தலைவர்களை எமது கட்சியுடன் இணைத்துக் கொள்ள விரும்பவில்லை. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் அனைவரையும் எம்முடன் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுப்போம்.

**கேள்வி: ஹெல உறுமயதான் தேசியவாத அரசியலுக்கு ஆரம்பத்தை அளித்தது. அவ்வாறான நீங்கள் தேசியவாதத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த அரசாங்கம் ஆட்சியை கைப்பற்றியது என ஏன் குற்றம் சுமத்துகிறீர்கள்?**

**பதில்:** நாம் தேசியவாத அரசியல் தவறென்று கூற மாட்டோம். நாம் கூறுவது, அதற்காக தெரிவு செய்த நபர்கள் தேசியவாதிகள் அல்ல என்பதாகும். அவர்கள் சிங்கள மொழிக்கோ, பௌத்த மதத்துக்கோ நேர்மையானவர்கள் அல்ல. குறுகிய காலத்தில் மக்கள் இதனை புரிந்து கொள்வார்கள்.

**கேள்வி: தேசியவாத அரசியல் மூலம் உங்களால் வெற்றி பெற முடியவில்லை அல்லவா?**

**பதில்:** நாம் வெற்றியடையவில்லை என யார் கூறுகின்றார்கள்? நாம் தேசியவாத அரசியலை உண்மை பாதிப்படைந்த வேலையிலேயே ஆரம்பித்தோம். அதன் மூலம் எம் மக்களிடையே 'சிங்கள நாடு, எமது நாடு' என்ற எண்ணத்தை உருவாக்க முடிந்தது. வீரர்களுக்கு அது பலமாக அமைந்தது. அந்த தேசியவாத அரசியல் காரணமாகத்தான் இன்று இந்த நாடு 'சிங்கள பௌத்த நாடு' என்ற கருத்து உலக ரீதியாக உள்ளது.

**கேள்வி: மக்களை மையமாகக் கொண்ட பொருளாதார அபிவிருத்திக்காகஅரசாங்கம் புதிதாக நியமித்துள்ள அமைச்சரவை பலம் வாய்ந்தது என எண்ணுகிறீர்களா?**

**கேள்வி:** இந்த அரசாங்கத்தில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளதைப் பார்க்கும் போது எமக்கு சிரிப்பு வருகின்றது. யானை வேலி அமைச்சு, அகழி அமைச்சு, மண் அமைச்சு போன்ற அமைச்சுகளை உருவாக்கி அரசாங்கம் மக்களை ஏமாற்றுகிறது. முன்னரும் அமைச்சுகள் மூலம் இவை நிறைவேற்றப் பட்டன. இதற்கு முன்னர் பித்தளைக் கைத்தொழில், மட்பாண்டக் கைத்தொழில், பிரம்பு கைத் தொழில் என்பன நடைபெறவில்லையா? அன்று நான் அமைச்சராக இருந்த வேளையில் 'கஜ மித்துரு' என்ற ஒரு அமைப்பை உருவாக்கினேன். அதன் மூலம்தான் யானைகளுக்கான வேலி, அகழி என்பன அமைக்கப்பட்டன .வனவிலங்கு திணைக்களத்தாலேயே அவ்வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. நிறுவனங்களின் பேரால் இன்று அமைச்சுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பலம் வாய்ந்த அமைச்சுகளை ஒரு சிலர் பிடியில் வைத்துக் கொண்டு ஏனயோரை மகிழ்ச்சிப் படுத்த சிறுசிறு விடயங்களுக்காக அமைச்சுப் பதவிகளை வழங்கி உள்ளார்கள். அவர்கள் தமது அமைச்சுப் பதவிகளை தமது ஆதரவாளர்களுக்கு கூறவே கூச்சப்படுகிறார்கள்.

**கேள்வி: எப்போது இந்த அரசியல் கயிறிழுப்பின்றி நாட்டைப் பற்றி சிந்திக்கும் அரசியல்வாதிகளை உருவாக்குவது?**

**பதில்:** நல்லாட்சி அரசாங்கம் நீங்கள் கூறிய இந்த தேசிய அரசியலை இந்நாட்டில் உருவாக்க முயற்சி செய்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து அதற்கான பாதையை ஏற்படுத்திக் கொண்டன.

ஆனால் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு நீடித்தது. ஆனால் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான கருத்து வேறுபாடு நாட்டில் தேசிய அரசியலுக்கு பதிலாக கட்சி அரசியலுக்கு புதிய கட்சி ஒன்றை உருவாக்கியது. அதுதான் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகும்.நாம் இந்த அரசாங்கம் செய்யும் நல்ல காரியங்களுக்கு ஆதரவு வழங்குவோம். இடைக்கால கணக்கறிக்கயை அங்கீகரிக்க நாம் ஆதரவு வழங்கினோம். நாம் மக்களுக்கு நன்மை பயக்கும் எந்த ஒரு விடயத்துக்கும் ஆதரவு வழங்க தயாராக உள்ளோம்.

ஜயசூரிய உடுகும்புற...
(தமிழில்: வீ.ஆர்.வயலட்)

# அச்சம் தணிந்து விட்டாலும் ஆபத்து இன்னும் நீங்கவில்லை

**'கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சுமார் 5மாதங்கள் மூடப்பட்டிருந்த பாடசாலைகளின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் தற்போது மீண்டும் முற்றாக வழமைக்குத் திரும்பியுள்ளன. உலக சுகாதார தாபனம் இலங்கைக்கு கொரோனா கட்டுப்பாடு தொடர்பில் வழங்கிய இரண்டு சான்றிதழ்களும் இதற்குச் சான்றாகவிருக்கலாம்.**




ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் துரித நடவடிக்கைகள் காரணமாக கொரோனா எமது நாட்டில் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. அதேவேளை ஜனாதிபதியின் 'சௌபாக்யா' வேலைத்'திட்டம், வீட்டுத் தோட்ட செயற்பாடுகள் என்பன மக்கள் மத்தியில் வெகுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறையிலும் இருந்து வருகின்றன.

எனினும் நாட்டில் அவ்வப்போது கொரோனா நோயாளர்கள் சிலர் இனங் காணப்பட்டு வருகின்றனர் என்று ஊடகங்கள் கூறுகின்றன. இன்று பொதுவெளிகளில் பெரும்பாலும் முகக்கவசம் படிப்படியாக மறக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

கொரோனா முற்றாக நீங்கி விட்டதான மனநிலை மக்கள் மத்தியில் நிலவுவதே இதற்குக் காரணம். ஆனால் அருகிலுள்ள இந்தியாவில் கொரோனா இன்னும் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை. எனவே நாமும் அவதானமாகவே செயற்பட வேண்டும்.

பாடசாலைகள் சிறார்களுடன் தொடர்பானவை. அங்கு இப்படியான நோய்கள் மிக இலகுவாக தொற்றுவதற்கு ஏதுவான களங்களாகும்.இதுதொடர்பாக வைத்தியர் சங்கமும் அண்மையில் குறிப்பிட்டிருந்தது. இருந்த போதிலும் பெரிதாக பொருட்படுத்தப்படவில்லை.

கொழும்பு தவிர்ந்த ஏனைய இடங்களில் முகக்கவசங்களை பாடசாலைகளில் பெரும்பாலும் காண முடியவில்லை. கைகழுவுதலில் ஆரம்பத்தில் காண்பித்த அக்கறை, கண்டிப்பு தற்போது குறைந்து விட்டது. சமூக இடைவெளிகளும் பின்பற்றப்படுவதில்லை.

விடுபட்ட பாட அலகுகளை முடிக்க வேண்டும் மற்றும் பரீட்சைக்கு தயாராகுதல் வேண்டும் என்ற சிந்தனையை மாத்திரம் மையமாகக் கொண்டு பாடசாலைகள் இன்று இயங்கி வருகின்றன. மாணவர் உளநிலை கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்படுவதாக தெரியவில்லையென உளவியலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.



பாடசாலைகளை 1.30மணியுடன் மூடப்பட வேண்டும் என்று கல்விஅமைச்சு உத்தரவிட்டிருந்தும் பல பாடசாலைகள் இன்றும் 3.30மணி வரை தொடருகின்றன. பரீட்சையை மட்டும் மையமாகக் கொண்டு இதனை செயற்படுத்துகிறார்கள் எனக் கூறப்படுகிறது. கல்விப் பணிப்பாளர்களும் இவ்விடயத்தில் பெரிதாக நடவடிக்கை எடுக்க முன்வரவில்லையென சில பெற்றோர் கூறுகின்றனர்.

## பாடசாலைகளில் கொரோனா கட்டுப்பாடுகள் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டியது அவசியம்

கல்விச் சுமை திணிக்கப்படும் போது மாணவர்களின் உளநிலை, உடல்நிலை கவனத்திற் கொள்ளப்பட வேண்டுமென்பது கல்வியியலாளர்களினதும் உளவியலாளர்களினதும் கருத்தாகும்.

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள ஆலோனைகள் மற்றும் அறிவுறுத்தல்களை உரிய வகையில் பின்பற்றி பாடசாலை நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று கல்வி அமைச்சு அனைத்து பாடசாலைகளுக்கும் அறிவித்துள்ளது.

பாடசாலை சுற்றாடலை கிருமி தொற்று நீக்குதல், கைகளைக் கழுவுதல், முகக்கவசம் அணிதல், நபர்களுக்கு இடையிலான இடைவெளியை முன்னெடுத்தல் உள்ளிட்டவற்றின் மூலம் கொவிட் தொற்றை கட்டுப்படுத்துவது தொடர்பில் பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைத்து பாடசாலை சமூகத்தினரும் தற்பொழுது முழுமையாக கவனம் செலுத்துவதில்லை என்று சில பாடசாலைகள் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனால் விசேடமாக பாடசாலை போக்குவரத்து சேவையை வழங்குதல், பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளை முன்னெடுத்தல் உள்ளிட்ட பாடசாலை மாணவர்கள் நேரடியாக தொடர்புபடும் இடங்களில் இவர்களின் சுகாதாரத்தை உறுதி செய்வது பாடசாலை அதிகாரிகள் உள்ளிட்ட பாடசாலை சமூகத்தினரின் பொறுப்பாகும்.

அத்தோடு மாணவர்களின் சுகவீனம் தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்தி சுகாதார பாதுகாப்பு தொடர்பில் ஆகக் கூடிய வகையில் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று பரவுவது தொடர்பில் அரசாங்கத்தின் தலையீட்டுடன் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் காரணமாக நாட்டில் கொவிட் தொற்று கட்டுப்படுத்தப்பட்டிருப்பதுடன் உலகின் ஏனைய நாடுகள் மத்தியில் இலங்கை சிறப்பான நிலையில் காணப்படுகின்றது.

எனினும் இன்னும் முற்றாக கொரோனா அபாயம் நீங்கவில்லையென்ற எண்ணமும் எம்மத்தியில் இருக்க வேண்டும். அதற்கு முன்னோடியாக பாடசாலைகள் சுகாதாரக் கட்டுப்பாடுகளுடன் இயங்க வேண்டும் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

கல்வியமைச்சு சுற்றுநிருபத்தையும் அனுப்பி வைத்துள்ளது. அதற்கேற்ப பாடசாலைகள் இயங்க வேண்டிய கடப்பாடும் உள்ளதென்பதை மறந்து விட முடியாது.

# ஹற்றன் நகரத்தை மலையகத்தின் தலைநகராக்குவதே எமது இலக்கு

## இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

ஹற்றன் நகரத்தை மலையகத்தின் தலைநகராக்குவதே எமது இலக்கு. அதற்கேற்ற வகையில் அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

ஹற்றன் நகரிலுள்ள வர்த்தகர்களுக்கும், இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று (17.09.2020) ஹற்றன் நகரசபையில் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய ஜீவன் தொண்டமான் கூறியதாவது,

ஹற்றன் நகரில் குப்பைபிரச்சினையென்பது பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. இதற்கு தற்காலிக தீர்வு கிடைத்திருந்தாலும் நிரந்தர தீர்வே எமது எதிர்ப்பார்ப்பாகும். ஹற்றன் பிளான்டேசனுடன் கலந்துரையாடினோம். குப்பைகளை கொட்டுவதற்கு இரண்டு ஏக்கர் வழங்கப்படும் எனக்கூறப்பட்டுள்ளது. உரிய இயந்திரங்கள் பொறுத்தப்பட்டு கழிவு முகாமைத்துவம் செய்யப்படும். இதன்மூலம் உரம் தயாரிப்பும் இடம்பெறும். அதன்மூலம் தொழில் வாய்ப்புகளும் கிடைக்கும். தன்னிச்சையான முறையில் முடிவுகளை எடுப்பதை விட மக்களுடனும், நகரத்திலுள்ள வர்த்தகர்களுடனும் கலந்துரையாடி திட்டங்களை வகுப்பதே



சிறப்பாக இருக்கும். அப்போதுதான் உங்களுக்கும் திருப்தி, எங்களுக்கும் திருப்தி.

ஹற்றன் நகரில் போக்குவரத்து நெரிசல் பிரச்சினைக்கு தீர்வாக பஸ் தரிப்பிடத்தையும், டிப்போவையும் பிறிதொரு இடத்துக்கு கொண்டு செல்லவேண்டும். இதன்மூலம் வர்த்தகம் பாதிக்கப்படும் என சிலர் நினைக்கலாம் அவ்வாறு இல்லை. எல்லாவித ஏற்பாடுகளையும் செய்த பின்னரே திட்டம் செயற்படுத்தப்படும். ஹற்றன் நகரை மலையகத்தின் தலைநகராக்குவதே இலக்கு. அதற்கு மக்களின் ஒத்துழைப்பும் அவசியம். ஹற்றனிலிருந்து, சிவனொளிபாத மலை வரை சிறந்த சுற்றுலா வாய்ப்பு இருக்கின்றது. அதற்கான திட்டங்கள் உருவாக்கப்பட்டு, எமது இளைஞர், யுவதிகள் பயன்பெறும் வகையில் திட்டங்கள் செயற்படுத்தப்படும். கடந்தகாலங்களில் தற்காலிக அபிவிருத்தி பற்றியே சிந்திக்கப்பட்டுள்ளது.

## உணவகங்களில் திடீர் பரிசோதனை

**ஹற்றன் விசேட, ஹற்றன் சுழற்சி நிருபர்கள்**

ஹற்றன் நகரிலுள்ள ஹோட்டல்களும், பேக்கரிகளும் நேற்று (17.09.2020) சுகாதார பரிசோதன அதிகாரிகளால் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

ஹற்றன் டிக்கோயா நகரசபை தலைவரின் வேண்டுகோளுக்கிணங்க பொது சுகாதார பரிசோதனை அதிகாரிகளால் இவ்வாறு திடீர் சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்காக முன்வைக்கப்பட்ட சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா? உணவுகள் சுத்தமான முறையில் தயாரிக்கப்படுகின்றனவா? பழுதடைந்த பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றனவா? என பரிசோதிக்கப்பட்டது.

சில ஹோட்டல்களும், பேக்கரிகளும் உரிய நடைமுறைகளைப் பின்பற்றவில்லை. அதன் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு தொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பலாங்கொடை பிரதேசத்தில் போதிய பஸ் வசதியின்மையால் மக்கள் அவதி

பலாங்கொடை பிரதேசத்தில் பல கிராமிய வீதிகளில், இலங்கை போக்கு வரத்து சபை பஸ்கள், முறை யாக சேவையில் ஈடுபடுத்தப்படாமையால் பிரதேசமக்கள் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

பலாங்கொடை நகரத்தில் இருந்து, மெத்தகந்த, குருபெவில, வேவல்வத்தை, வெல்லவல, எகஸ்லேன்ட் போன்ற பகுதிகளுக்கான பஸ் சேவைகளே, இவ்வாறு முறையாக இடம்பெறுவதில்லை என தெரியவருகின்றது.

இதனால், அதிகளவு மாணவர்களே பாதிக்கப்பட்டுள்ளனர்.

பலாங்கொடை நகரத்துக்கு தொழில் நிமித்தம் வருகை தந்த பின்னர், எல்லபொல, உடவெல, அகரெல்ல, ஓபநாயக்க, ஹுனுவல, பெல்மதுளை ஆகிய வழியாக செல்லும் பயணிகளுக்கு மாலை 6 மணிக்கு பின்னர் பஸ்கள் இருப்பதில்லை என்றும் தூரப் பயண பஸ்களை எதிர்பார்த்து நின்றாலும், அவை குறுகிய தூர பஸ் பயணிக்காக நிறுத்தப்படுவதில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக, இலங்கை போக்குவரத்து சபை அதிகாரிகளிடம் வினவியபோது, போதியளவு பஸ்களும் ஊழியர்களும் இல்லாமையாலேயே, இந்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த தேவைகள் நிறைவேறினால், குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முடியும் என்றும் அவர் கூறினார்.

## போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வுக்குட்படுத்த சட்டத்தில் திருத்தம் தேவை

**எம்.ஏ.அமீனுல்லா**

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு உயர்நீதிமன்றத்தின் ஊடாக பிணை வழங்கி அவர்களுக்கு புனர்வாழ்வுக்கு அனுமதிக்க சட்டங்களில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என சிறைச்சாலை சீர்திருத்தங்கள் மற்றும் கைதிகளின் மறுவாழ்வு இராஜாங்க அமைச்சர் டாக்டர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

நேற்று முன்தினம் தும்பரா போகம்பர புதிய சிறைச்சாலை மற்றும் போகம்பர பழைய சிறைச்சாலை ஆகியவற்றின் நிலைமைகளை ஆராய்வதற்காக சென்றிருந்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,



சிறைகளில் 11 ஆயிரம் கைதிகள் மட்டுமே இருக்கக் கூடிய நிலையில் தற்பொழுது 30 ஆயிரத்திலும் அதிகமானோர் சிறையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் போதைப்பொருள் குற்றச்சாட்டில் சிறைக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பழைய போகம்பரா சிறைச்சாலை சிறைச்சாலைத் திணைக்களத்தினால் தற்காலிகமாக கையகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் திருத்த பணிகள் முடிவடைந்ததும் கைதிகள் ஒருதொகையினரை இங்கு அழைத்துவரவுள்ளனர்.

மேலும் இரசாயன பகுப்பாய்வு அறிக்கைகளை விரைவாகப் பெற முடிந்தால் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏராளமான கைதிகளை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தி பிணையில் விடுவிக்க முடியும்.

எந்தவொரு சிறைக் கைதிகளையும் மறுவாழ்வுக்காக வேலைக்கு அனுப்ப சட்டத்தில் எந்தவிதமான ஏற்பாடுகளும் இல்லை. சிறைகளில் அதிகாரிகளின் பற்றாக்குறை இருக்கின்றது. 11,000 பேருக்கு பதிலாக 31,000 கைதிகள் இருந்தபோது, அதிகாரிகள் கடுமையான மன அழுத்தத்தில் உள்ளனர்.

மேலும் கடந்த காலங்களில் கைதிகள், நீதித்துறை, காவல்துறை மற்றும் குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள போதிலும், சிறை அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை. தற்போது சுமார் 2000 அதிகாரிகளின் பற்றாக்குறை காணப்படுகின்றது. எதிர்காலத்தில் தேவையான ஒப்புதலுடன் ஆட்சேர்ப்பு செய்யப்படும். இவர்களுக்கான நேர்முகப்பரீட்சையின் பின்னர் நியமனங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## மாத்தளை மாவட்டத்தில் காட்டுயானைகள் அட்டகாசம்

**உக்குவளை விஷேட நிருபர்**

மாத்தளை நகர அண்மை கிராமங்கள் சிலவற்றில் காட்டுயானைகள் அத்துமீறி பிரவேசித்து பிரதேசமக்களுக்கு சொந்தமான விவசாய உற்பத்திகள் மற்றும் உடமைகளை சேதப்படுத்திவருவதாக பிரதேசமக்கள் தெரிவிக்கின்றனர்.

மாத்தளை மாவட்டத்தில் உல்பதமடவல, இதம்புள்கமுவ, நாரண்கமுவ இஹுணுகல்பிட்டிய, கொஹலனவெல, பெதிமாபொல, வல்மோறுவ, நாலந்த,உடுதெனிய, கெட்டவல, தலகஸ்யாய, ஹதமுணகால, ஆந்தாவள, ரஜ்ஜம்மண, லிஹினிபிட்டிய, மாத்தளை வடக்கு பகுதிகளிலும் தனிகாட்டுயானைகள் நடமாடிவருவதாக பிரதேசமக்கள் தெரிவிக்கின்றனர்.

பட்டாசு கொளுத்தி தீபந்தங்களைக் காட்டி பாதுகாப்புக்கருதி செயற்பட்டாலும் யானையின்




அட்டகாசம் தொடர்ந்தும் இடம்பெற்றுவருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் ரஜ்ஜம்மனபகுதியில் காட்டு யானையின் தாக்குதலினால் இருவர் உயிரிழந்ததாக பிரதேசமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் இம்முறையும் காட்டுயானைகளினால் உயிர்ஆபத்துகள் ஏற்படலாம் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். கிராமங்களுக்குள் அத்துமீறி நுழையும் காட்டுயானைகளினால் ஏற்படும் ஆபத்துகள் தொடர்பாக மாத்தளை பிரதேச சபை உறுப்பினர் டி.ஜி.திஸாநாயக மாத்தளை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நாலககோட்டகொடையின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

## ஊடகவியலாளர்களுக்கு இலவச பயணச்சீட்டு

சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி, கேகாலை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு தனியார் பஸ் வண்டிகளில் பயணிப்பதற்கான இலவச பயணச்சீட்டு வழங்கப்பட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவின் ஆலோசனைக்கமைய சப்ரகமுவ மாகாண சபையின் மூலம் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் உள்ள ஊடகவியலாளர்களுக்கு தனியார் பஸ் வண்டிகளில் பயணிப்பதற்கான இலவச பயணச்சீட்டு நேற்று முன்தினம் (16) வழங்கி வைக்கப்பட்டது.

பயணச்சீட்டு வழங்கி வைக்கும் நிகழ்வு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் சப்ரகமுவ மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில்



உள்ள 93 ஊடகவியலாளர்களுக்கு நேற்றைய தினம் இலவச பயணச்சீட்டு வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் ரம்யகுமார வீரசிங்க, மாகாண போக்குவரத்து அமைச்சின் செயலாளர் பிரபாத் உதாகர, ஆளுநரின் இணைப்புச் செயலாளர் மஞ்சுலா இதிகாவெல உட்பட மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பேராதனை பல்கலைக்கழகத்தில் மறைமுக பகிடிவதை

### காலவரையறையின்றி வகுப்புத் தடை

**கண்டி தினகரன் சுழற்சி நிருபர்**

பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியற்பீட இரண்டாம் வருட மாணவர்களுக்கு காலவரையறையின்றி வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று அச்சுறுத்தல் காரணமாக மூடப்பட்டிருந்த பேராதனை பல்கலைக்கழகம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து கடந்த ஒரு வாரமாக மறைமுகமாக இடம்பெற்ற பகிடிவதைக் காரணமாக இவ்வாறு வகுப்பு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி இச்சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர்கள் பல்கலைக்கழகத்திலிருந்து உடனடியாக வெளியேற்றப்பட்டுள்ளனர். தொடர்ந்தும் கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து பொறியியற் பீட நிர்வாகம் பீடாதிபதிகளுக்குள்ள அதிகாரத்திற்கமைய இத்தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரியவருகின்றது.

இரண்டாம் வருட மாணவர்களுக்கு மட்டும் இவ்வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இவர்கள் விடுதிகளிலிருந்து புதன்கிழமை இரவு வெளியேற்றப்பட்டனர்.

சிலருக்கு எதிராக எதிர்காலத்தில் ஒழுக்காற்று விசாரணைகள் நடத்த ஒழுக்காற்றுக்குழு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பயத்தின் காரணமாக முதல் வருட மாணவர்கள் இதுவரை ஆள் அடையாளங்களை காட்டி முறைப்பாடுகள் செய்யாமையால் மேலதிக சட்ட நடவடிக்கைகள் எடுக்க தடையாக விருப்பதாக பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவிக்கின்றது.

## ஹற்றன் நீர்வடிகானில் ஒருத்தொகை தேசிய அடையாள அட்டைகள் மீட்பு

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

ஹற்றன் நகர பிரதான வீதியின் வடிகானிலிருந்து அடையாள அட்டைகள், ஏ.டி.எம்.காட் மற்றும் பணப்பைகள் என்பன மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்

நகரசபை ஊழியர்கள் நேற்று (17)வடிகான் துப்பரவு வேலைகளில் ஈடுபட்ட போதே மேற்படி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஹற்றன் நகரின் பிரதான வீதியில் நீர் வடிகானில் மலக்கழிவுகள் கால்வாய்களுடன் இணைக்கப்பட்டுள்ளதாக ஹற்றன் டிக்கோயா நகரசபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து நகரசபையால் நகரின் பிரதான வீதியில் நீர் வடிகான் துப்பரவு நடவடிக்கையில் ஈடுபட்ட போதே இவை மீட்கப்பட்டுள்ளன.



06 அடையாள அட்டைகள், 05 பணப்பைகள், 02 ஏ.டி.எம்.காட் என்பன ஊழியர்களினால் மீட்கப்பட்டு ஹற்றன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட பணப்பையில் பணம் எதுவும் இருக்கவில்லை. தீபாவளி காலங்களில் நகருக்கு வரும் பொது மக்களிடமிருந்து திருடர்களினால் களவாடப்பட்டவையாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இதற்கு முன்னரும் இவ்வாறு அடையாள அட்டைகள் மீட்கப்பட்டு அவை சம்பந்தப்பட்டவர்களிடம் ஒப்படைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந் நிலையில் இன்று மீட்கப்பட்ட அடையாள அட்டையின் உரிமையாளர்களை வரவழைத்து விசாரணையின் பின்னர் ஒப்படைக்க நடவடிக்கை எடுப்பதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

## இறப்பர் செய்கையில் ஊடுபயிராக பழச்செய்கை

**தெல்தோட்டை தினகரன் நிருபர்**

இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் கேகாலை கிளை காரியாலயத்தினால் .கண்டி மாத்தளை குருநாகல், கம்பஹா பகுதிகளில் ஊடுப்பயிராக 110 ஹெக்டேயரில் பழப்பயிர்செய்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

ஊடுபயிர் பழசெய்கைக்காக ஏக்கர் ஒன்றிக்கு 4000 ரூபாவீதம் விவசாயிகளுக்கு கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. இறப்பர் புதிய செய்கையின் போது 5 வருடங்களுக்கு பின்னரே பயன்தர ஆரம்பிக்கின்றன.

இக்காலப்பகுதியில் எந்தவிதமான வருமானமும் விவசாயிகளுக்கு இல்லாமையால் விவசாயிகளின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் முகமாக இஞ்சி மற்றும் மஞ்சள் செய்கையை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக இறப்பர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## பிராந்திய இறப்பர் ஏல விற்பனை

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இறப்பர் உற்பத்தி விற்பனைதுறைகளில் இடைத்தரகர்களின் தலையீடுகளை தவிர்த்து உற்பத்தியாளர்களுக்கு அதிக விலையைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் பிரதேச மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது இறப்பர் ஏல விற்பனை இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் இரத்தினபுரி காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது

இரத்தினபுரி பிரதேச சிறு இறப்பர் தோட்டங்களின் உரிமையாளர்கள் தமது உற்பத்திகளைக் காட்சிப்படுத்தி விற்பனைகளை மேற்கொண்டனர்.

இந்த ஏல விற்பனையின் போது ஒரு கிலோ இறப்பர் ஷீ ட் 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டதாகவும் இரண்டு நிறுவனங்கள் மாத்திரமே பொருட்களை வாங்க ஏல விற்பனைக்கு வருகை தந்திருந்ததாகவும் இதனால் போட்டி தன்மை காணப்படவில்லை எனவும் பிரதேச இறப்பர் உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை ஏல விற்பனையில் கிடைக்கும் விலையை விட தமக்கு இடைத்தரகர்கள் அதிக விலையை வழங்குவதாகவும் தற்போது ஏல விற்பனையில் கிடைக்கும் இறப்பர்ஷீட் ஒரு கிலோவுக்கு 300 ரூபாவுக்கு பதில் இடைத்தரகர்கள் 320 ரூபாவை வழங்குவதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

## பலா மரங்கள் வளர்க்கும் திட்டம்

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

சப்ரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களில் உள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் ஊடாக பலா மரங்கள் வளர்க்கும் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கரி கொப்பேகடுவ தெரிவித்தார்.


வெலிகபொல பிரதேச சபையின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டுவரும் பலா கன்றுகளை சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கரி கொப்பேகடுவ நேற்றுமுன்தினம்(16) பார்வையிட்டு அதிகாரிகள் மற்றும் மக்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மாகாண ஆளுநர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் உள்ள பாடசாலை மாணவர்களை சம்பந்தப்படுத்தி இல்லங்கள் மட்டத்தில் பலா கன்றுகளை வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அத்தோடு அரசாங்கத்திற்கு சொந்தமான பாவனைக்கு உதவாத இடங்கள் மற்றும் அரசாங்க அலுவலக இடங்கள், வீதிகளின் இரு புறங்களிலும் பலா மரங்களை வளர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

நச்சு தன்மையற்ற பலாக்காய்களை உள்நாடு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு கொள்வனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

# இலங்கை ஸஹ்ரா மன்றத்தினால் காஸாவில் மனிதாபிமான பணிகள்




பலஸ்தீன் காஸா பிராந்தியத்திலுள்ள வறிய மக்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்கல், நோய்வாய்ப்பட்டுள்ளவர்களுக்கும் ஏழைக் குடும்பங்களுக்கும் சிகிச்சைகளுக்காக நிதியுதவி வழங்கல் மற்றும் சுயதொழிலுக்கு உதவி அளித்தல் ஆகிய வேலைத்திட்டங்கள் இலங்கை ஸஹ்ரா மன்றத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சிங்கபூரில் வசிக்கும் இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட முஹம்மட் பஸால் ஜிப்ரி தலைமையிலான ஸஹ்ரா மன்றத்தினர் ஒரு மாத காலமாக காஸா பிராந்தியத்தில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்ற அதேநேரம் கடந்த வருடம் ரமல்லா பிராந்தியத்திலும் நிவாரணப் பணிகளை முன்னெடுத்ததாக பலஸ்தீனுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் பௌஸான் அன்வர் கூறினார். இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ பலஸ்தீன மக்களுக்காக மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக ஆற்றிய சேவையை கௌரவிக்கும் வகையில் பலஸ்தீன் ரமல்லா புட்டூணியாவில் உள்ள வீதியொன்றுக்கு மேண்மை தாங்கிய மஹிந்த ராஜபக்ஷ வீதி எனப் பெயரிடப்பட்டுள்ளது. அவ்வீதியை நேரில் சென்று பார்வையிட்ட பலஸ்தீனுக்கு விஜயம் செய்த முஹம்மட் பஸால் ஜிப்ரி அப்பெயர்ப்பலகை அருகே படமும் எடுத்துக்கொண்டார். அத்தோடு முஸ்லிம்களின் மூன்றாவது புனித தளமாக விளங்கும் அல் அக்ஸா பள்ளிவாசலுக்கு சக்கர நாட்காலிகளையும் ஸஹ்ரா மன்றத் தலைவர் வழங்கினார்.

மர்லின் மரிக்கார்

## 24 விருதுகளை வென்ற ஈழக் கலைஞனின் கயிறு




துரைராசா சுரேஷின் சங்கவி பிலிம்ஸ் அளிக்கும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கயிறு திரைப்படம் இன்று 18ஆம் திகதி கொழும்பு, யாழ்ப்பாணம், நுவரெலியா உட்பட இலங்கையில் 16 திரையரங்குகளில் திரையிடப்படவுள்ளது. இந்த திரைப்படத்தில் கனடாவில் வசிக்கும் ஈழத்துக் கலைஞர் குணா கதாநாயகனாக நடித்துள்ளார்.இத்திரைப்படம் மெஜஸ்டிக் யாழ்ப்பாணம், றீகல் நுவரெலியா, மெஜஸ்டிக் கொழும்பு, கொன்கோட் தெஹிவளை, ஜெயபிம கம்பஹா, ரூபி மாளிகாவத்தை, நெல்சன் திருகோணமலை, சினிசிட்டி மருதானை, பிவிஆர் காலிமுகத்திடல், ஜீகே கல்முனை, ராஜா யாழ்ப்பாணம், சிட்டி சினிமா கல்கிசை ஆகிய திரையரங்குகளில் திரையிடப்படவுள்ளது.

உலகம் முழுவதும் நடந்த திரைப்பட விழாக்களில் கலந்து கொண்டு விருதுகளுக்கு மேல் விருதுகளை அமைதியாக வென்று பாராட்டுக்களைப் பெற்ற திரைப்படம் கயிறு என்பதும் குறிப்பிடத்தக்கது.

இயக்குனர் நர்ஃபாசிலிடம் உதவி இயக்குனராக இருந்த கணேஷ் இயக்கியுள்ள கயிறு திரைப்படத்தில் குணா ,காவியா, மாதவ், சேரன் ராஜ் ,கந்தசாமி முதலியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.இத்திரைப்படம் அமெரிக்காவில் நடைபெற்ற தி கிரேட் சினிமா திரைப்பட விழாவில் சிறந்த படத்துக்கான விருது ,மெக்சிகோவில் நடந்த கலர்ஸ் பேச்சுலர் சர்வதேச திரைப்பட விழாவில் சிறந்த நடிகருக்கான விருது உள்ளிட்ட ஆறு சர்வதேச விருதுகளை வென்றுள்ளது.இப்படம் உலகம் முழுவதும் நடந்த 20 திரைப்பட விழாக்களில் தன்னுடைய முத்திரையை பதிவு செய்திருக்கின்றது. உலகம் முழுவதும் உள்ள சினிமா ரசிகர்களின் இதயங்களை ஆக்கிரமித்த பிறகு தற்போது அது யாருக்காக உருவாக்கப்பட்டதோ அந்த தமிழ் ரசிகர்களின் இதயங்களை வெல்ல வருகிறது.கொரோனா தாக்கத்தை தொடர்ந்து நீண்ட இடைவெளிக்குப்பின் இலங்கை திரையரங்குகளில் திரையிடப்படவுள்ள புத்தம் புதிய திரைப்படம் இதுவென்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் பதவிகளுக்கு பெயர் குறிப்பீடப்பட்ட / நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதி பற்றி ஆராய்வதற்கான இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு

இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு பின்வரும் பதவிகள் தொடர்பாக பெயர் குறிப்பிடப்பட்ட/நியமிக்கப்பட்டவர்களின் தகுதிகளை ஆராயும்.

| இல. | பெயர் மற்றும் விலாசம் | பதவி |
|---|---|---|
| 1. | கலாநிதி மொஹான் பீரிஸ் இலக்கம் 3/14டி, கின்சி வீதி, கொழும்பு-08 | ஐக்கிய அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கையின் தூதர்/ நிரந்தர பிரதிநிதியாக பெயர் குறிப்பிடப்பட்டவர் |
| 2. | திரு. ஜகத் பி. விஜேவீர இலக்கம் 221/29ஏ, சுஹத இடம், கடவத்தை. | வெகுசன ஊடக அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டவர் |
| 3. | திரு. ஆர்.டப்ளியூ.ஆர். பேமசிறி இலக்கம் 98/38, கொட்டனவத்த வீதி, பழைய கெஸ்பேவ வீதி, நுகேகொட. | நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டவர் |
| 4. | திரு. எஸ். ஹெட்டியாராச்சி 153/2-4-2, டிரிலியம் ரெசிடென்சிஸ், எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு-08. | சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டவர் |
| 5. | திரு. என்.பி. மொண்டி ரணதுங்க இலக்கம் 280/27, திசர இடம், கொடகம வீதி, அதுருகிரிய. | போக்குவரத்து அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டவர் |
| 6. | திருமதி வசந்தா பெரேரா இலக்கம் 142, வேலுவன வீதி, கொழும்பு-09. | மின்சக்தி அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டவர் |
| 7. | திருமதி கே.டி.ஆர். ஒல்கா இலக்கம் 23/சி, ஹொரண வீதி, ரிலாவல, பொல்கஸ்ஓவிட்ட. | வலுசக்தி அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டவர் |

மேற்குறிப்பிடப்பட்ட பெயர் குறிப்பிடப்பட்ட/நியமிக்கப்பட்ட நபர்கள் தொடர்பில் எவரேனும் அல்லது எந்தவோர் அமைப்பும் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினால் **2020 ஒக்டோபர் மாதம் 03ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்** முறையாகக் கையொப்பமிட்டு **'செயலாளர், உயர் பதவிகள் பற்றிய குழு, குழுப் பணியகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே'** என்ற விலாசத்திற்கு பதிவுத் தபாலில் இன்றேல் தொலைநகல் இல. **011-2777300** ஊடாக அல்லது **highposts_c@parliament.lk** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

அவ்வெழுத்து மூல கருத்துக்களுக்கு மேலதிகமாக வாய்மூல கருத்துக்களையும் முன்வைக்குமாறு குழுவினால் பணிக்கப்படலாம். இந்த விளம்பரம் பாராளுமன்ற இணையத்தளத்திலும் இடம்பெற்றுள்ளது. (**www.parliament.lk**)

**குழுச் செயலாளர்,**
**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.**

**இலங்கைப் பாராளுமன்றம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே**
**2020 செப்டெம்பர் 18ஆம் திகதி**

## மக்கள் வங்கி

**1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ்**

### ஏல விற்பனை
### மொனராகல கிளை

01. ஊவா மாகாணம், மொனராகல மாவட்டம் என்று கூறப்பட்டிருப்பினும் தற்போது மொனராகல பிரதேச செயலாளர் பிரிவில் புத்தலவெதிரட்ட கோரளையின் மூப்பனே கிராம சேவகர் பிரிவில், மூப்பனே எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் கலகஹலந்த எனும் காணி, காணி இரண்டு ஏக்கர் மூன்று ரூட் பதினாறு பேர்ச்சஸ் (ஏக். 02, ரூட். 03, பேர். 16) விஸ்தீரணம் கொண்ட காணி மொனராகல மாவட்ட நீதிமன்றத்தில் பீ. 8023 என்ற பிரிவு வழக்கின் தீர்ப்புக்கமைய எனக்குரித்தான காணியில் பிரித்து ஒதுக்கப்பட்ட ஒரு ரூட் இருபத்தாறு தசம் ஒன்பது சைவர் (ஏக். 0, ரூட். 1, பேர். 26.90) விஸ்தீரணம் கொண்ட காணியின் பகுதிக்கு பதுளையில் வசிக்கும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம். பவாட் இஸ்மயில் அவர்களால் 1996.06.16ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 4612ஆம் இலக்க வரைபடம்.

02. 'களுகஹகந்த' எனும் காணியில் பிரித்தொதுக்கப்பட்ட பகுதிக்கு மொனராகல ஹிந்திகிவுலயில் வசிக்கும் உத்தரவு பெற்ற எல்.கே. குணசேகர அவர்களால் 1998.12.07ஆந் திகதியிடப்பட்ட தயாரிக்கப்பட்ட 1785ஆம் இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தின் துண்டு இலக்கம் 01 என்ற காணி அளவில் பத்து பேர்ச்சஸ் (ஏ.01, ரூ. 0, பேர். 10) பரப்பளவு கொண்ட காணி மற்றும் அதனுள் அமைந்துள்ள இலைகுழை, பழங்கள் அனைத்தும் அடங்கும்.

மக்கள் வங்கியினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவத்தின் கீழ் 2020 ஒக்டோபர் 15ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள வளவில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

2019.05.03ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும் 2019.04.22ஆந் திகதிய தினமின பத்திரிகையிலும் டெய்லி நியூஸ் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டுள்ள ஏலவிற்பனை பற்றிய அறிவித்தல்களுக்கு கவனம் செலுத்தவும்.

**ஆதனத்துக்கான அணுகுவழி:**
மொனராகல நகரில் இருந்து கொழும்பு வீதியில் 20 மீட்டர் மட்டும் சென்றவுடன் மக்கள் வங்கி சேவை நிலையத்துக்கு அருகில் தெற்குக்கு உள்ள வீதியில் 300 மீட்டர் மட்டும் சென்றவுடன் தெற்கு பக்கத்தில் அமைந்துள்ள 23ஆம் இலக்கத்தைக் கொண்ட இடத்தில் ஆதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செய்யும் முறை:**
ஏல விற்பனை முடிவில் வெற்றிகரமான கொள்வனவாளரால் கீழ் குறிப்பிடப்பட்டவாறு பணம் செலுத்தப்படல் வேண்டும்.

1. கொள்வனவு விலையின் 10%
2. மாகாண அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய 1% வரி.
3. ஏல விற்பனையாளரின் தரகாக கொள்வனவு விலையின் 2 ½% (நூற்றுக்கு இரண்டரை)
4. 1000/- ரூபா எழுதுவினைஞர் மற்றும் வெளியிடுதற் கட்டணம்.
5. விற்பனையின் மொத்த ஆகுசெலவும் ஏனைய விதிப்பனவுகளும், எவையேனுமிருப்பின்.
6. விற்பனைச் சான்றிதழ்களுக்கான முத்திரைத்தீர்வை.

கொள்வனவு விலையின் 90% பணம் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் மக்கள் வங்கி மொனராகல பிரதேச காரியாலய முகாமையாளர், 199, வெல்லவாய வீதி, மொனராகலை என்ற முகவரிக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

தொலைபேசி இல. 055 2276347, 055 2276351

உரித்துறுதிகளும் வேறு சம்பந்தப்பட்ட ஆவணங்களும் மேற்படி முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளப்படலாம்.


கொடுப்பனவுகள் மேற்கூறப்பட்டவாறு 30 நாட்களினுள் செலுத்தப்படாவிடின், ஏலவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% சதவீதத்தை வங்கி செலுத்தாதிருந்து ஆதனத்தை மீளவிற்பனை செய்வதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**இல. 11/55, போகஹவத்த,**
**குடாபுத்கமுவ, அங்கொடை**
**தொலைபேசி இல. 0112053286/072 3207533**
**076 9217329/ 072 0881044**

**ஈ.எஸ். ராமநாயக்க**
**நீதிமன்ற ஆணையாளர்**
**உரிமம் பெற்ற ஏல**
**விற்பனையாளர் மற்றும்**
**மதிப்பீட்டாளர்.**


மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk

16.09.2020 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 714,366
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 41,893,986.40
ரூ. 11,760,656.40 பவர் சுப்பர் பரிசு 01 ரூ. 2,000,000.00 பரிசுகள் 02 ரூ. 1,000,000.00 பரிசு 01 ரூ. 100,000.00 பரிசுகள் 28
www.nlb.lk
NLB NATIONAL LOTTERIES
















## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 39 அ (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2006 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 02 ஆந் திகதிய 1434/26 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) பிரசுரிக்கப்பட்ட 2006 ஆம் ஆண்டின் 77ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித்துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச்சட்டத்தின் (1979ஆம் ஆண்டின் 8ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டுகளை மாத்திரம் இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

**எஸ்.எம்.சந்திரசேன.**
**காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர்,**

எனது இல. : LD/ 05/ 2003/ NH/ 596.
பிரதேச செயலாளர் இல. : MOR/ LAN/ LU/ DIV-02.

**காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு,**
**“மிஹிகத மெதுர”, காணிச் செயலகம்,**
**இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,**
**பத்தரமுல்லை,**
**2020, யூலை 08.**

**அட்டவணை**

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், மொரட்டுவ பிரதேச செயலாளர் பிரிவில், லக்ஸபதிய வடக்கு இல. 550A, கிராம அலுவலர் பிரிவில், லக்ஸபதிய (பிரிவு இல. 1, மொரட்டுவ மாநகர எல்லையினுள்) கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2019.11.04 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட CO/ MRT/ 2017/ 71 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட 0.0425 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்டுள்ள எல்லைகளுள் அமைந்த காணித்துண்டுகள் :

1. துண்டு A - வரி மதிப்பீட்டு இல. 83/13, அங்குலான புகையிரத நிலைய வீதி - விஸ்தீரணம் : 0.0349 ஹெக்டயார்

   வடக்கு: அங்குலான புகையிரத நிலைய வீதியின் வரி மதிப்பீட்டு இல.83/13 ஐ கொண்ட காணி, வீதி மற்றும் எளு கால்வாய்; கிழக்கு : வீதி, எளு கால்வாய், துண்டுகள் E,D,C,B மற்றும் G; தெற்கு : துண்டுகள் E, D, C, B, G மற்றும் சீமெந்து வடிகால்; மேற்கு : சீமெந்து வடிகால் மற்றும்
   அங்குலான புகையிரத நிலைய வீதியின் வரி மதிப்பீட்டு இல. 83/13 ஐ கொண்ட காணி.

2. துண்டு B - வரி மதிப்பீட்டு இல. 83/13 அங்குலான புகையிரத நிலைய வீதி - விஸ்தீரணம் : 0.0001 ஹெக்டயார்

   வடக்கு : துண்டு A ; கிழக்கு : துண்டுகள் C மற்றும் D; தெற்கு:துண்டு D ; மேற்கு : துண்டுகள் G மற்றும் A.

3. துண்டு C - வரி மதிப்பீட்டு இல. 83/13 அங்குலான புகையிரத நிலைய வீதி - விஸ்தீரணம் : 0.0003 ஹெக்டயார்

   வடக்கு : துண்டு A ; கிழக்கு : துண்டுகள் E மற்றும் D ; தெற்கு:துண்டு D ; மேற்கு : துண்டுகள் B மற்றும் A.

4. துண்டு D - வரி மதிப்பீட்டு இல. 83/13 அங்குலான புகையிரத நிலைய வீதி - விஸ்தீரணம் : 0.0012 ஹெக்டயார்

   வடக்கு : துண்டுகள் G,A,B,C மற்றும் E ; கிழக்கு : துண்டுகள் E மற்றும் F ; தெற்கு : துண்டு F மற்றும் சீமெந்து வடிகால் ; மேற்கு :சீமெந்து வடிகால், துண்டுகள் G, A, B மற்றும் C.

5. துண்டு E - வரி மதிப்பீட்டு இல. 83/ 13 அங்குலான புகையிரத நிலைய வீதி - விஸ்தீரணம் : 0.0046 ஹெக்டயார்

   வடக்கு : துண்டு A மற்றும் எளு கால்வாய் ; கிழக்கு : எளு கால்வாய் மற்றும் துண்டு F ; தெற்கு : துண்டு F மற்றும் D ; மேற்கு : துண்டுகள் D,C மற்றும் A.

6. துண்டு G - வரி மதிப்பீட்டு இல. 83/ 13 அங்குலான புகையிரத நிலைய வீதி - விஸ்தீரணம் : 0.0014 ஹெக்டயார்

   வடக்கு : துண்டு A ; கிழக்கு : துண்டுகள் B மற்றும் D ; தெற்கு: துண்டுகள் D, F மற்றும் சீமெந்து வடிகால் ; மேற்கு : சீமெந்து வடிகால், துண்டு A.

07 - 733

## இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள் ளது) | மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/04/PT/6091(MP) | 06 Nos. Boom Hoist Wire Ropes Ø30.00MM and 785M & 550M | 130,000.00 | 3,500.00 | 15-10-2020 மு.ப. 10.00 மணி |
| CES/FP/06/PT/6093(MAR) | Spares for Aquamaster US 3001 CP Propulsion Units of Tug Gotaimbara | 48,000.00 | 1,000.00 | 15-10-2020 மு.ப. 10.00 மணி |
| CES/FP/05/PT/6112(MAR) | Control Valves for US3001 CP Aquamaster Propulsion Unit of Tug Suranimala | 30,000.00 | 1,000.00 | 15-10-2020 மு.ப. 10.00 மணி |
| CES/FP/03/PT/6120(MP) | Yaskawa 215 Modules for JCT Cranes | 125,000.00 | 3,500.00 | 15-10-2020 மு.ப. 10.00 மணி |
| CES/FP/04/PT/6111(MP) | 24 Nos. of Head Block Twist Lock for Mitsui STS Cranes at JCT | 24,000.00 | 1,000.00 | 20-10-2020 மு.ப. 10.00 மணி |
| CES/FP/06/PT/6087(MAR) | Spares for BombasAzcue SP-MO-36/10 Hydrophore Pumps of M/T Gotaimbara & M/T Suranimala | 18,000.00 | 1,000.00 | 20-10-2020 மு.ப. 10.00 மணி |
| CES/FP/04/PT/6096(EL) | 1000 Nos. Carbon Brushes for JCT STS Cranes | 125,000.00 | 3,500.00 | 22-10-2020 மு.ப. 10.00 மணி |
| CES/FP/05/PT/6107(MAR) | Supplying, Installation and Commission of Brand New Governor Unit Wartsila 9L20 STBD Main Engine of M/T Vijayabahu | 35,000.00 | 1,000.00 | 22-10-2020 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/20/PT/07/013 -B | 10 Nos. Desktop Computers | 28,800.00 | 1,000.00 | 08-10-2020 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/20/PT/14/014 | 02 Nos. 500/400 Ton Hydraulic Jacks for STS Cranes Lifting UP with AN Electric Drive Pump | 50,000.00 | 1,000.00 | 08-10-2020 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/17/PT/01/059 | 2000 Mtrs. Cloth Drill | 12,100.00 | 1,000.00 | 09-10-2020 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/20/PT/08/054 | 20 Nos. Roller Bearing – 23132 for Mitsui STS Cranes at JCT | 20,000.00 | 1,000.00 | 09-10-2020 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/20/PT/14/053 | Spares for Mitsubishi / Caterpillar DP 25 Fork Lift Trucks (48 Items ) | 65,000.00 | 1,000.00 | 12-10-2020 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/20/PT/04/054 | Supply of Shirts Short / Long Sleeves – 2500 Nos. | 25,000.00 | 1,000.00 | 12-10-2020 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/20/PT/07/056 | Motor Tyres 1000X20 16 PLY (Cross PLY) | 34,900.00 | 1,000.00 | 12-10-2020 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/20/PT/14/055 | 50 Nos. Dry Charged Batteries | 20,000.00 | 1,000.00 | 13-10-2020 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/20/PT/07/053 | 1800 Nos. Motor Tubes 1000 X 20 LN for Prime Movers. Yard Tractors & Trailers | 50,500.00 | 1,000.00 | 13-10-2020 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/20/PT/14/051 | Leaf Spring Blades for SLPA Vehicles | 34,000.00 | 1,000.00 | 13-10-2020 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/20/PT/16/016 | 73 Nos. Non – Inverter Air Conditioner – Split Type (Wall Mounted ) | 112,000.00 | 3,500.00 | 14-10-2020 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும் படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது மூன்று (3) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2020 செப்டெம்பர் 18ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் மூடும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் மூடும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2482638**
**தொலைநகல் இல. 2381652, 2470443**

## பன்னல பிரதேச சபை

## 2021ஆம் ஆண்டிற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்ளல்

2021ஆம் ஆண்டில் பின்வரும் அட்டவணையில் காணப்படும் சேவைகள், பண்டங்களை வழங்குதல் மற்றும் ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்து கொள்ள ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பெயர், முகவரி, வியாபாரத்தின் தன்மை, தகைமைகள் மற்றும் ஏனைய விபரங்களுடன் பதிவுக் கட்டணம் மற்றும் அதற்கான வரிகளுடன் பதிவுத் தபாலில் எனக்கு அனுப்பபடல் வேண்டும். காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் “செயலாளர், பன்னல பிரதேச சபை” எனக் குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும். இதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் 2020.12.31 அன்று பி.ப. 02.30 இற்கு முடிவுறும். விண்ணப்பங்களை அடக்கும் தபாலுறைகளின் இடது பக்க மேல் மூலையில் “வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்ளல் - 2021” எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

| | வழங்கல்கள் | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 01. | மின் உபகரணங்கள் மற்றும் துணை உறுப்புக்கள் (வீதி விளக்குகளிற்கான உறுப்புக்களுடன்) | 1170.00 |
| 02. | அலுவலக உபகரணங்கள் - மரத் தளபாடங்கள், உருக்கு வீட்டுப்பண்டங்கள் | 585.00 |
| 03. | எழுது கருவிகள், அச்சடிக்கப்பட்ட படிவங்கள் மற்றும் கோவைகள் | 585.00 |
| 04. | வாகன உதிரிப்பாகங்கள் - டயர், டியூப் மற்றும் பெற்றரிகள் | 585.00 |
| 05. | நீர்க்குழாய் கைத்தொழிலுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் துணை உறுப்புக்கள் | 585.00 |
| 06. | வாகன அனுமதிப் பத்திரங்களிற்கான தகடுகள், வாகன ஸ்டிக்கர்கள் | 585.00 |
| 07. | சுகாதாரப் பிரிவிற்கான உபகரணங்கள் மற்றும் கிருமிநாசினிப் பொருட்கள் (கம்பூட்ஸ், கிளவுஸ் போன்றவை) | 585.00 |
| 08. | நூலகப் புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் | 585.00 |
| 09. | கைத்தொழில்களிற்குத் தேவையான பண்டங்கள் (கல், மணல், தார், சரளைக்கற்கள், சீமெந்து, ஃபிரீமிக்ஸ் சிறுகற்கள் குட்டிகல்) | 585.00 |
| 10. | வீதிப் பராமரிப்பு உபகரணங்கள் (தாச்சி, உருக்கு ஏணிகள், ரேக்கைகள், வீல்பரோக்கள், பிரம்புக் கூடைகள், புல் வெட்டும் இயந்திரங்கள்) | 585.00 |
| 11. | சீருடைத் துணிகள் - (முன்பள்ளி சீருடைகள் துணி, சாரிகள், தொப்பிகள், பைகள், நீர் போத்தல்கள், குடைகள்) | 585.00 |
| 12. | விளையாட்டுப் பண்டங்கள் | 585.00 |
| 13. | அனைத்து வகையான குழாய்கள், கம்பித் தூண்கள் மற்றும் கொங்கிரீட் உற்பத்திகள் | 585.00 |
| 14. | அனைத்து வகையான தும்பு உற்பத்திகள் மற்றும் இறப்பர் உற்பத்திகள் (கூட்டுமாறுகள், தூரிகைகள், தரை விரிப்புகள்) | 585.00 |
| 15. | அனைத்து வகையான நிறப்பூச்சுக்கள் | 585.00 |
| 16. | அறிவித்தல் பலகைகள் | 585.00 |
| 17. | நாய்களிற்கான கழுத்துப் பட்டிகள் | 585.00 |
| 18. | போட்டோ கொப்பி இயந்திரங்கள் மற்றும் அச்சு பொறிகளிற்கான மை வகைகள் மற்றும் டோனர்கள் | 585.00 |
| 19. | கேஸ் (LP 37.5 kg) | 585.00 |
| 20. | நடமாடும் கழிவறைகள் | 585.00 |
| 21. | மரக்கன்றுகள் (பழங்கள், மரக்கறி, மலர், மூலிகைச் செடிகள் மற்றும் கும்பக், இலுப்பை போன்ற செடிகள்) | 585.00 |
| 22. | மலர்ச்சாடிகள் | 585.00 |
| 23. | அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் | 585.00 |
| 24. | மின் பிறப்பாக்கிகள் | 585.00 |
| 25. | வளிச்சீராக்கி இயந்திரங்கள் | 585.00 |
| 26. | திரைச்சீலைகள் | 585.00 |
| 27. | வீட்டுத்தளபாடங்கள் | 585.00 |
| 28. | கணனிகள் மற்றும் டெப்கள் (Tabs) | 585.00 |
| 29. | ஆயுர்வேத அழகுசாதன நிலைய உபகரணங்கள் | 585.00 |
| 30. | ஒட்டி உருக்கும் வேலைகள், அறிவித்தல் பலகைகள் | 585.00 |
| 31. | உணவு பானங்கள் | 585.00 |
| 32. | விழா மண்டபங்கள் | 585.00 |
| 33. | அலங்காரப் பொருட்கள் | 585.00 |
| | **சேவைகள்** | |
| 01. | வாகனங்களிற்கான சர்விஸ்கள் மற்றும் வாகனப் பழுதுபார்த்தல்கள் (அதிகாரப் பிரிவில் அல்லது அதற்கு அண்மித்ததாகவிருத்தல் வேண்டும்) | 585.00 |
| 02. | அலுவலக உபகரணங்களைப் புதுப்பித்தல் (கணனிகள், போட்டோ கொப்பி இயந்திரங்கள், தட்டச்சு இயந்திரங்கள், ரோணியோ இயந்திரங்கள்) | 585.00 |
| 03. | இறப்பர் முத்திரைகளை தயாரித்தல், அறிவித்தல் பலகைகள் மற்றும் பதாகைகளைத் தயாரித்தல் | 585.00 |
| 04. | டயர் மற்றும் டியூப்களை மீள் நிரப்புதல் | 585.00 |
| 05. | வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்கல் (ட்ரக்டர், லொறி, டிப்பர் கியூப் 1, 2, 3 Km மற்றும் 1இற்கு மேல் 1Km வாடகை, நீர் பவுசர் லீட்டர் 3000/5000) வீதித்தகர்ப்பு இயந்திரங்கள் தொன் 8/10/12 வெக்கர்கள், (Wackers) ட்ரேலர்களுடன் கூடிய ட்ரக்டர்களுடன் பெக்கோ இயந்திரங்கள் 30 WJCB) | 585.00 |
| 06. | அபாயகரமான மரங்களை வெட்டி அகற்றுதல் | 585.00 |
| 07. | செய்தித்தாள்கள், போத்தல்கள் மற்றும் சிதைவடைந்த பண்டங்கள் கொள்வனவு | 585.00 |
| 08. | மரத்தளபாடங்களைப் புதுப்பித்தல் | 585.00 |
| 09. | சட்டத்தரணிகளின் சேவைகள் மற்றும் காணி அளத்தல் சேவைகள் | 585.00 |
| 10. | ஒலிபெருக்கிகள், விழாக்களிற்கான பண்டங்கள், தற்காலிகக் கூடாரங்கள் வாடகைக்கு வழங்கல் | 585.00 |
| 11. | தச்சு வேலைகள், மேசன் வேலைகள், உருக்கி ஒட்டும் வேலைகள், நீர்க்குழாய் கைத்தொழில் சேவை, உள்ளக தொலைபேசி சேவைகள் | 585.00 |
| 12. | அலுவலக அடையாள அட்டைகளைத் தயாரித்தல் | 585.00 |
| 13. | நீர்ப்பம்பிகளைப் பழுதுபார்த்தல் | 585.00 |
| 14. | கணனி வலையமைப்பை ஏற்படுத்துதல் | 585.00 |
| 15. | ஒலிபெருக்கி இயந்திரங்களை வழங்கல் | 585.00 |
| | **ஒப்பந்தக்காரர்கள்** | |
| | குறிப்பிட்ட 10 இலட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களின் பதிவுக்கான (ICTA ADD சான்றிதழ் கண்டிப்பாகத் தேவை) | |
| 01. | ஒரு இலட்சம் (100000.00) முதல் 500000.00 வரையான கைத்தொழில்களிற்கான ஒப்பந்தக்காரர்கள் | 1175.00 |
| 02. | 500000.00 முதல் 1000000.00 வரையான கைத்தொழில்களிற்கான ஒப்பந்தக்காரர்கள் | 1755.00 |
| 03. | 1000000.00 முதல் அதற்கு மேற்பட்ட கைத்தொழில்களிற்கான ஒப்பந்தகாரர்கள் | 2340.00 |

தேவையான சந்தர்ப்பங்களில் பதிவு செய்யப்பெற்றுள்ள வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர் களிற்குப் புறம்பாக வேறு வழங்குநர்களிடமிருந்து வழங்கல்களையும் சேவைகளையும் பெற்றுக்கொள்ளும் அதிகாரம் சபைக்கு உரித்தாகும்.

அலுவலக நேரங்களில் இவ்வலுவலகத்தில் மேலதிக விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

**தொ.பே. 037-2246069**
**.................... திகதி**
**பன்னல பிரதேச சபை பிரதான அலுவலகத்தில்**

**எல்.எம்.எஸ்.கே. ரன்ஜித் லங்ஸகார**
**தலைவர்,**
**பன்னல் பிரதேச சபை**




இந்த சேவை தற்போது நாடு பூராகவும் செயற்படுத்தப்படுகிறது.
லேக்ஹவுஸ் சமூக சேவை

# “களிப்பெனும் கடலுள் ஆழ்த்தும் காதலின் இன்பம்”

## சங்க இலக்கியங்கள் தரும் மாமூலனார் பாடல்கள்





குறிஞ்சி என்பது மலையும் மலை சார்ந்த இடத்தைக் குறிக்கும். ஒழுக்க வகையால், தலைவனும் தலைவியும் கூடி ஒழுகும் புணர்தலும் புணர்தல் நிமித்தமும் ஒழுக்கத்தைக் குறிக்கும். குறிஞ்சியொழுக்கத்திற்கு உரிய காலமாகக் ‘கூதிர்’ என்ற பெரும்பொழுதும், ‘யாமம்’ என்ற சிறுபொழுதும் கொள்ளப்பட்டன. கூதிர்க்காலம் என்பது குளிர் மிகுந்த ஐப்பசியும் கார்த்திகையும் ஆகும்.

ஓர் ஆடவன் ஒரு பெண்ணைக் காதலித்து அவளை மணந்து கொள்வதென முடிவுசெய்து கொண்டால் அவளை அடைவதற்குப் பல்வகையானும் முயல்வான்.

அவ்விதம் முயலுங் காலத்தில், தான் காதலித்த தலைவியை அடிக்கடிக் காணவும் உரையாடவும் முடியாது அல்லல் படுவதும் உண்டு.

அப்பொழுது அத்தலைவியின் ஆருயிர்த் தோழியை அறிந்து அவள் வழியாகத்தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள முயல்வான்.

களவொழுக்கத்தில் தோழி ஆற்றவேண்டிய தொண்டுகள் மிகப்பல. அவளே காதலர் காதல் வளர்ந்து உருவாகி மணம் நிகழ்வதற்குப் பெரிதும் துணைபுரிவாள்.

ஆதலின் தலைவன் தோழியை நெருங்கித் தன் கருத்தைக் குறிப்பாக உணர்த்துங்கால், தோழி அறிந்தும் அறியாதாள் போல் தலைவனைப் பல்வகையானும் ஆராய்வாள்.

தலைவி இளையள்’ என்பாள். “அவள் பெற்றோர் உனக்கு மனஞ்செய்து கொடுக்கமாட்டார்கள்” என்பாள் “நீயே சென்று உன் கருத்தைத் தெரிவித்துக் கொள்; என்னுடன் கூறாதே” என்று கருத்துக் கூறுவாள். இச் சமயங்களில் தலைவன் உள்ளம் எப்படி இருக்கும். என்பதை உய்த்து உணர்ந்து கொள்ளலாம்.

இவ்விதம் கூறித் தலைவனை அப்பால் நிறுத்தும் நிகழ்ச்சிகளைச் ‘சேட்படை’ என்பர் அகப்பொருள் நூலார். வெளிப்படையாக இவ்விதம் கூறுவதெல்லாம் தலைவன் உளப்பாங்கை அறியவே.

மனத்தினுள் அவன் பால் இரக்கங்கொண்டு அவனுக்கு வேண்டுவன செய்யும் விருப்பம் மிகுதியும் உடையவளவாய் இருப்பாள்.

இப்பாடலில் தோழி, தலைவனைச் செயற்படுத்தவே தலைவன் வருந்திக் கூறுகின்ற முறையை தெரிவிப்பாள்.

தன் நிலையை ஒளியாமல் கூறுகின்றான். பாம்பு கடித்த மனிதனுக்குத் தன்னை ஒப்பிடுகின்றான். தன் செயலை முடித்துத் தர வேண்டுமென்று அவளுக்குப் பல தடவை கூறுகின்றான்.

“இனி நீதியல்ல; தகாது நகைக்காதே. என் உள்ளம் உடையும்” என்றெல்லாம் கெஞ்சுகின்றான். மாமூலனார் அருமையாகத் தலைவன் உள்ளத்தை விளக்கிக் காட்டுகின்றார்.

தலைவியின் கண்ணை ‘அம்பு’ என்கிறார். அம்பு உடலைத் தான் புண்படுத்தி, உடலையும் வாட்டி உயிரையும் போக்கும். காதலன் மனக் கருத்தை நிறைவேற்றாத குறிப்பைத் தரும். காதலி பார்வை, காதலன் உள்ளத்தில் கடுந்துன்பம் விளைக்கும், கருத்தை நிறைவேற்றும் குறிப்பைத்தரின் களிப்பெனும் கடலுள் ஆழ்த்தும். (ஸ)

## வாழ்வின் தெளிவு

தேகம் ஒன்று எரிகிறதே
தெரிகிறதா? உற்றுப்பாருங்கள்
தாகம் சிலவும் தீர்ப்பதற்கு
பாவம் பலவும் செய்துவிட்டு
தங்குமிடங்கள் முடிவடைய
தனியாச் சிதையினில் கிடந்து
தகதகத்து எரிகிறதே
பதை பதைத்துப் பாருங்கள்!
காமப் புனலில் நீராடி....!

சாமங்களிலெல்லாம் விளையாடி
ஏழைகள் தம்மை சூறையாடி
கட்டிய கோட்டைகள் பலமாடி
கை கொடடிச் சிரிக்கையினே!
தேடிய செல்வம் தெருவெல்லாம்
கோடி கோடியாய் கிடக்கையிலே....
கோவணமுமின்றி நெருப்பினிலே
தேகம் ஒன்று எரிகிறதே
தெரிகிறதா? உற்றுப் பாருங்கள்!

வட்டி பெற்று நகைபோட்டு
வடிவாய்ப் பெருத்த உடல் வளர்த்து
கட்டி வைத்த பணமெல்லாம்
காற்றில்உதிர்ந்து போகையிலே,
தட்டிக்குள்ளே தலை கவிழ்ந்து
தனியாய்க்கிடந்து எரிகின்றான்
ஏய்த்துப் பிறரை வருத்துவதும்!
ஏழைகள் என்று தூற்றுவதும்!
வறியோர்க்கான உதவிகளை

வாரி எடுத்து வாழ்வதுமாய்
தீமைகள் புரிந்த ஒருமனிதன்
தேகம் கருக எரிகின்றான்
தெரிகிறதா உற்றுப் பாருங்கள்!
தெரிந்தால் இதுதான் தத்துவமாய்
தெளிந்து வாழ்வைக் காணுங்கள்

கறுவாக்கேணி
முத்து மாதவன்

## கலைக் கதம்பம்

சைத்திரியன்

# கொடகே தேசிய சாகித்திய விருது விழா











கொடகே தேசிய சாகித்திய விருது விழா கடந்த 10ஆம் திகதி மணிக்கு, கொழும்பு, இலங்கை மன்றக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

விழாவில் பேராசிரியர் சந்திரசிறி பள்ளியகுரு, பேராசிரியர் சுனந்த மஹேந்திர, எழுத்தாளர் எஸ். முத்துமீரான் ஆகியோருக்கு சிங்களம், ஆங்கிலம், தமிழ் மொழியிலான இலக்கிய பங்களிப்பைக் கௌரவிக்கும் கொடகே வாழ்நாள் சாதனை விருதுகள் வழங்கப்பட்டன.

விழாவில் கடந்த ஆண்டு சிங்களம், தமிழ் ஆங்கில மொழிகளில் வெளிவந்த நூல்களில் சிறந்த நூல்களுக்குக் கொடகே விருதுகள் வழங்கப்பட்டன. தமிழில்

சிறந்த நாவலாக மலரன்பனின் ‘பால் வனங்களில்’ தெரிவு செய்யப்பட்டது.

சிறந்த சிறுகதைத் தொகுப்பாக க.கோபாலபிள்ளையின் 'அசை' சிறந்த கவிதைத் தொகுப்புகளாக சித்தி றபீக்கா பாயிஸின் 'வற்றாத ஈரம்' மற்றும் மு. லெ.அச்சி முகமட்டின், "எனது நிலமும் நிலவும'; ஆகிய தொகுப்புகள் தெரிவு செய்யபபட்டன.

சிறந்த நூலாக ஷியாவின் 'வலித்திடினும் சலிக்கவில்லை' தெரிவு செய்யப்பட்டது. (ஸ)

# உலகின் ஒப்பற்ற நூல் திருக்குறள்

**பரிமேலழகருக்கு முன்பே மடக்குடவர் உரை விளக்கம்**

**ஆங்கிலத்தில் மாத்திரம் ஐம்பது பேர் உரை வழங்கியுள்ளனர்.**



உலகின் விழுமிய எழுத்தோவியமாக விளங்குவது திருக்குறள். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியவர் திருவள்ளுவர். முப்பால் என்னும் பெயருடன் திருவள்ளுவர் நல்கிய நூல் திருக்குறள் உலக மக்களால் ஏற்றுப் போற்றப்படுகிறது.

திருக்குறளுக்கு பத்தாம் நூற்றாண்டில் உரை விளக்கம் வழங்கியவர் மடக்குடவர்; பதின்மூன்றாம் நூற்றாண்டில் உரை வரைந்தவர் பரிமேலழகராகிய வண்துவரைப் பெருமாள். இது வரை முந்நூறுக்கு மேற்பட்டோர் உரைகள் தந்துள்ளனர். திருக்குறளை 1595ஆம் ஆண்டு மலையாளத்தில் மொழிபெயர்த்தவர் இராமசாமி; 1730 ஆம் ஆண்டு லத்தீனில் வழங்கியவர் வீரமாமுனிவர்; ஆங்கிலத்தில் நல்கியவர் கிண்டர்சுலி (1794). விவிலியத் திருநூல் போன்று பெருமை செய்தவர் சார்ச்சு யுக்ளோ போப்பு (1886).

ஆங்கிலத்தில் மட்டும் ஐம்பது பேர் உரை வழங்கியுள்ளனர். நரிக்குறவர் பேசும் "வக்கிரபோலி' மொழியில் கிப்டு சிரோமணி ஆக்கிய திருக்குறள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றுள்ளது. கொரிய மொழிபெயர்ப்பு உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தால் வெளிவந்துள்ளது.

திருவள்ளுவர் குமரிக் கண்டத்தில் தோன்றியவர்; சென்னை மயிலாப்பூரில் வாழ்ந்தவர்; மதுரையில் திருக்குறள் அரங்கேற்றம் இடமபெற்றுள்ளது.

திருவள்ளுவரின் தந்தை பெயர் "பேராழி மாமுனி' என்று யாழ்ப்பாணம் மானிப்பாய் அமெரிக்க மிசன் அச்சக அகராதியில் (1874 ஆம் ஆண்டு) குறிப்பிடப்பட்டுள்ளது. நா.கதிரவேற்பிள்ளையின் "தமிழ் மொழி அகராதி' யில் இத் தகவல் இடம்பெற்றுள்ளது (பக்.1092). "உலகப் பொதுச் சட்டம்' என்று திருக்குறளை முன்னீர்ப் பள்ளம் பூரணலிங்கம் போற்றினார்; "உலகின் விழுமிய எழுத்தோவியம்' என்று திரு. வி.கல்யாணசுந்தரம் பாராட்டினார். பன்னாட்டு நிறுவனமாகிய, உலகக் கல்வி அறிவியல் பண்பாட்டு மையம் "உலகின் ஒப்பற்ற நூல் திருக்குறள்' என்று பறைசாற்றுகிறது.

இருபது நூற்றாண்டுகளாகப் போற்றிப் பாராட்டப்படும் திருக்குறளை உலக மக்கள் அனைவரும் ஏற்று, வாழ்வியல் ஆக்கும் நாளை எதிர்நோக்குவோம்.

**முனைவர் போல்வளன்**
**(உலகத் திருக்குறள் மையம்)**

# கொமன்வெல்த் அறக்கட்டளை சிறுகதைப் போட்டி-2021

## இலங்கை எழுத்தாளர்களுக்கும் வாய்ப்பு!

பொது நலவாய அறக்கட்டளை அமைப்பு பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த எழுத்தாளர்களுக்கான சிறுகதைப் போட்டியினை 2012ஆம் ஆண்டு முதல் வருடாந்தம் நடத்தி வருகிறது. இந்த அமைப்பின் அடுத்த ஆண்டுக்கான சிறுகதைப் போட்டிக்கு ஆக்கங்கள் கோரும் அறிவிப்பு தற்போது வெளியாகியுள்ளது. இலங்கை, இந்தியா நாடுகளும் இதில் பஙகேற்க முடியும்.

அத்துடன் ஆப்பிரிக்கா, ஆசியா, கனடா மற்றும் ஐரோப்பா, கரீபியன், பசுபிக் என்று ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஆப்பிரிக்க மண்டலத்தில் 19 நாடுகளும் 3 பெருங்கடல் பிரதேசங்களும், ஆசிய மண்டலத்தில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் உள்ளிட்ட 9 நாடுகளும்கனடா மற்றும் ஐரோப்பா மண்டலத்தில் 4 நாடுகளும் 2 பெருங்கடல் பிரதேசங்களும், கரீபியன் மண்டலத்தில் 12 நாடுகளும் 6 பெருங்கடல் பிரதேசங்களும்பசுபிக் மண்டலத்தில் 11 நாடுகளும், 3 பெருங்கடல் பிரதேசங்களும் இதில் இடம் பெற்றிருக்கின்றன.

இச் சிறுகதைப் போட்டிக்கு தமிழ், ஆங்கிலம், வங்காளம், சீனாபிரெஞ்சு, கிரேக்கம், கிஸ்வாகிலி, மலாய், போர்த்துக்கீசு, சமோவன், துருக்கீஷ் ஆகிய 11 மொழிகளில் சிறுகதையினை சமர்ப்பிக்க முடியும்.

இவை தவிர பொதுநலவாயநாடுகளைச் சேர்ந்த எந்த ஒரு மொழியிலான சிறுகதையினையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்து சமர்ப்பிக்கலாம்.

இப்போட்டியில் பங்கேற்பதற்கான விதிமுறைகள்;

பொதுநலவாய நாடுகளில் குடியுரிமை பெற்ற 18 வயதுக்கு மேற்பட்ட எவரும் இந்தச் சிறுகதைப் போட்டியில் பங்கேற்க முடியும்.

மொழிபெயர்க்கப்பட்ட சிறுகதை உட்பட அனைத்துச் சிறுகதைகளும்சிறுகதையின் ஆசிரியராலேயே சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஒருவர் ஒரு சிறுகதையினை மட்டுமே சமர்ப்பிக்கலாம்.

ஈமெயில் படிவத்தின் வழியாக மட்டுமே சிறுகதையினைச் சமர்ப்பிக்க வேண்டும்.

சமர்ப்பிக்கப்படும் சிறுகதைகள் எழுத்தாளரின் சொந்தக் கதைகளாக இருக்க வேண்டும். அந்தக் கதை இதற்கு முன்பாகஎதிலும் வெளியிடப்பட்டதாக இருக்கக் கூடாது.

அதே போன்றுஇதற்கு முன்பு காமன்வெல்த் சிறுகதைப் போட்டிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கதைகளாக இருக்கவும் கூடாது.

சமர்ப்பிக்கப்படும் சிறுகதைகள் 2000 சொற்களுக்குக் குறைவில்லாமலும் 5000 சொற்களுக்கு மேற்படாமலும் அமையவேண்டும்.

ஒவ்வொரு பக்கத்திலும் பக்க எண்,கதையின் தலைப்பு ஆகியவை இடம் பெற்றிருக்க வேண்டும்.

போட்டிக்கான சிறுகதைகள்சிறுகதையின் தலைப்புப் பெயரில் பிடிஎஃப் கோப்பாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். பிடிஎஃப் வடிவத்தில் சமர்ப்பிக்க இயலாத நிலையில் வேர்ட் கோப்பாகவும் சமர்ப்பிக்கலாம். சிறுகதைபொதுநலவாய என்று பொதுவான தலைப்பாக இருக்கக் கூடாது.

கதையின் அமைப்பு, வகை, கரு என எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லை. கதை வயது வந்தவர்களுக்கானதாக இருக்க வேண்டும். குழந்தைகளுக்காக எழுதப்பட்டதாக இருக்கக் கூடாது.

சமர்ப்பிக்கப்பட்ட சிறுகதைகள் பங்கேற்பாளரின் நாட்டைப் பொறுத்து மதிப்பிடப்படும்.

இதற்கு முன்பு பொதுநலவாய சிறுகதைப் போட்டியில் பங்கேற்று வெற்றியாளராகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் மீண்டும் இப்போட்டியில் கலந்து கொள்ள முடியாது. மண்டல மட்டத்தில் பரிசு பெற்றவர்கள் மீண்டும் இப்போட்டியில் பங்கேற்க முடியும்.

போட்டிக்கான சிறுகதைகளைச் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி நவம்பர் முதலாம் திகதியாகும் இப்போட்டிக்கான சிறுகதைத் தெரிவுக்குழுவிற்கு மண்டலம் வாரியாக ஒரு நடுவர் வீதம் ஐந்து நடுவர்கள் சர்வதேச அளவில் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

போட்டிக்கான சிறுகதைகள் மண்டல வாரியாகப் பரிசீலிக்கப்பட்டு ஐந்து மண்டலங்களுக்கும் தனித்தனியாக பரிசுக்குரிய ஐந்து கதைகள் தேர்ந்தெடுக்கப்படும்.

ஐந்து கதைகளிலிருந்து ஒட்டுமொத்த பரிசுக்குரிய கதையாக ஒரு கதை தேர்வு செய்யப்பட்டுஅக்கதைக்கு ரூ.5,000 பரிசுத்தொகை வழங்கப்படும். மற்ற நான்கு கதைகளுக்கும் ரூபா 2,500 வீதம் பரிசுத்தொகை வழங்கப்படும்.

கதை சமர்ப்பித்தலில் ஏதாவது சந்தேகம், தொழில்நுட்பச் சிக்கல்கள் ஏற்படும் நிலையில் writers@commonwealth.int எனும் மின்னஞ்சலில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறலாம்.

இப்போட்டி குறித்த தகவல்களுக்கும்முந்தைய போட்டிகள் மற்றும் பரிசு பெற்றவர்கள் குறித்த தகவல்களுக்கும் https://www.commonwealthwriters.org/cssp2021எனும் இணைய முகவரியைப் பயன்படுத்தலாம்.(ஸ)

# அல் - குர்ஆனின் அற்புதம்



**சர்வ** வல்லமை படைத்த அல்லாஹ்த ஆலாவை ஆசானாகவும் வகுப்பாளராகவும் கொண்டது தான் அல் குர்ஆன். அது முற்றிலும் அவனது வசனங்கள், சொற்கள். அதில் வேறு எவரது சொல்லும் வசனமும் கிடையாது. அல்லாஹ்வின் ஏற்பாடு, கட்டளை மற்றும் வழிகாட்டல்களுக்கு ஏற்ப ஜிப்ரீல் (அலை) அவர்கள் ஊடாக காலசூழ்நிலைகளுக்கு அமைய கட்டங்கட்டமாக அருளி உலகில் செயலுருப்படுத்தப்பட்டது. இருந்தும் இக்குர்ஆனில் இஸ்லாத்தின் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களது ஒரு சொல்கூட கிடையாது. அதனை அல்லாஹ்வே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றான்.

'(நம்முடைய தூதராகிய) உங்களுடைய தோழர் வழி தவறிவிடவுமில்லை. தவறான வழியில் செல்லவுமில்லை. அவர் தன் இஷ்டப்படி எதனையும் கூறுவதில்லை. இது அவருக்கு வஹி மூலம் அறிவிக்கப்பட்டதேயன்றி (வேறு) இல்லை. (ஜிப்ரீல் என்னும்) பராக்கிரமசாலியே இதனை அவருக்கு கற்றுக்கொடுக்கிறார். அவர் மிக்க ஆத்ம சக்தியுடையவர். (தன் இயற்கை ரூபத்தில் அவர் உங்கள் முன்) தோன்றினார். அவர் உயர்ந்த வானத்தின் கடைக் கோடியிலிருந்து இறங்கினார். பின்னர் நெருங்கினார். (சேர்ந்த) இரு வில்களைப் போல் அல்லது அதைவிட சமீபமாக அவர் நெருங்கினார். (அல்லாஹ்) அவருக்கு (வஹி மூலம்) அறிவித்ததையெல்லாம் அவர் அவனுடைய (நபியாகிய) அடியாருக்கு அறிவித்தார்.'

**(அல் குர்ஆன் 53:2 – 10)**

மற்றொரு வசனத்தில் 'அகிலத்தார்களின் இறைவனால் (இது) இறக்கியருளப்பட்டுள்ளது. யாதொரு வார்த்தையையும் அவர் எம்மீது கற்பனை செய்து பொய்யாகக்கூறினால், அவருடைய வலது கரத்தை நாம் (பலமாகப்) பிடித்துக் கொண்டு அவருடைய உயிர்நாடியை நாம் தறித்துவிடுவோம்'

**(அல் குர்ஆன் 69: 43 – 46)**

அதேநேரம் முஹம்மத் (ஸல்) அவர்களும் 'நானும் உங்களைப்போன்ற ஒரு மனிதர் தான். எனக்கு அல்லாஹ் அறிவிப்பதை உங்களுக்கு கூறுகின்றேன். மற்றப்படி வேறெதுவுமே என்னிடமில்லை' என ஒரு தடவை குறிப்பிட்டுள்ளதாக ஹதீஸில் பதிவாகியுள்ளது.

இதன்படி வஹி மூலம் அறிவிப்பட்டதை ஜிப்ரீல் (அலை) அவர்கள் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு கொண்டு வந்து சேர்த்தார்கள். அதனையே நபி(ஸல்) அவர்கள் மக்களுக்கு எடுத்துக்கூறி அறிவித்திருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்தியுள்ள அல்லாஹ், அவர் யாதொரு வார்த்தையையும் எம்மீது கற்பனை செய்து பொய்யாகக் கூறுவதில்லை என்பதையும் குறிப்பிட்டிருக்கின்றான். நபி (ஸல்) அவர்களும் அதனையே கூறியுள்ளார்கள்.

இவை அனைத்தும் அல் குர்ஆன் முற்றிலும் அல்லாஹ்வினுடையது என்பதை தெளிவாக உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

இக்குர்ஆன் பாதுகாப்பட்ட பதிவேடான லஃஹூல் மஹ்பூலில் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது. அதே ஒழுங்கில் தான் உலகிலும் இருக்கின்றது. உலகம் இருக்கும் வரையும் இதே ஒழுங்கில் தான் இது நீடித்து நிலைத்திருக்கும். ஒவ்வொரு மனிதனதும் இம்மை மறுமை வாழ்வின் சுபீட்சத்தையும் விமோசனத்தையும் நோக்கமாகவும் இலக்காகவும் கொண்டுள்ள இக்குர்ஆன், அல்லாஹ்வினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு முழுமையான வாழ்க்கைநெறியாகும்.

இவ்வாறு சிறப்பும் மகத்துவமும் பெற்று விளங்கும் இக்குர்ஆன், கி.பி. 571 இல் சவூதி அரேபியாவின் மக்காவில் பிறந்து வளர்ந்த முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அன்னாரின் 40 வது வயது முதல் அதாவது கி.பி 610 முதல் 633 வரையான காலப்பகுதியில் கட்டங்கட்டமாக அருளப்பட்டதோடு ஏக காலத்தில் செயலுருப்படுத்தப்பட்டு 23 வருட காலப்பகுதியில் முழுமைப்படுத்தப்பட்டது.

**மர்லின் மரிக்கார்**

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் அருளப்பட்ட இக்குர்ஆன் மக்களுடன் உரையாடியபடி தான் இறங்கியது. இதனைப் பெற்றுக் கொண்ட முதல்சமூகத்தினர்வாழ்ந்தகாலப்பகுதி இன்று போன்று வளர்ச்சி அடைந்திராத போதிலும் அம்மக்களது அறிவுத்தரத்திற்கு ஏற்ப அவர்களால் விளங்கிப் புரிந்திடக்கூடியதாக விளங்கியது இக்குர்ஆன்.

அதேநேரம் இக்குர்ஆன் ஏழாம் நூற்றாண்டில் அருளப்பட்ட போதிலும் அது உலகம் இருக்கும் வரையும் தோற்றம் பெறும் எல்லா நவீன யுகங்களிலும் பிறக்கும் அனைத்து மக்களோடும் உரையாடக்கூடியதாகவும் அவர்களால் விளங்கி புரிந்திடக்கூடியதாகவும் விளங்கிக்கொண்டிருக்கின்றது. அதேநேரம் இக்குர்ஆன் அருளப்பட்ட பிரதேசத்திற்கோ, நூற்றாண்டுக்கோ மாத்திரமுரியதல்ல. அது உலகலாவிய பொதுமறையாகும்.

இக்குர்ஆன் அருளப்பட்டு 14 நூற்றாண்டுகள் கடந்துவிட்ட போதிலும் அது என்றும் உயிரோட்டம் மிக்கதாகவும் நடைமுறைச் சாத்தியமானதாகவும் திகழுகின்றது. இன்றைய நவீன அறிவியல் டிஜிட்டல் யுக மக்களுடனும் உயிரோட்டத்துடன் உரையாடுகின்ற இக்குர்ஆன், இதே ஒழுங்கில் மறுமை வரையும் நீடித்திருக்கும். இது குர்ஆனுக்கேயுரிய மாபெரும் தனித்துவமும் அற்புதமுமாகும். அன்று அருளப்பட்ட குர்ஆன் தான் இன்றும் இருக்கின்றது. அன்றைய மக்களுக்கு எவ்வாறு நடைமுறைச் சாத்தியமானதாக அமைந்ததோ அதேபோன்று இன்றைய அறிவியல் வளர்ச்சி பெற்ற மக்களுக்கும் அது நடைமுறைச்சாத்தியமானதாகவும் உயிரோட்டம் மிக்கதாகவும் உள்ளது.

ஆனால் இக்குர்ஆன் அருளப்பட்ட நூற்றாண்டில் முன்வைக்கப்பட்ட ஏனைய கொள்கைகள், எழுதப்பட்ட நூல்களில் பெரும்பாலானவை இருந்த இடமே தெரியாமல் செல்வாக்கு இழந்து அழிந்துவிட்டன. ஒரு சில அரும்பொருட்காட்சியங்களில் காட்சிப்பொருளாக உள்ளன.

ஆனால் எல்லாக் காலங்களுக்கும் பொருத்தமானதாக விளங்கும் இக்குர்ஆன் உயிரோட்டத்துடன் திகழுவதற்கு அது அல்லாஹ்வின் படைப்பு, ஆக்கம் என்பது தான் ஒரே அடிப்படையாகும்.

இது தொடர்பில் அல் குர்ஆனுக்கு 'ததப்பருல் குர்ஆன்' என்ற பெயரில் விளக்கவுரை எழுதியுள்ள அல்லாமா அமீன் அஹ்ஸன் இஸ்லாஹி (ரஹ்) அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

'அல் குர்ஆன் அல்லாஹ்வின் வேதம். அது முன்சென்றோர் பின்வருவோர் உள்ளிட்ட அனைத்து தரப்பு மக்கள் தொடர்பான அறிவையும் கொண்டுள்ளது. உலகம் இருக்கும் வரையும் அது நிலைத்திருக்கக்கூடியதாகும். அது மக்களுக்கு நேர்வழிகாட்டல் வழங்கிக்கொண்டே இருக்கும். அதனால் அதன் அற்புதங்கள் ஒரு போதும் முடிவுறா' என்றுள்ளார்.

அது தான் உண்மை. உலகில் பிறக்கின்ற ஒவ்வொருவருக்கும் நேர்வழிகாட்டல் வழங்கத் தேவையான அத்தனை பண்புகளையும் தன்மைகளையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றது இக்குர்ஆன். உலகம் இருக்கும் வரையும் சமூகங்கள் தோன்றி மறைவது தொடராக நிகழ்ந்து கொண்டே இருக்கும். அதனால் அந்தந்த கால சமூகங்களை சேர்ந்தவர்கள் குர்ஆனை அணுகும் போது அவர்கள் தமக்குரியவற்றைப் பெற்றுக்கொள்வார்கள். அவ்வாறு ஒவ்வொருவரும் எவ்வளவு தான் இக்குர்ஆனிலிருந்து அருள் வளங்களைப் பெற்றுக்கொண்டாலும் அதில் எவ்வித குறைபாடும் ஏற்படாது. அந்தளவுக்கு அருள் நிறைந்த வளமான அற்புதம் அல் குர்அன்'.

அதேநேரம் 'இக்குர்ஆனை ஒரிரு முறை ஓதிவிட்டால் அல்லது படித்தவிட்டால் அதன் அனைத்து அறிவு வாசல்களையும் அடைந்துவிடலாமென எதிர்பார்க்க முடியாது. அது அல்லாஹ்வின் வற்றாத அறிவியல் ஊற்று. அது ஒரு மாபெரும் சுரங்கம். அது எவ்வளவு ஆழ அகலமாக அணுகப் படுகின்றதோ அந்தளவுக்கு அதன் பிரதிபலன்களை அடைந்து கொள்ளலாம்.' என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை 'தப்ஸீர் ஷாராவி' என்ற பெயரில் இக்குர்ஆனுக்கு விளக்கவுரை எழுதியுள்ள இமாம் முதவல்லி ஸாராவி (ரஹ்) அவர்கள் இக்குர்அனின் அற்புதம் தொடர்பில், இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார். 'குர்ஆன் அருளப்பட்ட காலத்தில் சொல்லப்பட்ட வார்த்தைகள் தான் இந்த 21 ஆம் நூற்றாண்டிலும் காணப்படுகின்றது. அவை இந்நூற்றாண்டின் செய்திகளோடு கொஞ்சமும் பிசகாமல், முரண்படாமல், மோதல் நிலையை அடையாமல் ஒத்துப்போகக்கூடியதாக உள்ளது. இது குர்ஆன் கொண்டிருக்கும் மாபெரும் அற்புதமாகும். இக்குர்ஆன் அருளப்பட்ட மக்களது அறிவோடு எவ்வாறு ஒத்துப்போனதோ அதேபோன்று நவீன கண்டுபிடிப்புக்களும் அறிவியல் வெளிப்பாடுகளும் நிறைந்த இந்த 21 ஆம் நூற்றாண்டோடும் ஒத்துப்போகின்றது. இக்குர்ஆனின் வசனங்களிலும் சொற்களிலும் எவ்வித மாற்றங்களுமே ஏற்படவில்லை. அதன் பொருட்களும் ஒன்று தான். ஆனால் காலத்திற்கு ஏற்ப அதன் விளக்கம் விரிவடைந்து செல்கின்றது. இப்படியான அற்புதத்தை அல்லாஹ்வைத் தவிர வேறு எவராலுமே நிகழ்த்த முடியாது' என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**(அடுத்த வாரம் நிறைவுறும்)**

---

# ஆலமுல் இஸ்லாம்

– அஜ்வாத் பாஸி

aalamulislam.tkn@lakehouse.lk

---

## இறைவனுக்கு பிடித்தமான நற்செயல்

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் கூறினார்கள், நான் இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம், 'இறைத்தூதர் அவர்களே! நற்செயல்களில் சிறந்தது எது?' என்று கேட்டேன்.

அவர்கள், 'தொழுகையை அதற்குரிய வேளையில் தொழுவது" என்று கூறினார்கள். 'பிறகு எது (சிறந்தது?)" என்று கேட்டேன் அவர்கள், 'பிறகு தாய், தந்தையருக்கு நன்மை செய்வது" என்று பதிலளித்தார்கள்.

நான், 'பிறகு எது (சிறந்தது?)" என்று கேட்டேன். அதற்கு அவர்கள், 'இறைவழியில் அறப்போரிடுவதாகும்" என்று பதில் சொன்னார்கள். நான் அல்லாஹ்வின் தூதரிடம் வேறெதுவும் கேட்காமல் மௌனமாகி விட்டேன்.

நான் இன்னும் கேட்டிருந்தால் அவர்கள் இன்னும் பதிலளித்திருப்பார்கள்.**[நூல்;புஹாரி எண் 2782 ]**

**அபூ அம்னா**
பேருவளை

---

## முதல் மூன்று இடம் தாய்க்கே!

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒருவர் வந்து, 'இறைத்தூதர் அவர்களே! நான் அழகிய முறையில் உறவாடுவதற்கு மிகவும் அருகதையானவர் யார்?' என்று கேட்டார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'உன் தாய்' என்றார்கள்.

அவர், 'பிறகு யார்?' என்று கேட்டார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'உன் தாய்' என்றார்கள். அவர், 'பிறகு யார்?' என்றார். 'உன் தாய்' என்றார்கள். அவர், 'பிறகு யார்?' என்றார். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'பிறகு, உன் தந்தை' என்றார்கள். [நூல் புஹாரி 5971 ]

இத்தகைய உயர்வான முதல் மூன்று ஸ்தானத்தை தாய்க்கு இஸ்லாம் வழங்கியிருக்க, திருமணமாகும்வரை தாய் சொல்லை தட்டாத மகன் திருமணத்திற்கு பின் மனைவி சொல்லே மந்திரம் என்று மகுடிக்கு மயங்கும் பாம்பாக மாறி, தாயை தந்தையை பழிப்பதும், விரட்டுவதும் அவர்களை நோவினை படுத்துவதுமான செயல்களை செய்பவர்களை இன்று நாம் பார்க்கிறோம். இவர்களின் நிலை என்ன ? என்பதை நாம் சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம்.

**மௌலவி அர்சாத்,**
குருநாகல்.

---



## அன்னையின் காலடியில் சொர்க்கம்

**உலக** மாந்தர்களில் ஒருவருக்கொருவர் காட்டும் அன்புகளில் ஈடு இணையற்றது தாயின் அன்புதான். மனைவியானாலும், மக்களானாலும், உடன்பிறந்தோர் ஆனாலும், உற்றார்உறவினர்களானாலும் அந்த அன்புக்கு ஒரு எல்லை உண்டு. ஆனால் தாயன்புக்கு எல்லையில்லை.

ஒரு பெண் கற்பமாவது முதல் அவள் பிரசவிக்கும் வரை படும் வேதனைகளை, அவள் பெற்றெடுக்கும் குழந்தை 'அம்மா' என்று அழைத்தவுடன் அத்துணை வேதனையையும் அடியோடு மறந்துவிடுகிறாள்.

தான் பெற்ற குழந்தையை பாலூட்டி, பாராட்டி, சீராட்டி வளர்த்து ஆன்றோர்களின் அவை தனில் தன்பிள்ளை சான்றோனாக மதிக்கப்பட தன்னையே மெழுகுவர்த்தியாக கரைத்துக்கொள்கிறாள்.

தான் வளர்த்த பிள்ளை தறுதலையானாலும் அந்த தாய் ஒதுக்கிவிடுவதில்லை. தான் வளர்த்த பிள்ளை தன்னை அநாதை விடுதியில் சேர்த்தாலும், அனாதையாக தெருவிலே விட்டுவிட்டாலும் அந்தத்தாய் தன் பிள்ளையை சபிப்பதில்லை. அதனால் தான் உலகில் இழந்த எந்த உறவையும் மீட்டெடுக்கமுடியும் தாயைத்தவிர!

மனைவி வெறுத்துவிட்டால் மற்றொரு மனைவியை திருமணம் செய்து ஈடு செய்துவிடலாம். ஒரு பிள்ளை வெறுத்து விட்டால் இன்னொரு பிள்ளையை கொண்டு ஈடு செய்து விடலாம். உடன்பிறந்தோர் வெறுத்துவிட்டால் யாரை வேண்டுமானாலும் அண்ணன் , தம்பி என்று அழைத்து ஆனந்தப்பட்டு கொள்ளலாம். ஆனால் ஒரு தாயின் அன்பை நாம் இழந்துவிட்டால் அந்த அன்பை எந்த அன்னியப்பெண்ணாலோ , அல்லது அன்னையின் உடன்பிறந்தவர்களாலோ கூட தர முடியாது. இத்தகைய மகத்தான தகுதி தாய்க்கு உள்ளதால்தான் இஸ்லாம், உலகில் வாழும் ஒவ்வொரு முஸ்லிமும் தலைவர் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அடுத்தபடியாக தாயை நேசிக்கவேண்டும் என்று கட்டளையிடுகிறது.

**அப்துல் ஹாலிக்.**
பஸ்யால.

---

# இரத்த உறவைப் பேணுவதால் உருவாகும் நன்மைகள்

இரத்த உறவைப் பேணுமாறும் அதனைத் துண்டித்துவிட வேண்டாமென்றும் அல்லாஹ்வும் தூதரும் கட்டளை பிறப்பித்ததனால் அதில் அநேக நன்மைகள் இருக்கலாமென்பது தெளிவாகின்றது. கீழ் வருமாறு சில நன்மைகளை நாம் விளக்கலாம்.

**1. சுவனம் செல்லும் பாக்கியம் கிட்டும்**

நபி (ஸல்) அவர்களிடம் வந்த ஒருவர் அல்லாஹ்வின் தூதரே என்னை சுவனத்தில் நுழைவிக்கும் ஒரு செயலை அறிவியுங்கள் என்று கூறினார்.

அப்போது நபி (ஸல்) அவர்கள் "நீர் அல்லாஹ்வை வணங்கு அவனுக்கு யாதொன்றையும் இணையாக்காதே. தொழுகையை நிலை நிறுத்தி, ஸகாத்தைக் கொடுத்து வருவதோடு இரத்த பந்தங்களோடு இணைந்திரு" என்று விளக்கமளித்தார்கள். (புகாரி)

**2. வாழ்வில் பரக்கத்தும் நீடித்த ஆயும் பிறர் நேசமும் கிட்டும்**

உறவைப் பேணிவரக் கூடிய மனிதர்களுக்கு வாழ்க்கை வசதிகளை அதிகரித்துக் கொடுக்கும். அல்லாஹ் அவர்களது ஆயுளையும் நீட்டிவிடுவான். நபியவர்கள் பின் வருமாறு குறிப்பிட்டார்கள்.

"யார் தனது வாழ்க்கை வசதிகள் விருத்தி செய்யப்பட வேண்டும். ஆயுள் நீளமாக்கப்பட வேண்டும் என விரும்புகிறாரோ அவர் தனது இரத்த பந்தங்களுடன் இணைந்திருக்கட்டும். (புகாரி)

தனது இரட்சகனை அஞ்சி இரத்த பந்தங்களுடன் இணைந்து வாழ்பவனுடைய ஆயுள் நீளமாக்கப்படும், செல்வங்கள் பெருகும் அவரை அவரது குடும்பத்தினர் நேசிப்பார்கள்'

**இரத்த உறவைத் துண்டிப்பதன் பாதிப்புகள்**

**1. சுவன பாக்கியம் இல்லாது போகும்;**

உறவைத் துண்டித்து வாழ்வோர் பெரியதொரு பாவத்தைப் புரிகின்றனர் என்ற வகையில் மகத்தானதொரு பாக்கியத்தை இழந்து விடுகின்றனர். நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள்.

"இரத்த பந்தத்தை துண்டிப்பவன் சுவனம் நுழைய மாட்டான்" (புகாரி)

**2. அமல்கள் செயலிழந்து செல்லும்**

நபி (ஸல்) பல்வேறு கட்டங்களில் உறவு பேணுவதன் முக்கியத்துவம் பற்றி விளக்கி அமல்கள் அங்கீகரிக்கப்பட இதில் கவனம் செலுத்துமாறும் கேட்டுக்கொண்டார்கள்.

ஒரு தடவை உறவைத் துண்டித்து வாழ்பவனது தலைக்கு மேல் ஒரு சாண் அளவேனும் உயர்த்தப்படுவதில்லை என்று குறிப்பிட்டார்கள்.

**3. இறையருள் கிட்டாமை**

உறவுகளைப் பேணி வாழ்வோர் அல்லாஹ்வின் அருட் கொடைகளைப் பெற்று விடுவார்.

ஏனெனில் அவர்களுக்கு அருளாளனின் தொடர்பு காணப்படும். "ஒரு கூட்டத்தில் உறவுகளைத் துண்டித்து வாழ்பவன் இருந்தால் அந்த சபையில் அல்லஹ்வின் அருள் இறங்காது" (பைஹகி)

**4. அல்லாஹ்வின் தண்டனை**

இரத்த உறவைத் துண்டித்து வாழ்வோருக்கு ஈருலகத் தண்டனை கிட்டும்.

"மறு உலகிலும், இவ்வுலகிலும் இறை தண்டனை கிடைப்பதற்கு மிகத்தகுதியான குற்றம் உறவுகளைத் துண்டித்து நடப்பதும் அக்கிரமம் செய்வதுமாகும்" (அபூதாவூத்)

**ஏ.எம். முகம்மது ஸப்வான்,**
சீனன்கோட்டை, பேருவளை.

# நாட்டுக்கு பலம்மிக்க அரசாங்கமும் தலைவரும் கிடைக்கப்பெற்றுள்ளது

## அபிவிருத்திகளை தடையின்றி முன்னெடுப்போம்

**வெலிகம தினகரன் நிருபர்**

தற்போது எமது நாட்டுக்கு பலம் மிக்க அரசாங்கமும் பலம்மிக்க தலைவரொருவரும் கிடைக்கப்பெற்றுள்ளது.அதேபோல் நாட்டு மக்களுக்காக பணிபுரிய சக்தியும் கிடைத்துள்ளதால் எதிர்காலத்தில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொள்ள எவ்வித தடையும் கிடையாது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

மாவரல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் அங்கு உரையாற்றுகையில்,



சிலர் மக்களின் பெறுமதியான வாக்குகளை பணத்துக்கு அடிமைப் படுத்தினர். கடந்த தேர்தலில் மாத்தறை மாவட்டத்தில் 6 உறுப்பினர்களை தெரிவு செய்து தருமாறு மக்கள் முன்னிலையில் நாம் கோரிக்கை வைத்தோம். அதனை மக்கள் செவ்வனே நிறைவேற்றியுள்ளனர்.

தான் விருப்பு வாக்குகளை பணத்துக்குப் பெற்றுக் கொள்ளவில்லை. தனக்கு ஆதரவு அளித்த மக்களை நன்றியுணர்வோடு நினைவு கூர்ந்து அவர்களுக்காக தமது கடமைகளை நிறைவேற்ற நான் கடமைப் பட்டுள்ளேன்.

கடந்த தேர்தல் காலங்களில் கிராமங்களுக்கு வந்து பாரியளவில் பணத்தை செலவு செய்து வாக்குகளைப் பெற்றுள்ளனர். அதன் மூலம் மனமுறிவுகள் ஏற்பட்டன. தற்போது அவர்களை காண முடியாதுள்ளது. மக்களின் குறைபாடுகளை பார்ப்பதும் இல்லை.

இலங்கையில் கூடுதலான வாக்குகள் மாத்தறை மாவட்டத்திலேயே கிடைத்தது. நாம் மக்களுக்கு சேவை செய்ய காத்துக் கொண்டு இருக்கிறோம். நாம் சேவை செய்யாவிடின் மக்கள் எம்மை அடுத்த முறை புறக்கணிப்பர். மக்கள் என் மீது வைத்துள்ள நம்பிக்கையை பாதுகாத்து எமது கடமையை முன்னெடுத்துச் செல்ல உறுதிபூண்டுள்ளோம் என்றும் சபாநாயகர் தனதுரையில் மேலும் தெரிவித்தார்.

# திடீர் மரண விசாரணை அதிகாரிகளை நியமிக்க கோரிக்கை

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



புத்தளம் மாவட்டத்தின் நாத்தாண்டிய மற்றும் வென்னப்புவ தொகுதிகளில் வாழும் சிறுபான்மை மக்களுக்கான திடீர் மரண விசாரணை அதிகாரிகளை நியமிக்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன புத்தளம் தொகுதி அமைப்பாளரும், இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த பெரேராவின் இணைப்பாளருமான ஏ.எச்.எம்.ரியாஸ், நீதி அமைச்சர் அலிசப்ரியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த பிரதேசங்களுக்கு திடீர் மரண விசாரணை அதிகாரிகளை அவசரமாக நியமிக்க வேண்டிய அவசியத்தையும் அவர் இதன்போது நீதி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

நேற்று முன்தினம் (16)) நீதி அமைச்சர் அலிசப்ரியை நேரில் சந்தித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன புத்தளம் தொகுதி அமைப்பாளர் ஏ.எச்.எம்.ரியாஸ் குறித்த கோரிக்கையை முன்வைத்தார்.

மேற்குறித்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதியமைச்சர் அலி சப்ரி, மிக விரைவில் குறித்த திடீர் மரண விசாரணை அதிகாரிகளை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் வாக்குறுதி அளித்துள்ளதாக அமைப்பாளர் ஏ.எச்.எம்.ரியாஸ் தெரிவித்தார்.

## நீரில் மூழ்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

நீரில் மூழ்கி உயிரிழந்த குடும்பஸ்தர் ஒருவருடைய சடலமொன்றினை கிரித்தலை குளத்திலிருந்து மின்னேரிய பொலிசார் மீட்டுள்ளனர். பொலிசாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய கடந்த 16 ஆம் திகதி சம்பவ இடத்துக்குச் சென்ற மின்னேரிய பொலிசார், பிரதேச வாசிகளின் உதவியோடு நீரில் மிதந்துகொண்டிருந்த சடலத்தினை மீட்டுள்ளனர். சம்பவத்தில் உயிரிழந்தவர் கிரித்தலை தியபெதும வீதியை வசிப்பிடமாக கொண்ட 47 வயதுடைய இருபிள்ளைகளின் தந்தையாவார். சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, உயிரிழந்த நபர் நேற்று முன்தினம் இரவு நண்பர்களுடன் மீன் பிடிப்பதற்கு சென்ற வேளையிலேயே நீரில் மூழ்கியுள்ளதாக தெரிய வந்துள்ளது.சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மின்னேரிய பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தலாவ குளத்திலிருந்து பழைமை வாய்ந்த மரக்குற்றிகள் அகற்றல்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

தலாவ பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட இஹல தலாவ குளத்திலிருந்த பல நூற்றாண்டு காலம் ப ழைமை வாய்ந்த மிகப்பெரிய மரங்கள் குளத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளன.

குளத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் ஒப்பந்தக்காரர்கள் இந்த மோசடியை மேற்கொண்டுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

விவசாயிகள் பல வருடங்களாக முன்வைத்து வந்த கோரிக்கைக்கு அமைய தலாவ நகர மத்தியில் அமைந்துள்ள இஹல குளத்தின் நிர்மாணப் பணிகள் கடந்த 10 மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டன.


செயற்திட்டத்தின் பிரகாரம் காலநிலை மாற்றங்களை குறைக்கும் செயற்திட்டத்தின் கீழ் இதன் புனர்நிர்மான பணிக்காக உலக வங்கியின் நிதி உதவியூடாக மூன்று கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



இஹல குளத்தின் சேற்றை அப்புறப்படுத்தல் குளக்கட்டு மற்றும் நீர் வடிந்தோடும் பகுதியை தயாரிக்கும் ஒப்பந்தம் கல்நேவ பகுதியைச் சேர்ந்த ஒப்பந்த நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. சேற்றை அப்புறப்படுத்தி குளக்கட்டை அமைக்கும் பகுதி எவ்வாறாக இருந்த போதும் குளத்தின் ஒவ்வொரு இடத்திலும் பெருமளவில் மண் தோண்டப்பட்டு காணப்படுகின்றன. குளத்தில் பல வருடங்களாக விருந்த பாரியளவிலான ப ழைமை வாய்ந்த மரங்கள் பலவும் வெட்டி அகற்றப்பட்டுள்ளன.மரப் பலகைக்கு தேவையான மரக் குற்றிகள் எடுக்கப்பட்டு எஞ்சிய வேர் உள்ளிட்ட பகுதிகள் குளத்தில் போடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேசவாசிகள் வேண்டுகோல் விடுக்கின்றனர்.

# ஏ.ஸீ.எம்.ஜிப்ரியின் சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா




எழுத்தாளரும் ஊடகவியலாளருமான காலி ஏ.ஸீ.எம்.ஜிப்ரி எழுதிய 'சிறுகதை தொகுப்பும் யாழ். நினைவுகளும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு காலி மழ்ஹறுஸ்ஸுல் ஹியா தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ஐ.எம்.எம்.யூசுபின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நவமணி பிரதம ஆசிரியரும் முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவருமான என்.எம்.அமீன் பிரதம அதிதியாக கலந்து கொள்கிறார். நூலின் முதற்பிரதியை பாடசாலை பழைய மாணவரும் வர்த்தகருமான சமூக சேவகர் ஹஸன் சரீப் பெற்றுக் கொள்கிறார்.

இந்த நிகழ்வில் எழுத்தாளர்களான வை ஐ.எம்.ஹாபிஸ், திக்குவல்லை கமால், கலைவாதிக் கலீல், தினகரன் பத்திரிகையின் பிராந்திய செய்தி ஆசிரியர் ஷம்ஸ் பாஹிம் ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து சிறப்பிக்கின்றனர்.

### முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டம்;

# ஸ்ரீலங்கா காதிநீதிவான்களின் சம்மேளனம் நீதியமைச்சர் அலிசப்ரியை சந்திக்க முடிவு



முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களுக்கான பரிந்துரைகளை ஸ்ரீலங்கா காதி நீதவான்களின் சம்மேளனம் நீதியமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரியிடம் சமர்ப்பிப்பதற்கு தீர்மானித்துள்ளது. மாவனெல்லை காதிநீதிமன்ற தலைமையகத்தில் அண்மையில் நடைபெற்ற காதிநீதிவான்களின் சம்மேளன விசேட நிர்வாக சபைக்கூட்டத்திலே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பில் காதிநீதிவான்களின் சம்மேளனம் 2009 இல் நியமிக்கப்பட்ட திருத்தங்களை சிபாரிசு செய்வதற்கான குழுவிடம் ஏற்கனவே சிபார்சுகளை முன்வைத்திருந்தாலும் தற்போதைய சூழலில் புதிதாக சிபாரிசுகளை முன்வைக்கவுள்ளதாக காதிநீதிவான்களின் சம்மேளனத்தின் தலைவர் ஏ.எல்.ஏ.எம். பௌஸ் தெரிவித்தார்.

மேலும் காதிநீதிமன்றங்களின் செயற்பாடுகள் காரணமாக நாட்டின் எந்தப்பகுதியிலும் எவரும் பாதிக்கப்பட்டிருந்தால் அது தொடர்பான முறைப்பாடுகளைப்பெற்று ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சம்மேளனம் மேலும் தெரிவித்துள்ளது.





சிலாபம் பிரதேச சபையின் புதிய கட்டிடத்தினை கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வளங்கள் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பெரேரா திறந்து வைத்தார். (படங்கள் புத்தளம் தினகரன் விசேட நிருபர்)

## மயானத்திலிருந்து துப்பாக்கி மீட்பு

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

மதவாச்சி பிஹிம்பியகொள்ளாவ பகுதியிலுள்ள மயானத்தில் இருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியொன்றினை மதவாச்சி பொலிசார் மீட்டுள்ளனர். கிடைத்த தகவலொன்றுக்கமைய 16 ஆம் தி கதி சம்பவ இடத்திற்கு சென்ற பொலிசார் துப்பாகியொன்றினை மீட்டுள்ளதுடன் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# நாச்சியாதீவு மீனவர்கள் பல்வேறு அசௌகரியம்

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுர மாவட்ட பாரிய நீர் தேக்கங்களில் ஒன்றான அ / ஹிதோகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாச்சியாதீவு குளத்தில் நன்னீர் மீன் பிடியில் ஈடுபடும் மீனவர்கள் இக்காலப் பகுதியில் பல சிக்கல்களை எதிர் நோக்கி வருகின்றனர்.அடிக்கடி களவு போகும் மீன் பிடி வலைகள்,இதனால் குறைவாக பிடிபடும் மீன்களால் எதிர்பார்த்த வருமானம் கிடைப்பதில்லை என மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

நாச்சியாதீவு குளத்தைச் சுற்றி மீன்பிடி நடவடிக்கையில் பலர் ஈடுபட்டு வந்தாலும்,நாச்சியாதீவு நன்னீர் மீன் பிடி சங்கத்திற்கு உட்பட்ட பகுதிகளில் பதிவு செய்யப்பட்ட சுமார் 40 மீன்பிடி வள்ளங்களும், சுமார் 80 மீனவர்களும் இத்தொழிலில் ஈடுபட்டு வரும் நிலையில் இவர்களின் வலைகளை களவாடும் தொழிலில் சிலர் திட்டமிட்டு செயல்படுவதாக சந்தேகம் நிலவுகின்றது.

அடிக்கடி வலைகள் களவாடப்படுவதால் பிடிபடும் மீன்களும் மிகக் குறைவாக இருப்பதால்,பெரிய அளவில் குளம் இருந்தும் நுகர் வோரின் தேவையை பூர்த்தி செய்யும் அளவுக்கு மீன் உற்பத்தி குறைவு.இதனால் மீனுக்கான விலையும் சற்று அதிகரித்து கிலோ 350 ரூபாவுக்கு விற்பனையாகிய நன்னீர் மீன், கிலோ 400 ரூபாவுக்கு இக் காலப் பகுதியில் விற்பனை செய்யப்படுவதோடு, இங்கு ஒவ்வொரு நாளும் பிற்பகல் 6.00 மணிக்கு மீன்பிடி வள்ளங்கள் பூட்டப்பட்டு அதிகாலை 6.00 மணிக்கே மீண்டும் திறந்து விடப்படுகிறது.

இரவு நேரங்களில் மீன் பிடிப்பதை சங்கம் நிறுத்தியுள்ள நிலையில், இரவு வேளையிலேயே வலைகளையும்,வலைகளில் உள்ள மீன்களையும் கலவாடும் செயல்பாட்டில் வெளிப்பகுதிகளிலிருந்து வரும் இனந் தெரியாத சிலர் ஈடுபட்டு வருவதாக சந்தேகம் நிலவுவதாக மீனவர் ஒருவர் இதன்போது தெரிவித்தார்.

# அநுராதபுர மாவட்ட விவசாயிகளின் நீர்ப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

**ஹொரவபொத்தான விஷேட நிருபர்**



அநுராதபுர மாவட்ட விவசாயிகள் முகங்கொடுத்துள்ள நீர் பற்றாக்குறைக்கு தீர்வாக இரு போகங்களிலும் விவசாயம் மேற்கொள்ளக்கூடிய வகையில் கலாவெவ குளத்தின் மூலம் நீர் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் எச்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

அநுராதபுர மாவட்டத்தில் 2500 சிறிய குளங்கள் இருக்கின்ற போதிலும் அவற்றில் பெரும்பான்மையான குளங்கள் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன.அவற்றை விரைவில் புனரமைக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் சுபீட்சத்தின் நோக்கு எண்ணக்கருவுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். கலாவெவயில் நடைபெற்ற அபிவிருத்திக் கூட்டத்திலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், எந்த ஒரு விவசாயியின் வயல் நிலங்களுக்கும் தங்கு தடை இன்றி உர வகைகளை வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், உர விநியோகத்தில் மோசடி செய்ய முயல்வோரை எந்த வித பாகுபாடுமின்றி சட்டத்தின் முன் நிறுத்த பின்நிற்க மாட்டேன் எனவும் அவர் தெரிவித்தார்.








அளுத்கமை மகா வித்தியாலய தேசிய பாடசாலை பழைய மாணவரும் அப்பாடசாலையின் ஆசிரியருமான இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த சில்வாவை கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் அதிபர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக கலந்துகொண்ட கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ், பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் மற்றும் பிரமுகர்கள் பாடசாலை சமூகத்தினால் வரவேற்கப்படுவதையும், அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த ஆகியோர் தேசிய கொடி மற்றும் விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் பேருவளை விஷேட நிருபர்)



திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி குழுவின் இணைத் தலைவராக தெரிவு செய்யப்பட்ட கபில அத்துகோரல நேற்று தமது கடமையை பொறுப்பேற்றார். திருகோணமலை மாவட்ட செயலகத்தில் அமைக்கப்பட்ட அலுவலகத்திலே இந்நிகழ்வு இடம்பெற்றது. அரசாங்க அதிபர் அசங்க அபேவர்தன தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கட்சி ஆதரவாளர்கள், பிரதேச சபைகளின் தலைவர்கள், அரச உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.
படம்: ரொட்டவெவ குறூப் நிருபர்


கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவாப் பட்டை, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்ட பயிர்ச்செய்கை அபிவிருத்தி மற்றும் அது சார்ந்த கைத்தொழில், ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

## வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2020/ 2021ஆம் வருடங்கள்

கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவாப் பட்டை, கராம்பு, வெற்றிலை உட்பட்ட சிறு தோட்ட பயிர்ச்செய்கை அபிவிருத்தி மற்றும் அது சார்ந்த கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சிற்கு இயைபாக 2020/2021ஆம் வருடங்களுக்கான வழங்கல்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு பதிவு செய்து கொள்வதற்கு விரும்பும் பின்வரும் பொருட்கள் மற்றும் சேவை வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. வழங்கல்கள்**

**தொ.இல.**

1. காகிதாதிகள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகள்
2. அலுவலக உபகரணங்கள் - தட்டச்சுப் பொறி/ நகல் பிரதி இயந்திரம் / புகைப்படப் பிரதி இயந்திரம் / கணிக்கும் பொறிகள் / ஏனையவை
3. கணனிகள் / கணனி துணைப்பாகங்கள் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள்
4. கட்புல / செவிப்புல உபகரணங்கள்
5. செய்திப் பரிமாற்ற உபகரணங்கள்
6. அலுவலகத் தளபாடங்கள் - மரம் / உருக்கு / பிளாஸ்திக் / ஏனையவை
7. பட்டறி வகைகள் - வாகனம் / ஏனையவை
8. வாகன உதிரிப்பாகங்கள்
9. டயர்கள் மற்றும் டியூப்கள்
10. இரும்புப் பொருட்கள் / கட்டிடப் பொருட்கள்
11. மின்சாரக் கருவிகள் / சுவிட்சுகள் / ஹோல்டர்கள் / மின்குமிழ் வகைகள் / ஏனையவை
12. உபகரணங்கள் (மின்சாரம்) – மின் விசிறிகள் / டோர்ச் விளக்குகள் / வெக்கியும் கிளீனர்கள் / வளிச்சீராக்கி இயந்திரங்கள் / ஏனையவை
13. பண்ணை / நாற்று மேடைத் தேவைப்பாடுகள் - உபகரணங்கள் / இயந்திரோபகரணங்கள் / கருவிகள் / ஏனையவை
14. பண்ணை / நாற்று மேடைத் தேவைப்பாடுகள் - நிழல் வலைகள் / பொலித்தீன் வகைகள்
15. நாற்றுமேடை தொட்டிக் கலவைகள் - சாணி உரம் / தென்னந் தும்பு / ஆற்று மணல் / மேற்புற மண்
16. ஆய்வுகூட வழங்கல்கள் - இரசாயனப் பொருட்கள் / உபகரணங்கள் ஏனையவை
17. இறப்பர் மற்றும் தோல் சார்ந்த உற்பத்திகள் - வெளிக்கள பயணப் பைகள் / நிறைவேற்றுநர் பயணப் பைகள் / இறப்பர் ஹோஸ்கள் / கம்பூட்ஸ்கள் / மழை அங்கிகள் / ஏனையவை
18. மட்பாண்டப் பொருட்கள் / கண்ணாடிப் பொருட்கள் / துப்புரவேற்பாட்டு உபகரணங்கள்
19. துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் - சவர்க்காரம் / கிருமிநாசிகள் / மருந்துகள் / ஏனையவை
20. துணிகள் / T-Shirt
21. நினைவுச் சின்னங்கள்
22. இறப்பர் முத்திரைகள்
23. CCTV கமரா மற்றும் ஏனைய துணைப்பாகங்கள்
24. பகல் இரவு உணவுகள் / சிற்றுண்டிகள் / குடிநீர் போத்தல்கள்

**2. சேவைகள்**

25. வரைதல் ஆக்க வேலைகள் (ஆர்ட் வேர்க்) உட்பட பிரசார சேவைகள்
26. அச்சுவேலை வர்ணம் / வேறாக்கல் வேலைகள்
27. அச்சு வேலை – புத்தகம் கட்டுதல்
28. கையெழுத்துப் பிரதிகளை எழுதுதல் உட்பட காணொளி படம் / ஆவணப் படங்களை தயாரித்தல்
29. கணனி நிகழ்ச்சிகளை வழங்குதல்
30. திருத்தவேலைகள் / சேர்விஸ் செய்தல் - மின்னுபகரணங்கள் / இயந்திரோபகரணங்கள்
31. திருத்தவேலைகள் / சேர்விஸ் செய்தல் - ஆய்வுகூட உபகரணங்கள்
32. திருத்தவேலைகள் / சேர்விஸ் செய்தல் (மின் உபகரணங்கள்) கணனிகள் / கணனி அச்சுப் பொறிகள் / புகைப்படப் பிரதி இயந்திரங்கள் / தொலைநகல் இயந்திரங்கள்
33. திருத்தவேலைகள் / சேர்விஸ் செய்தல் - தட்டசுப் பொறிகள்
34. கமரா (நிலையானவை / வீடியோ) திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
35. வளிச்சீராக்கி இயந்திரங்களை திருத்தவேலைகள் (உள்ளக)
36. வளிச்சீராக்கி இயந்திரங்களை திருத்தவேலைகள் (வாகனம்)
37. வாகன திருத்தவேலைகள் - பொறிமுறை / தகர வேலைகள் / நிறப்பூச்சு / மின்சாரம்
38. வாகனங்களை சேர்விஸ் செய்தல்
39. கட்டிட நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகளைச் செய்தல்
40. குஷன் வேலைகள் (அலுவலக கதிரைகள் / வாகன இருக்கைகளை குஷன் செய்தல்)
41. கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்வதற்கான கண்காட்சிப் பொருட்களை வழங்குதல்
42. அலுமினியத்தைப் பயன்படுத்தி கட்டிடங்களின் சட்டங்கள் மற்றும் மாதிரிகளைத் தயாரித்தல்
43. உலோக வேலைகள் (கிறில் வேலைகள் மற்றும் வேல்டிங் வேலைகள்)
44. சுத்திகரிப்புச் சேவைகள்
45. துணிகளைச் சலவை செய்தல் (லொண்டறி வேலை)
46. வாகங்களை வாடகைக்கமர்த்துதல்

**நிபந்தனைகள்**

- கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை வியாபாரப் பதிவுச் சான்றிழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியுடன் 2020-10-30ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன் செயலாளர், கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவாப் பட்டை, கராம்பு, வெற்றிலை உட்பட்ட சிறு தோட்ட பயிர்ச்செய்கை அபிவிருத்தி மற்றும் அது சார்ந்த கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு, 16வது மாடி, சுஹுருபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2020/2021’’ எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
- மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வழங்கல் சேவை அம்சங்களின் பொருட்டும் 500.00 ரூபா வீதம் மீளளிக்கப்படாத கட்டணத்தை அமைச்சின் அலுவலகத்திற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். (காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது)
- கோரப்படும் போது விலைகளைச் சமர்ப்பிக்காத மற்றும் உரிய தரத்திற்கமைவாக பொருட்கள் / சேவைகளை வழங்காத வழங்குநர்களின் பதிவு இரத்துச் செய்யப்படும்.
- இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவையாயின் 011 2-879352 எனும் தொலைபேசி இலக்கத்தில் விசாரித்தறியலாம்.

**கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவாப் பட்டை, கராம்பு, வெற்றிலை உட்பட்ட சிறு தோட்ட பயிர்ச்செய்கை அபிவிருத்தி அது சார்ந்த கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு**

**2020/2021ஆம் வருடங்களுக்கான வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம்**

01. வழங்குநரின் பெயர் :
02. வியாபாரத்தின் பெயர் மற்றும் முகவரி :
03. தொலைபேசி இலக்கம் / தொலைநகல் இலக்கம் :
04. மின்னஞ்சல் முகவரி :
05. வியாபாரத்தின் பதிவிலக்கம் :
06. பணம் செலுத்திய அலுவலகம் மற்றும் பற்றுச்சீட்டு இலக்கம் :
07. வழங்கும் பொருள் மற்றும் சேவை தொடர்பான விபரம் :

| தொடர் இலக்கம் | வழங்கும் பொருள் மற்றும் சேவை |
|---|---|
| | |

மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் சரியானவை எனவும், வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

.................................. ..................................
திகதி கையொப்பம்


# கிழக்கில் பட்டதாரி பயிலுநர்களில் அதிகளவானோர் ஆசிரியர் பதவிகளுக்கு உள்ளீர்ப்பு

## கிழக்கு கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

புளியந்தீவு குறூப்நிருபர்

கிழக்கு மாகாணத்தில் இப்போது தெரிவாகியுள்ள பட்டதாரி பயிலுனர்களில், அதிக தொகையினர் ஆசிரிய பதவிகளுக்கு உள்ளீர்க்கப்பட உயர்மட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ. நிஸாம் (16) தெரிவித்தார்

வேலையற்றோருக்கு வேலை வழங்கும் திட்டத்தின்கீழ் பட்டதாரி பயிலுனர்கள் மாவட்டம் தோறும் ஆயிரக்கணக்கில் அரச சேவைக்கு உள்வாங்கப்பட்டிருக்கின்றனர். கிழக்கு மாகாணத்திலுள்ள சில கல்வி வலயங்களிலும் ஆசிரிய வெற்றிடங்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கின்றன இந்த நிலையில் பட்டதாரி பயிலுனர்கள் ஆசிரிய ஆளணிக்குள் உள்ளீர்க்கப்படமாட்டார்களா? என்ற கேள்வியொன்றுக்கு பதிலலிக்கும்போதே மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ. நிஸாம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில், ஆசிரிய சேவை மனித சமூகத்தை மேம்படுத்துவதாக இருக்கிறது. பட்டதாரி இளைஞர்களும், யுவதிகளும், உள்வாங்கப்படுவது மிகப் பொருத்தமானது. அவர்கள் பெரும்பாலும் தமது வதிவிடத்திற்கு அருகாமையிலுள்ள பாடசாலைகளிலே ஆசிரியர்களாக நியமனம் பெறுவர். இது அவர்களுக்கு சௌகரீகத்தையும், செலவுச் சுருக்கத்தையும் கொடுக்கும்.

பிரதேச செயலாளர்கள் கடந்தவாரம் பட்டதாரிபயிலுனர்களின் பட்டச்சான்றிதழ்களின் தொகுப்பைச் சமர்ப்பித்திருந்தனர். அதனை அடிப்படையாக் கொண்டு பார்க்கும்போது அவர்கள் கற்றுத்தேறியிருக்கின்ற பாடங்கள் அவ்வப் பிரதேசத்தின் பாடசாலைகளுக்கு ஆசிரிய நியமனங்களை வழங்க பொருத்தமாக இருக்கின்றன

சில கல்வி வலயங்களில் அதிக எண்ணிக்கையிலான பாடசாலைகள் ஆசிரியர்களின் பற்றாக்குறையினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. அவ்வாறான பாடசாலைகளுக்கு பட்டதாரி பயிலுனர்கள் ஆசிரியர்களாக நியமனம்பெறும்போது அப்பாதிப்புக்கள் நிவர்த்தியாகிவிடும். கிழக்கு மாகாணத்தில் இப்போது தெரிவாகியிருக்கின்ற பட்டதாரி பயிலுனர்களில், அதிக தொகையினரை ஆசிரிய பதவிகளுக்கு உள்ளீர்க்க உயர்மட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதனூடாக கிழக்கு மாகாண பாடசாலைக் கல்வியின் தரம் எதிர்காலத்தில் மேலும் உயர்வடையும் என்றார்.

# நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் மரவள்ளிக் கிழங்கு அறுவடை

பெரியநீலாவணை விசேட நிருபர்



ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கமைய 'சௌபாக்கியா' தேசிய உணவு உற்பத்தி வேலைத் திட்டத்தின் கீழ் நாவிதன் வெளி பிரதேச செயலக வளாகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மரவள்ளி கிழங்குகளை அறுவடை செய்யும் நிகழ்வு (16) நடைபெற்றது.

பிரதேச செயலாளர் எஸ். ரங்கநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த அறுவடை நிகழ்வில் கணக்காளர் யூ.எல்.ஜவாஹிர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ஆர்.லதாகரன், நிருவாக உத்தியோகத்தர் எஸ்.யோகேஸ்வரன் உட்பட அலுவலக உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். பாரம்பரிய நஞ்சற்ற உணவுகளை உட்கொள்வது அவசியமாகும். எனும் எண்ணக்கருவுக்கு அமைய அறுவடை செய்யப்பட்ட மரவள்ளிக் கிழங்குகள் உணவாக தயாரிக்கப்பட்டு அலுவலக உத்தியோகத்தர்களுக்கு பகிரப்பட்டன.

# ஜெலிக்னைட் குச்சிகளுடன் இருவர் கைது

தோப்பூர் குறூப் நிருபர்

திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சம்பூர் கடற்கரையில் வைத்து நேற்று முன்தினம் (16) ஜெலிக்னைட் 17 வெடிமருந்து குச்சிகளுடன் இரண்டு சந்தேக நபர்களை திருகோணமலை சர்தாபுர விசேட அதிரடிப்படையினர் கைது செய்து சம்பூர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் சம்பூரைச் சேர்ந்த 28 மற்றும் 32 வயதுடையவர்களாவர்.

சம்பூர் கடற்படையின் புலனாய்வுப் பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து அவர்களின் தகவலுக்கு ஏற்ப விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் வெடிபொருட்களுடன் கைதாகியுள்ளனர். சந்தேக நபர்கள் வெடிபொருட்களை பரிமாறுவதற்கு முயற்சித்துக்கொண்டிருந்த வேளையிலேயே கைது செய்யப்பட்டுள்ளனர்.



அம்பாறை மாவட்டத்தில் கற்றாழைச் செய்கையை ஊக்குவிக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் ஆயிரம் பயனாளிகளுக்கு கற்றாழைக் கன்றுகள் வழங்கும் நிகழ்வு இறக்காமம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில்(14) இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக்க் கலந்துகொண்ட கிழக்கு மாகாண ஆளுநர் திருமதி அநுராதா யெஹம்பதிக்கு கற்றாழைப் பயிர்ச் செய்கையின் கிழக்கு மாகாண திட்டமிடல் பணிப்பாளர் ஆசாத் முஹம்மட் அலியார் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.
படம்: இறக்காமம் தினகரன் நிருபர்

# மகளிருக்கான ஒரு வருட தையல் பயிற்சி ஆரம்பம்

நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்கள அனுசரணையுடன் கல்முனை உப பிரதேச செயலக மேற்பார்வையில் கல்முனை சேனைக்குடியிருப்பு விதாதா வள நிலையத்தில் மகளிருக்கான ஒரு வருட தையல் பயிற்சி தற்போது இடம் பெற்று வருகிறது.

ஒரு வருட கற்கை நெறியை கொண்ட இந்த பயிற்சிநெறியின் போதனாசிரியராக திருமதி.வீ. பரராஜசிங்கம் கடமையாற்றுகின்றார்.

சேனைக்குடியிருப்பு, பாண்டிருப்பு, கல்முனை, நீலாவணைப்பிரதேச யுவதிகள் பயிற்சியை பெற்று வருகின்றனர்.

பயிற்சிகள் அதிகளவு செயன்முறை சார்ந்ததாகவே வழங்கப்படுகிறது.

படித்து விட்டு தொழிலற்ற இந்த யுவதிகள் பயிற்சி முடித்தபின் அரச தொழிலை எதிர்பாராது சொந்தக்காலில் நின்று தொழில்செய்து வருமானம் ஈட்டுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

புதிய அரசாங்கத்தில் இவ்வாறான பயிற்சி வழங்கல் திட்டத்திற்கு நல்லாசி வழங்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# கிழக்கின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நூல் வெளியீடு நாளை

புளியந்தீவு குறூப் நிருபர்

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கிழக்கு மாகாண எழுத்தாளர்களால் ஆக்கப்பட்ட ஒன்பது நூல்களை அச்சிட்டு வெளியிடும்பொறுப்பை ஏற்றுள்ளதுடன் முதற்கட்டமாக 07 நூல்களை நாளை 19 ஆம்திகதி வெளியிடுகிறது.

ஏனைய இரண்டு நூல்களும் திருமலையில் வெகுவிரைவில் வெளியிடப்படவுள்ளதாக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப்பணிப்பாளர் சரவணமுத்து நவனீதன் தெரிவித்தார்.

இவ்விழா தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மாகாணப்பணிப்பாளர் சரவணமுத்து நவனீதன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

இவ்விழா நாளை 19ஆம் திகதி காலை களுதாவளை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் க.சிவநாதனும், சிறப்பு விருந்தினராக பிரதிக்கல்விப்பணிப்பாளர் பி.காப்தீபனும், கௌரவ விருந்தினர்களாக ஓய்வு நிலை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் க.பாஸ்கரன், பி.மயில்வாகனம் , களுதாவளை சுயம்பலிங்கப்பிள்ளையார் கோயில் தலைவர் கா.வேலாயுதபிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ் விழாவில் கலாநிதி சின்னத்தம்பி சந்திரசேகரத்தின் "கிழக்கிலங்கை மரபு வழித் தமிழ் இலக்கியங்கள்", வித்தகர் கு.சண்முகத்தின் "கழுவன்கேணி வேடுவ பரம்பரையின் வழக்காறுகள்", ஜனாபா சித்தி றபீக்கா பாயிசின் "சதுப்பு நிலக் கொக்கின் கால்கள்", கவிஞர் மருதூர் ஜமால்தீனின் "மனிதம் வாழும்" என்ற கவிதைத் தொகுப்பு, அண்ணாவியார் மூ.அருளம்பலத்தின் "தமிழ் கூத்தியல்", கவிஞர் ஏரூர் நௌஷாத்தின் "மொட்டுக்களின் மெட்டுக்கள்", அ.சுதர்சனின் "சிறுவர் கவிச்சோலை" ஆகியன வெளியிடப்படவுள்ளன. ஏழு நூல்களின் அச்சுச் செலவுகள் யாவும் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஏற்றுள்ளது.

# அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக நெற் செய்கை பணிகள் ஆரம்பம்

அட்டாளைச்சேனை மத்திய நிருபர்



அம்பாறை மாவட்டத்தில் பருவ மழை ஆரம்பமானதைத் தொடர்ந்து, எதிர்வரும் 2020/2021 பெரும்போக நெற் செய்கைக்கான ஆரம்பப் பணிகளில் விவசாயிகள் தற்பொழுது மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். அம்பாறை மாவட்டத்தின் அனைத்துப் பிரதேசங்களிலும் இம்முறை பெரும்போகத்தில் நெற் செய்கை பண்ணப்படவுள்ளது.

இதற்கேற்ற வகையில் நெற்காணிகளை உழுதுபன்படுத்தும் பணிகள் பரவலாக இடம்பெற்று வருகின்றன. இம்முறை அம்பாறை மாவட்டத்தில் சுமார் 150,000 ஏக்கர் காணிகளில் நெல் செய்கை பண்ணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அம்பாறை டீ.எஸ்.சேனநாயக்கா சமுத்திரத்திலிருந்து பெரும்போக நெற்காணிகளுக்கான நீர் வழங்கப்படவுள்ளது. பாசன நீரை நம்பாது மழையை மாத்திரம் நம்பி நெற்செய்கையை மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டச் செயலாளர், விவசாய மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் நெற்செய்கையுடன் தொடர்புடைய அதிகாரிகள் கலந்துகொண்டு, 2020/2021 பெரும்போக நெற்செய்கை தொடர்பில் பிராந்திய விவசாயிகளைஅறிவுறுத்தும் ஆரம்பக் கூட்டம் இன்னும் நடைபெறவில்லை.

இம்முறை நெற்செய்கைத் தொழிலில் புதிதாக இணைந்து கொள்ளுபவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த சிறுபோக அறுவடையின்போது, நெல் விளைச்சல் குறைவடைந்த போதிலும், அதிகரித்தநெல் விலை, அரசின் இலவச உரம் வினியோகம் என்பன காரணமாக விவசாயிகளுக்கு பாரியளவில் நஷ்டமேற்படவில்லை. இதனால், இத்தொழிலில் ஆர்வம்அதிகரித்துள்ளது. காணி இல்லாதவர்கள், குத்தகை அடிப்படையில் நெற்காணிகளைப் பெற்று,பெரும்போகச் செய்கையில் ஈடுபடுவதற்குத் தயாராகி வருகின்றனர். இதனால்,தற்காலத்தில் நெற்காணிகளுக்கான குத்தகைத் தொகை, அம்பாறை மாவட்டத்தில் கணிசமானளவு அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரச சேவை ஆணைக்குழு

## நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நிறைவேற்று சேவைத் தொகுதியில்

# சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு

# திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல் - 2020

## நீர்ப்பாசன அமைச்சு

**நீர்ப்பாசன அமைச்சின் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நிறைவேற்று சேவைத் தொகுதியில் சட்ட உத்தியோகத்தர் பதவி வெற்றிடத்தைப் (01) பூர்த்தி செய்வதற்காக கீழ் குறிப்பிடப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**01. ஆட்சேர்க்கப்படும் முறை**

அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுள், அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைவாக அதிக புள்ளியைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர் வெற்றிடத்திற்காக ஆட்சேர்க்கப்படுவர். இங்கு அரச சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட (இலக்கம் 06 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கமைய கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி அரச சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

**02. தேவைப்படும் தகைமைகள்**

(i) கல்வி / தொழில்சார் தகைமைகள்

மேல் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

**அனுபவம்**

மேல் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்த பின்னர் 03 வருடங்களுக்குக் குறையாத காலம் சட்டத்தரணியாக செயற்றிறனுடனான தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல். (செயற்திறனுடனான தொழில் அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்கு சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில் அனுபவம், பெற்றுக்கொள்ளப்பட்ட காலம், திகதி மற்றும் அலுவலக முத்திரை என்பன தெளிவாக குறிப்பிடப்பட்டு நேர்முகப் பரீட்சையின் போது கையளிக்கப்படல் வேண்டும்.)

**அல்லது**

மேல் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக சத்தியம் செய்த பின்னர் அரச நிறுவனமொன்றில் சட்டத்துறையில் 03 வருடங்களுக்குக் குறையாத காலம் கீழே காட்டப்பட்டுள்ள விடயங்களுக்குரிய அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

i. வழக்கு சம்பந்தமாக சட்ட நடவடிக்கைகளில் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்துடனான இணைப்பாளராக செயற்படுதல்.
ii. உடன்படிக்கை மற்றும் அவை சம்பந்தமாக சட்ட நடவடிக்கை
iii. உரிய சட்டங்கள் மற்றும் கட்டளைச்சட்டங்கள் சம்பந்தமாக சட்ட ரீதியான நடவடிக்கைகள்
iv. சட்ட வரைவு, சுற்றறிக்கை ஒழுங்கு விதிகள் போன்ற சட்டங்களுக்குரிய ஆவணங்களை வழங்கும் நடவடிக்கை தொடர்பாக
v. பல்வேறு நிதிச்சட்ட நிறுவனங்களில் நடாத்தப்படும் சட்டம் அல்லது நீதித்துறைசார் அலுவல்கள் அல்லது பரிசீலனை நடவடிக்கைகள்

(இவ்விடயம் செயலாளர், திணைக்களத் தலைவரினூடாக வழங்கப்பட்டு சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

**பௌதீக தகைமைகள்**

அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எப்பிரதேசத்திலேனும் சேவைபுரிவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல் மற்றும் உள ரீதியாக தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

(ii) **ஏனைய தகைமைகள் :**

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினத்திற்கு ஆட்சேர்ப்பதற்குத் தேவையான அனைத்து தகைமைகளும் விண்ணப்பதாரரால் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- க.பொ.த (சா.தர)ப் பரீட்சையில் ஆங்கில மொழியில் குறைந்தபட்சம் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**03. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்**

i. இந்த நியமனம் நிரந்தரமானது. உங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் பற்றி அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீங்கள் கீழ்படிதல் வேண்டும். மேலும், நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் விதத்தில் தங்களால் அதற்காக பங்களிப்பு நிதி செலுத்துதல் வேண்டும்.

ii. தாங்கள் மூன்று (03) வருடகால தகுதிகாண் நிலைக்கு உட்படுகின்றீர்கள். பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருட காலத்திற்குள் ஆட்சேர்க்கும் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முதலாவது (01) வினைத்திறன் காண் தடைப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

iii. 2014.01.21 ஆம் திகதிக்குரிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இற்கிணங்க பதவியில் இணைந்து 05 வருடத்திற்குள் சேவையில் இணைந்த மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கருமமொழி பற்றிய உரிய திறனைப் பெறுதல் வேண்டும், என்பதோடு அரச கருமமொழி அல்லாத மொழியில் சேவையில் இணைந்துள்ள உத்தியோகத்தர்களால் தகுதிகாண் காலத்தினுள் குறிப்பிட்ட அரச மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

iv. அரச சேவை ஆணைக்குழுவின் சேவைத்திட்டத்தின் ஒழுங்குகளுக்கும், இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசின் தாபன விதிக்கோவைகளுக்கும், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்பட்டதாகும்.

**04. வயதெல்லை :**

விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித்தினத்திற்கு வயது 21 இற்குக் குறையாமலும் 45 இற்கு கூடாமலும் இருக்க வேண்டும்.

**05. சம்பள அளவுத்திட்டம் :**

இப்பதவிக்கு ரூ. 47615 – 10 × 1335 – 8 × 1630 -17 × 2170 - ரூ.110895/- (SL- 1- 2016) மாதாந்தச்சம்பள அளவுத் திட்டம் உரித்தாகும். (2016.02.25 ஆம் திகதிக்குரிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இற்கிணங்க அச்சுற்றறிக்கையின் உபபிரிவு 11 இற்கிணங்க சம்பளம் உரித்தாகும்.)

**06.** கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு கீழே குறிப்பிட்டுள்ளவாறு புள்ளிகள் வழங்கப்படும்

| | பாடங்கள் | | உயர்ந்த பட்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | 25 |
| | பல்கலைக்கழகமானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட இத்துறைக்குரிய பட்டப் பின் படிப்புப் பட்டம் | 25 | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் இத்துறைக்குரிய பட்டப் பின் படிப்பு டிப்ளோமா அல்லது பட்டப்பின்படிப்பு சட்டத்துறை டிப்ளோமா (ஒரு வருடத்திற்குக் குறையாத) | 20 | |
| | பல்கலைக்கழகமானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படும் சட்டம் சம்பந்தமான பட்டம் | | |
| | - முதலாம் வகுப்புச் சித்தி பெற்றிருப்பின் | 15 | |
| | - இரண்டாம் வகுப்பு உயர் (Upper class) சித்தி பெற்றிருப்பின் | 10 | |
| | - இரண்டாம் வகுப்பு (Lower class) சித்தி பெற்றிருப்பின் | 05 | |
| | சட்டக்கல்லூரியின் இறுதி வருடத்தில் முதலாம் (First class) வகுப்பில் சித்தி பெற்றிருப்பின் | 10 | |
| | சட்டக்கல்லூரியின் இறுதி வருடத்தில் இரண்டாம் வகுப்பு (Second class) சித்தி பெற்றிருப்பின் | 05 | |
| | **குறிப்பு :** கௌரவப்பட்டம் (Honest) இறுதிப் பரீட்சையில் சித்தியெய்தியிருப்பின் மட்டும் 05 புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.<br>(உயர்ந்தபட்சம் ஒரு தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்) | | |
| 02. | **மேலதிக தொழில்சார் அனுபவங்கள்** | | 35 |
| | i. மேலதிக கல்வித் தகைமைகள்<br>அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் உரிய துறைபற்றிய ஒரு வருடத்திற்குக் கூடிய டிப்ளோமா பெற்றிருப்பின்<br>(ஒரு டிப்ளோமாவிற்கு 10 புள்ளிகள்)<br>அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் உரிய துறைபற்றிய 06 மாதங்களுக்குக் கூடிய மற்றும் ஒரு வருடத்திற்குக் குறைந்த டிப்ளோமா பாடநெறிக்காக<br>(ஒரு டிப்ளோமாவிற்கு 05 புள்ளிகள்)<br>அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் உரிய துறைபற்றிய 03 மாதங்களுக்குக் கூடிய மற்றும் 06 மாதங்களுக்குக் குறைந்த டிப்ளோமா பாடநெறிக்காக<br>(ஒரு டிப்ளோமாவிற்கு 03 புள்ளிகள்)<br>(இலக்கம் 01 இன் கீழ் புள்ளிகள் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் தவிர்ந்த ஏனைய) | 10 | |
| | ii. மேலதிக அனுபவம்<br>ஒரு சட்டத்தரணியாக அரச சேவையில் அல்லது தனியார் துறையில் சேவைபுரிந்த அனுபவம்<br>(ஒரு வருடத்திற்கு 05 புள்ளிகள் வீதம் உயர்ந்தபட்சம் 25 புள்ளிகள்)<br>(06 மாதங்களுக்குக் கூடிய மற்றும் ஒரு வருடத்திற்குக் குறைந்ததாயின் - 02 புள்ளிகள்)<br>(அடிப்படைத் தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவைப்படும் சட்டத்தரணியாக சேவைபுரிந்த 03 வருட சேவைக்காலம் தவிர்ந்த)<br>(20 வருடங்களுக்குக் குறையாத சேவைக்காலத்தைப் பூரணப்படுத்தியுள்ள சட்டத்தரணியின் அல்லது ஜனாதிபதி சட்டத்தரணியின் அல்லது நீதவான் ஒருவரிடம் பெற்றுக்கொண்ட சான்றிதழ் மூலம் மேலதிக அனுபவத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்)<br>(மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அரச உத்தியோகத்தர்கள் அல்லது தனியார் துறையில் சேவைப்புரிந்த உத்தியோகத்தர்களுக்காக நிறுவனத்தின் தலைவரினூடாக மேலதிக அனுபவத்தை உறுதிப்படுத்தும் போது விண்ணப்பதாரர் சட்டத்துறைப் பதவியில் சேவைப் புரிந்தமைக்காக சேவைச்சான்றிதழ்/ சான்றிதழ்களினூடாக உறுதிப்படுத்தல் வேண்டும்.) | 25 | |
| 03. | **மொழித் தேர்ச்சி** | | 15 |
| | ஆங்கில மொழியில் மேற்கொள்ளப்பட்ட பட்டப் பின் படிப்புப்பட்டம் / பட்டம் / பட்டப்பின் படிப்பு சட்ட அறிஞர் பட்டம் / சட்ட அறிஞர் பட்டம் (உரிய பரீட்சையின் வினாப்பத்திரங்கள் அனைத்தும் ஆங்கில மொழியிலேயே விடைகள் அளிக்கப்பட்டிருத்தல் வேண்டும்) | 15 | |
| | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் ஆங்கில மொழி சம்பந்தமான சான்றிதழ் பாடநெறிக்காக (01 வருடத்திற்கு அல்லது 1500 மணித்தியாலங்கள்) | 10 | |
| | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பயடும் ஆங்கில மொழி சம்பந்தமான சான்றிதழ் பாடநெறிக்காக | | |
| | - 06 மாதங்கள் / 720 மணித்தியாலங்கள் | 07 | |
| | - 03 மாதங்கள் / 360 மணித்தியாலங்கள் | 05 | |
| | (உயர்ந்தபட்ச தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்) | | |
| 04 | **தகவல் தொழிநுட்பம் சம்பந்தமான அறிவு** | | 10 |
| | பல்கலைக்கழகமானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் பட்டம் சம்பந்தமாக தகவல் தொழிநுட்பத்தை பிரதான பாடமாக மேற்கொண்டிருப்பின் | 10 | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் ஒரு (01) வருடத்திற்குக் குறையாத தகவல் தொழிநுட்பம் சம்பந்தமான பாடநெறி அல்லது 1500 மணித்தியாலங்களுக்கு | 07 | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் தகவல் தொழிநுட்பம் சம்பந்தமான சான்றிதழ் பாடநெறிக்காக | | |
| | - 06 மாதங்கள் / 720 மணித்தியாலங்கள் | 05 | |
| | - 03 மாதங்கள் / 360 மணித்தியாலங்கள் | 03 | |
| | (உயர்ந்தபட்ச தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்) | | |
| 05. | **நேர்முகப்பரீட்சையின் போது காட்டப்படும் திறமை** | | 15 |
| | i. பொது அறிவு மற்றும் நுண்ணறிவு | 05 | |
| | ii. சட்டத்துறையில் நவீன நடைமுறைகள் பற்றிய அறிவு | 05 | |
| | iii. தெளிவாக கருத்துத் தெரிவிக்கும் திறமை மற்றும் ஆளுமை | 05 | |
| | **மொத்தம்** | | **100** |

**07.** விண்ணப்பதாரரின் ஆளடையாளம்

- பொருத்தமான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது சகல விதத்திலும் பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர் மட்டுமே.
- நேர்முகப் பரீட்சையில் சகல ஆவணங்களிலும் மூலப்பிரதி மற்றும் முறையாக உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.
- நேர்முகப் பரீட்சையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆளடையாளப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

i. ஆட்பதிவு ஆணையாளரினால் விநியோகிக்கப்படும் அடையாள அட்டை
ii. செல்லுபடியான கடவுச்சீட்டு

**08.** விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் :

I. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2020.10.23 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்,நீர்ப்பாசனத் திணைக்களம், இலக்கம் 230, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07'' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

II. விண்ணப்பிக்க வேண்டிய மாதிரி விண்ணப்பபம் இவ்வறிவித்தலின் இறுதியில் காணப்படுகிறது. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை (A4) அளவிலான கடதாசியை உபயோகித்து முதலாவது பக்கத்தில் இலக்கம் 1.0 தொடக்கம் 3.0 வரையும் இரண்டாம் பக்கத்தில் இலக்கம் 4.0 தொடக்கம் 6.0 வரையும் மூன்றாம் பக்கத்தில் இலக்கம் 7.0 தொடக்கம் 8.0 வரையும் அமையுமாறு தனது கையெழுத்தினால் பூரணப்படுத்த வேண்டும். (விண்ணப்பப்பத்திரத்தின் நகல் பிரதியொன்றை தம்மிடம் வைத்திருப்பது பிரயோசனமாக அமையும்.)

III. விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்'' என தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

IV. விண்ணப்பப் பத்திரத்தில் விண்ணப்பதாரர் கையொப்பமானது அரசாங்கப் பாடசாலை அதிபர்/ சமாதான நிதவான் /சத்திய ஆணையாளர் / சட்டத்தரணி / பிரசித்த நொத்தாரிசு / முப்படை அதிகாரி அல்லது ரூபா 47,615/- தொகையை மாதாந்த திரட்டிய சம்பளமாக பெறும் அரசாங்க சேவையிலுள்ள நிரந்தர பதவியையுடையவர்கள் போன்றவர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

V. தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை தனது திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

VI. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்றவாறு அமையாத மற்றும் முறையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**09.** பொய்யான தகவல்களை வழங்குதல்

உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு தகவல் அது பொய்யானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்பதற்கு முன்னர் நிரூபிக்கப்பட்டால் உங்களது விண்ணப்பம் இரத்துச்செய்யப்படும். ஆட்சேர்க்கப்பட்டதன் பின்னர் நிரூபிக்கப்பட்டால் அதற்கு உரிய நடவடிக்கைகளுக்கு அமைய சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. இந்த வெற்றிடத்தை நிரப்புதல் அல்லது நிரப்பாதிருத்தல் சம்பந்தமான உரிமை அரச சேவை ஆணைக்குழுவிற்கு உரியதாகும்.

11. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயம் சம்பந்தமாக அல்லது இந்த ஆட்சேர்த்தல் செயன்முறையில் ஏதாவது சிக்கல்கள் காணப்படுமாயின் அது தொடர்பாக அரச சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

12. இந்த வர்த்தமானி அறிவித்தலானது தமிழ், சிங்களம், ஆங்கில மொழிகளில் காணப்படுவதோடு ஏதேனும் தெளிவின்மை காணப்பட்டால் சிங்கள மொழியிலுள்ள அறிவித்தலே செல்லுபடியானதாக கருதப்படும்.

அரச சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்தின் படி,

**செயலாளர்,**
**நீர்ப்பாசன அமைச்சு**
2020.09.09

## மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீர்ப்பாசன அமைச்சின்**

**நீர்ப்பாசனத் திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல் - 2020**

| நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் ஊடக மொழி | |
|---|---|

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும். (அலுவலக உபயோகத்திற்காக மட்டும்)
சிங்களம் -1 / தமிழ் -2 / ஆங்கிலம் 3)

குறிப்பு : விண்ணப்பிக்கும் மொழியை மாற்ற முடியாது

1.0 (1.1) முதலெழுத்துக்களுடன் பெயர் : Mr. / Mrs./ Miss ...........................
(உதாரணம் GUNAWRDHANA, .M.G.B.S.K. (ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

(1.2) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் : ........................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

(1.3) முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு / திருமதி / செல்வி .............
......................................................................................................
(சிங்களத்தில் / தமிழில்)

(1.4) முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு / திருமதி / செல்வி ..............
......................................................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

2.0 (2.1) நிரந்தர முகவரி : ......................................................................
( தமிழில் / சிங்களத்தில்)

(2.2) நிரந்தர முகவரி : ......................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

3.0. 3.1 ஆண் / பெண் :
ஆண் - 0 பெண் - 1 ☐

3.2. திருமணமானவர் / திருமணமாகாதவர் பற்றி :
திருமணமானவர் - 1 திருமணமாகாதவர் - 2 ☐

3.3. பிறந்த வருடம்: ☐☐☐☐

3.4. 2020..................... அன்று வயது :
வருடம் ☐☐ மாதம் ☐☐ நாள் ☐☐

3.5 தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

4.0 4.1 நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தலுக்கிணங்க பெற்றுக்கொண்டுள்ள தகைமைகள் பற்றிய விபரம்

| தகைமைகள் பெற்றுக்கொண்ட நிறுவனம் | பெற்றுக்கொண்ட திகதி |
|---|---|
| ................................................................ | ................................................ |
| ................................................................ | ................................................ |
| ................................................................ | ................................................ |

மேல் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக சத்தியம் செய்த திகதி :

4.2 விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலின் இலக்கம் 06 இன் கீழ் உள்ள ஒவ்வொரு தகைமைகளும் பெற்றுக்கொள்ளப்பட்டதற்குரிய விபரம்

4.3 மேலதிக கல்வித் தகைமைகள்: ......................................................
4.4 மேலதிக தொழில்சார் அனுபவங்கள் :.............................................
4.5 மேலதிக அனுபவம் : .....................................................................
4.6 மொழித் தேர்ச்சி : ...........................................................................
4.7 தகவல் தொழிநுட்பம் சம்பந்தமான அறிவு: .......................................

5.0 தாங்கள் ஏதாவது குற்றத்திற்கு நீதி மன்றத்தினால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளீரா? ☐
உரிய கூட்டினுள் குறிப்பிடுக (ஆம் எனின் விபரத்தைத் தருக)
......................................................................................................

6.0 விண்ணப்பதாரியின் சான்றிதழ்

இவ்விண்ணப்பத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானதும் உண்மையானதும் ஆகும் என்பதோடு அனைத்துப் பிரிவுகளும் சரியாக பூரணப்படுத்தியுள்ளேன் எனவும், என்னால் வழங்கப்பட்டுள்ள இப்பிரகடனம் பொய்யானது என நிரூபிக்கப்பட்டால் நான் ஆட்சேர்ப்பதற்கு தகுதியற்றவர் என்பதும் நியமனம் கிடைக்கப்பெற்ற பின்னர் நிரூபிக்கப்பட்டால் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன் என்பதோடு, சகல ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்படுவேன் எனவும் குறிப்பிடுகின்றேன்.

திகதி ............................... ............................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

7.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு/ திருமதி/ செல்வி ............................................. அவர்களை தனிப்பட்ட ரீதியில் அறிவேன் எனவும் அவர் எனது முன்னிலையில் ....................................ஆம் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி :......................... ....................................................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்

முழுப் பெயர் :
பதவி :
திகதி :
(அலுவலக முத்திரை)

8.0 திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :

மேலே விபரிக்கப்பட்டுள்ள திரு/ திருமதி/ செல்வி..............................என்பவர் இத்திணைக்களத்தில் / இந்நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும் அவரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானது எனவும், வேலை மற்றும் நடத்தை என்பன திருப்தியானது எனவும், அவருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கையும் இல்லை எனவும் இப்பதவிக்கு இவர் தெரிவுசெய்யப்பட்டால், அவரை சேவையிலிருந்து விடுவிக்கமுடியும் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:.................. ...........................................................
திணைக்கள/ நிறுவனத் தலைவரின் கையொப்பம்

பெயர் :
பதவிப்பெயர் :
முகவரி :
திகதி :
(அலுவலக முத்திரை)

# லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவின் 2021ம் ஆண்டிற்கான கள்ளுத்தவறணைகளுக்கான குத்தகை விற்பனை - மீள் கேள்விக்கோரல்

2021 ஜனவரி மாதம் 1ம் திகதி முதல் 2021 திசெம்பர் 31 ம் திகதி வரையிலான காலப்பகுதியில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவின் புளித்த கள்ளினை சில்லறை விலைக்கு விற்பனை செய்வதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் மீண்டும் என்னால் கோரப்படுகின்றன.

02. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 2020.07.10 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை 2020.10.07 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக லுணுகலை பிரதேச செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

**டீ.எம்.என். திசாநாயக்க,**
**பிரதேச செயலாளர்**
**லுணுகலை.**

2020.09.16
**லுணுகலை பிரதேச செயலகத்தில்**

---

# උතුරු මැද පළාත් ක්‍රීඩා දෙපාර්තමේන්තුව
# விளையாட்டுத் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
# DEPARTMENT OF SPORTS - NORTH CENTRAL PROVINCE

## விலைமனு அழைப்பு தொடர்பான பெறுகை அறிவித்தல்

## வட மத்திய மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் 2020ஆம் வருடத்திற்காக விளையாட்டு உடைகளைக் கொள்வனவு செய்வதற்கான விலைமனுக் கோரல்

**விலைமனு இலக்கம் : NCP/DS/PD/PROC-05(i)/2020**

வட மத்திய மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் 2020ஆம் வருடம் தொடர்பாக விளையாட்டு உடைகளைக் கொள்வனவு செய்வதற்காக, தகுதியுள்ள நிறுவனங்களிடமிருந்து இத்தால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுப் பத்திரங்கள் 2020 ஒக்டோபர் 14ம் திகதி மு.ப. 10.00 மணி வரை பொறுப்பேற்கப்படும்.

**விபரம்**

02. இந்த விலைமனுக் கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் மூலம் மேற்கொள்ளப்படும்.

03. இந்த விலைமனு தொடர்பான விலைமனு அழைப்ப, விலைமனு நிபந்தனை மற்றும் விலைமனு மாதிரி, விலைமனுதாரருக்கான ஆலோசனைகள் மற்றும் உரித்தான ஏனைய விபரங்கள் உள்ளிட்ட விலைமனுக்கோரும் ஆவணத்தை, மீளளிக்கப்படாத ரூ. 1,000.`.- தொகையை கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்திற்குச் செலுத்தி, 2020.09.21 முதல் 2020.10.13 வரையான அலுவலக தினங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

04. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுப் பத்திரங்கள், "விலைமனு இலக்கம் NCP/DS/PD/PROC-05(i)/2020 என தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 2020.10.14 அன்று மு.ப.ப 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பப்படவோ அவ்வாறில்லையெனில் மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டிக்கு சேர்க்கப்படவோ வேண்டும். குறித்த நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

05. வட மத்திய மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட எதிர்பார்க்கப்படும் விளையாட்டு உடைகள் மற்றும் தொகை பின்வருமாறு:-

| உருப்படி இலக்கம் | உடைகளின் விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | மேசைப் பந்து | 14 |
| 2 | பெட்மின்டன் | 14 |
| 3 | கிரிக்கற் | 21 |
| 4 | நெட்போல் | 12 |
| 5 | வொலிபோல் | 28 |
| 6 | கபடி | 24 |
| 7 | கூடைப்பந்து | 24 |
| 8 | ஹொக்கி | 36 |
| 9 | எல்லே | 40 |
| 10 | கால்பந்து | 40 |
| 11 | செஸ் | 12 |
| 12 | கெரம் | 10 |
| 13 | பீச் வொலிபோல் | 04 |
| 14 | கடற்கரை கபடி | 12 |
| 15 | ரக்பி | 24 |
| 16 | தடகளம் | 140 |
| 17 | மல்யுத்தம் | 38 |
| 18 | கராத்தே தோ | 40 |
| 19 | தய்கொன்டோ | 32 |
| 20 | ஜூடோ | 38 |
| 21 | குத்துச் சண்டை | 30 |
| 22 | உடற்பயிற்சி | 18 |
| 23 | வுஷு | 32 |
| 24 | ஜிம்னாஸ்டிக் | 20 |
| 25 | நீச்சல் | 60 |
| 26 | பாரம் தூக்குதல் | 32 |
| 27 | Track Kit (டீசேர்ட்/ பொட்டம்) | **895** |

06. விளையாட்டு உடை தொகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படலாம் என்பதுடன் அது தொடர்பான அதிகாரம் திணைக்களத்தின் பெறுகைச் சபைக்குரியதாகும்.

07. 2020.10.14 அன்று மு.ப. 10.00 மணிக்கு விலைமனு மூடப்பட்டதன் பின்னர் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளுக்குக் கலந்துகொள்ளலாம். மேலதிக விபரங்களை வட மத்திய மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் தொலைபேசி இலக்கமான 025-4928391/ 4928392 அல்லது பெக்ஸ் இலக்கம் 025-2234473 மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**வட மத்திய மாகாண விளையாட்டுத் திணைக்களம்,**
**அநுராதபுரம்.**

---

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9இன் கீழ், **Athista (Private) Limited** 19ஆம் திகதி யூலை மாதம் 2020ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கம்பனியின் பதிவு இலக்கம்: PV 00224541
பதிவு முகவரி: **இலக்கம்: 14, இனபெயாலைன் வீதி, தெகிவளை.**
**செயலாளர்**
Tees' Management Consultants and Secretarial Services (Pvt) Ltd.

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9இன் கீழ், **H T Farm (Private) Limited** 29ஆம் திகதி யூலை மாதம் 2020ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கம்பனியின் பதிவு இலக்கம்: PV 00225174
பதிவு முகவரி: **இலக்கம்: 15, டபிள்யூ.ஏ. சில்வா மாவத்தை, கொழும்பு-06.**
**செயலாளர்**
Tees' Management Consultants and Secretarial Services (Pvt) Ltd.

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(1)இன் படி கீழ்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கின்றோம்.

கம்பனியின் பெயர்: **செனட்ரல் ஸ்பைஸ் ஃபார்மிங் எக்ஸ்போர்ட் (பிரைவட்) லிமிட்டட்**
பதிவு இலக்கம்: **PV 0027183**
பதிவு முகவரி :
(முன்னால் மக நெகும்ம, கெகிராவ வீதி, கனேவல்பொல.
பதிவு திகதி: 10.09.2020
**கம்பனி செயலாளர்**

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்: **கௌடான கம்மியுனிட்டி ஸ்டோர் (பீவீடீ) எல்டீடி**
பதிவிலக்கம்: பீவீ 00226695
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 31.08.2020
பதிவு முகவரி: **44, கவ்டான வீதி, தெஹிவளை**
Maheswaran Branavan
BBK PARTNERHIP (PVT) LTD
Company
**கம்பனி செயலாளர்கள்**

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், கூட்டிணைக்கப்பட்டுள்ளது

கம்பனியின் பெயர்:
**எக்டிவ் டெக் நெட் வர்க்ஸ் (பிவிடி) எல்டிடீ**
பதிவு முகவரி:
1ம் மாடி இல. 10 வஜிரா வீதி, கொழும்பு 04
பதிவு இலக்கம்
PV 104491
பதிவு திகதி: 15.03.2015

---

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(1)ஆம் பிரிவின் கீழ், அறிவித்தல்

**01.**கம்பனியின் பெயர்: **ஜீ பீ எச் என்ஜினியர்ஸ் (பிவீடி) எல்டிடீ**
பதிவிலக்கம்: **PV 00223252**
திகதி: **22.06.2020**
பதிவு அலுவலக முகவரி: **இல.7/18, சீவலீ மாவத்தை, ஹுணுபிட்டிய, வத்தளை.**

**02.**கம்பனியின் பெயர்: **ஈகல் எனெர்ஜி சொலூஷன்ஸ் (பிவீடி) எல்டிடீ**
பதிவிலக்கம்: **PV 00225067**
திகதி: **27.07.2020**
பதிவு அலுவலக முகவரி: **இல.108, பஹல இம்புல்கொட, இம்புல்கொட.**

**03.**கம்பனியின் பெயர்: **சிலோன் அக்ரோ ஃபுட் டெக் கன்சல்சல்டன்ட்ஸ் (பிவீடி) எல்டிடீ**
பதிவிலக்கம்: **PV 00227007**
திகதி: **07.09.2020**
பதிவு அலுவலக முகவரி: **இல.73/70, குருந்துவத்த வீதி, பத்தரமுல்ல.**

**04.**கம்பனியின் பெயர்: **அலன்குலம ஃபெமிலி பேக்கர்ஸ் (பிவீடி) எல்டிடீ**
பதிவிலக்கம்: **PV 00220604**
திகதி: **22.02.2020**
பதிவு அலுவலக முகவரி: **இல.253, காலி வீதி, கல்கிஸ்சை.**

**05.**கம்பனியின் பெயர்: **கோல்டன் மெங்கோ விலேஜ் (பிவீடி) எல்டிடீ**
பதிவிலக்கம்: **PV 00220649**
திகதி: **25.02.2020**
பதிவு அலுவலக முகவரி: **இல.253, காலி வீதி, கல்கிஸ்சை.**

**06.**கம்பனியின் பெயர்: **ஐ கியு எச் டீ என்ஜினியரிங் (பிவீடி) எல்டிடீ**
பதிவிலக்கம்: **PV 00221532**
திகதி: **23.03.2020**
பதிவு அலுவலக முகவரி: **இல.17, காலி வீதி, கொழும்பு - 06.**

**07.**கம்பனியின் பெயர்: **அசெண்ட் கோர்ப் (பிவீடி) எல்டிடீ**
பதிவிலக்கம்: **PV 00222437**
திகதி: **02.06.2020**
பதிவு அலுவலக முகவரி: **இல.15/1, சார்ல்ஸ்வே, கொழும்பு - 03.**

**செயலாளர்**

---

## வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| KJ -3XXX | MICRO | MX -MARK 11 | 2010 |
| **ஜீப்** | | | |
| KC -9XXX | HYUNDAI | TUCSON | 2006 |
| **லொறி** | | | |
| PU -2XXX | TATA | ACE-EX | 2012 |
| PU -4XXX | YUEJIN | NJ1022DU | 2012 |
| DAA -0XXX | MAHENDRA | MAXXIMO PLUS | 2013 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| HE -5XXX | BAJAJ | AUTO RE2 STROKE | 2003 |
| QP -5XXX | BAJAJ | AUTO AR-4S | 2008 |
| YB -1XXX | PIAGGIO | APE | 2010 |
| YH -7XXX | TVS | KING | 2010 |
| YI -5XXX | BAJAJ | RE 205 | 2010 |
| AAC -4XXX | BAJAJ | RE 205 | 2012 |
| AAM-7XXX | BAJAJ | RE 205 | 2013 |
| **டிராக்டர்** | | | |
| RF -3XXX | KIOTI | EX50 | 2017 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112088505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2020 செப்டம்பர் 18ஆம், 21ஆம், 22ஆம் மற்றும் 23ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2020 செப்டம்பர் 23ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

**இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.**

**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி**

Mercantile Investments and Finance PLC

**தலைமை அலுவலகம்**
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

தொடர்பு:
**ஜானக்க - 0711624559 / பாக்ய - 0702762065**

www.skillsads.com

---

## தங்க நகைகள் ஏலவிற்பனை

### சிங்ஹபுத்ர பினான்ஸ் பி.எல்.சி

சிங்ஹபுத்ர பினான்ஸ் பி.எல்.சி கண்டி, கட்டுகஸ்தொட்ட. குண்டசாலை குருநாகல், தெஹிவளை ஆகிய கிளை காரியாலயங்களில் தங்க கடன் பிரிவில் அடகு வைக்கப்பட்ட 2020.05.31 திகதி வரை கால எல்லை நிறைவடைந்த தங்க நகைகள் 2020.09.26 திகதி சனிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு இல 11, கந்தே வீதி, கண்டி எனும் இடத்தில் அமைந்துள்ள சிங்ஹபுத்ர பினான்ஸ் பி.எல்.சி பகிரங்க ஏலவிற்பனையில் விற்கப்படவுள்ளது.

**சிங்ஹபுத்ர பினான்ஸ் பி.எல்.சி**
**கண்டி**

எவ்வித முன்னறிவித்தலுமின்றி இவ் ஏலவிற்பனையை பிற்போடுவதற்கும்/ நிறுத்துவதற்கு இணைந்து நடத்துவதற்கும் சிங்ஹபுத்ர பினான்ஸ் பி.எல்.சி தன்னகத்தே கொண்டுள்ளது.

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**மெடிக்கல் சயன்சஸ் மானிப்பாய் (கரண்டி) லிமிட்டட்**
பதிவிலக்கம்: **ஜீஎல் 00226903**
கூட்டிணைக்கப்பட்ட திகதி: **04.09.20**
பதிவு முகவரி: Jameson Block,
**க்ரீன் மெமோரியல் ஹொஸ்பிடல், மானிப்பாய் வீதி, மானிப்பாய்.**
**Maheswaran Branavan**
**BBK Partnership (Pvt) Ltd**
**Company Secretaries**

---

# தென் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு

தென் மாகாண அரச சேவையில் வெற்றிடமாக உள்ள நெசவு மட்பாண்ட உலோக கைத்தொழில் ஆலோசகர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பதற்கெனதகைமை தென்மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் கீழ்வரும் தகைமை உடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

**கல்வித் தகைமை :**

கா.பொ.த (சா.தர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலமொழி கணிதம் உட்பட மூன்று திறமைச்சித்திகளுடன் ஆறு(06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**தொழிற்தகைமை :**

- மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு

  தென் மாகாண கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் உரிய கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் இரண்டு வருட சேவை அனுபவத்துடன் கூடிய நிரந்தர ஊழியராக இருத்தல்.

- திறந்த விண்ணப்பதாரிகளுக்கு

  தேசிய சிற்பக்கலை சபை அல்லது அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம் ஒன்றின் மூலம் அல்லது தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் நடாத்தப்படும் ஆறுமாத கால அல்லது அதற்கு மேற்பட்ட பயிற்சிப்பாடநெறி ஒன்றினை மேற்கொண்டிருத்தல்.

  **அல்லது**

  குறித்த துறையில் இரண்டு வருட கால அனுபவத்தை பெற்றிருத்தல்.

தென்மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் (www.psc.sp.gov.lk) பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட தங்களது விண்ணப்பப்படிவத்தினை 2020.10.09 ம் திகதி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் விலாசத்திற்கு கிடைக்கக்கூடிய விதமாக பதிவுத்தபாலில் மாத்திரம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**செயலாளர்**
**தென் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு**
**6ம் மாடி மாவட்ட செயலக கட்டடத் தொகுதி**
**காலி**

**கே. எல். தயானந்த**
**செயலாளர்**

**மேலதிக விபரங்களுக்கு - 091-2248450**

---

# 2021ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

## பன்வில பிரதேச சபை

2021ஆம் ஆண்டிற்கு கீழ்க்காணும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக தகைமையுள்ள உற்பத்தியாளர்கள், நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் பதிவு செய்வதற்கு என்னால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் பன்வில பிரதேச சபையிலிருந்து அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். பதிவு செய்தல் 2020.10.01 முதல் 2020.11.30 வரை இடம் பெறும் விண்ணப்பங்களை 2020.12.01ஆம் திகதிக்கு முன்னர் தலைமையகத்தில் ஒப்படைத்தல் வேண்டும்.

அலுவலகத்திற்கு காசு செலுத்தி பற்றுச்சீட்டொன்றை பெற்றுக்கொள்வதன் மூலம் பதிவுக் கட்டணத்தைச் செலுத்தலாம். கட்டணம் ஒரு உருப்படிக்கு ரூ. 2,000.00 ஆகும். ஒவ்வொரு உருப்படிக்கும் வேறுவேறாக பதிவுக் கட்டணத்தை செலுத்துதல் வேண்டும். அத்துடன் காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் மூலம் செலுத்துவதாயின் "தலைவர், பன்வில பிரதேச சபை" என்ற பெயரில் அத் தொகையைச் செலுத்துதல் வேண்டும். காசோலைகள் அல்லது வேறு விதத்தில் காசு செலுத்தும் வேளையில் காசு மாறும் வரை பதிவு செய்தல் இடம்பெற மாட்டாது.

| | வழங்கல் பொருட்கள்/ உருப்படிகள்/ சேவைகள் | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| I. | காகிதாதிகள், பத்திரிகை, சஞ்சிகை புத்தங்கள் வழங்குதல் | 2,000/- |
| II. | அச்சு விடயங்கள் போஸ்டர், பதாகை, ஆவண மாதிரிகள் | 2,000/- |
| III. | அலுவலக உபகரணங்கள் | 2,000/- |
| IV. | உபகரணங்களைப் பழுதுபார்த்தல் | 2,000/- |
| V. | மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் வழங்குதல் | 2,000/- |
| VI. | நீர்க்குழாய்/ துப்புரவேற்பாட்டு உபகரணம்/ மின் உபகரணங்களை வழங்குதல் | 2,000/- |
| VII. | வாகன உதிரிப்பாகங்கள், டயர், டியூப் வழங்குதல் | 2,000/- |
| VIII. | வாகனங்களை சேர்விஸ் செய்தல் | 2,000/- |
| IX. | வாகனங்களை பழுதுபார்த்தல் | 2,000/- |
| X. | கொங்கிறீட் உற்பத்திப் பொருட்கள், ஹியூம்பைப், மரவேலைப்பாடு, சிலை, கட்டிட நிர்மாணம் பொருட்கள் தீந்தை | 2,000/- |
| XI. | உணவு, சிற்றுண்டி வகை, பரிமாறும் பொருட்களை வழங்குதல் | 2,000/- |
| XII. | சீருடை, பதக்கங்கள், திரைச்சீலை வழங்குதல் | 2,000/- |
| XIII. | மோட்டர் கிரேடர், மட்டமாக்கும் இயந்திரம், JCB, வெல்டிங் வேலைகள் | 2,000/- |
| XIV. | நில அளவையாளர் சேவை சட்டத்தரணி சேவை வழங்குதல் | 2,000/- |

**நிபந்தனைகள்**

01. விண்ணப்பத்துடன் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியையும் சமர்ப்பித்தல் கட்டாயமானது.
02. பதிவு செய்துள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுவதுடன், சந்தர்ப்பத்திற்கேற்ப வெளியிருந்தும் விலை மனுக்களை கோரி பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் உரிமை பிரதேச சபைக்கு உரியது.
03. கோரும் போது விலைமனுக்களை சமர்ப்பிக்காத, ஓடர் செய்யும் போது சரியான நேரத்தில், பொருட்களை ஒப்படைக்காத, சமர்ப்பிக்கப்படும். சாம்பிலின் அடிப்படையில் பொருட்களை வழங்காத, வழங்குநர்களின் பெயர்கள் அறிவித்தலின்றி பதிவுப் பட்டியலில் இருந்து நீக்கப்படும்
04. 2020.11.30ம் திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.
**தொடர்புகள் : தொலைபேசி இல:- 081-2472028**

**ஏ.ஜீ. செனவிரத்ன**
**தலைவர்,**
**பன்வில பிரதேச சபை**

---

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
AVAILABLE AT
App Store Google play Windows Store
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
LAKE HOUSE

# கேள்வி கோரல்

## Plain Gel Tubes மற்றும் Sugar Tubes கொள்வனவு செய்தல்

### கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை - களுபோவில, தெஹிவளை.

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் இவ்வைத்தியசாலையின் பிரதான ஆய்வுகூடத்திற்கு தேவையான கீழ்க்காணும் டியூப் வகைகளுக்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**01. Plain Gel Tubes with Clot Activator - 350,000 Nos.**

**02. Sugar Tubes - 120,000 Nos.**

(1) இது தொடர்பாக ஆர்வம் காட்டுகின்றவர்கள் கேள்வி ஆவணக்கட்டணமாக ரூ. 2,000.00 மீளளிக்கப்படாத விண்ணப்பப்படிவக் கட்டணத்தை கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் தமது தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்து 2020.09.18 முதல் 2020.10.02 வரை சாதாரண அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை இவ் வைத்தியசாலையின் நிதிப் பிரிவில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

(2) கேள்வி விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் - கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, களுபோவில தெஹிவளை - Plain Gel Tubes & Sugar Tubes இற்கான விலைமனுக்கள் - 2020.10.05 என்று குறிப்பிட்டு 2020.10.05 மு.ப. 10.00 இற்கு முன் கிடைக்குமாறு, தலைவர், பிரதேச பெறுகைக் குழு, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, களுபோவில, தெஹிவளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். 2020.10.05 மு.ப. 10.00 இற்கு கணக்காளர் பணிமனையில் விலைமனுக்கள் திறக்கப்படும். இவ் டியூப் வகைகளுக்கு சாம்பில் வழங்குதல் கட்டாயமாவதுடன் சாம்பிலை விலைமனுக்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(03) கேள்வி ஆவணங்களில் 02 பிரதிகளில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என்று குறிப்பிட்டு வேறுவேறு உறைகளில் இட்டு அவ் 02 உறைகளையும் தனி உறையொன்றில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

(04) கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அந்த இடத்திலேயே கேள்வி விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன், கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதிக்கு அவ்வேளையில் சமுகமளிக்க அனுமதியளிக்கப்படும்.

(05) கேள்வி ஆவணங்களை கட்டணம் செலுத்தாமலேயே கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் கணக்காளர் பணிமனையில் பரீட்சிக்க முடியும்.

(06) அரச ஒப்பந்தங்கள், நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்களுக்கு கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட மாட்டாது.

(07) குறித்த கேள்விகளை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பிரதேச பெறுகைக் குழுவிற்கு உரியது.

(08) மேலதிக விபரங்களுக்கு கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் கணக்காளரை அழையுங்கள். (தொ.பே. இலக்கம் - 0112763038)

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை,**
**களுபோவில,**
**தெஹிவளை.**

---

### அற்றோணித் தத்துவப்பத்திரத்தை இரத்துச்செய்தல்

லக்கல பிரதேச செயலாளரின் குறிப்பு இல. 11/3/3/1/23D

காணி அமைச்சின் குறிப்பு இல. LD/05/2010/ MV/53C

இங்கு கீழே காட்டப்பட்டிருக்கும் அட்டவணையில் விபரிக்கப்படும் காணியை மொரகஹகந்த, களுகங்கை அபிவிருத்தித் திட்டத்திற்காக எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள். மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 2188/49 கொண்ட 2020.08.14 திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு அதிவிஷேட வர்த்தமானியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | : மாத்தளை |
| பிரதேச செயலகப் பிரிவு | : லக்கல |
| கிராம அலுவலர் பிரிவு | : இல. E402 B மாஓய பிரிவு |
| கிராமம் | : மாஓய (குறிப்பிட்ட ஆரம்ப வரைபடத்திற்கு இணங்க) |
| காணியின் பெயர் | : மேற்குறித்த இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின்படி |
| வரைபட இலக்கம் | : பி.ஆ.வ.20 குறைநிரப்பி 152 பத்திர இல. 256 |
| விஸ்தீரணம் | : 0.9877 ஹெக்டயார் |
| துண்டு இலக்கம் | : 9258, 9259, 9260, 9261, 9264, 9266, 9267, 9268 |
| வரைபட இலக்கம் | : பி.ஆ.வ. 20 குறைநிரப்பி 153 பத்திர இல. 257 |
| விஸ்தீரணம் | : 0.7466 ஹெக்டயார் |
| துண்டு இலக்கம் | : 9270, 9271, 9272 |

**எஸ்.விஜயகுமார்**
**பிரதேச செயலாளர்**
**லக்கல**

**2020.09.14ஆம் திகதி**
**லக்கல பிரதேச செயலகத்தில்**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**வனவிலங்கு பாதுகாப்பு, மின்சார வேலிகளை அமைத்தல், அகழிகள் மற்றும் காடுகளை உருவாக்கல் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கடைபிடித்தல் மற்றும் வனவள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

### வன பரிபாலனத் திணைக்களம்

### கறுப்பு நிற (ஒளி ஊடுருவாத) பொலித்தீன் உறைகளை வழங்குவதற்கான விலைமனுக்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொலித்தீன் உறைகளை வழங்குவதற்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக் கூறுகளை வன பரிபாலனத் திணைக்களம் அழைக்கின்றது.

| பொலித்தீன் உறைகளின் அளவு | தடிப்பம் | நிறம் மற்றும் வகை | தொகை |
|---|---|---|---|
| 9"x4" | 300 | கறுப்பு (ஒளி உட்புகாதது) | 2000000 |
| 9"x6" | 400 | கறுப்பு (ஒளி உட்புகாதது) | 800000 |
| 12"x8" | 500 | கறுப்பு (ஒளி உட்புகாதது) | 500000 |
| 18"x12" | 500 | கறுப்பு (ஒளி உட்புகாதது) | 25000 |

விலைமனுதாரர்கள், மீளளிக்கப்படாத வைப்பான ரூ. 3500/= ஐ ரொக்கப் பணமாகச் செலுத்தி, 2020 ஒக்டோபர் 08ஆம் திகதி வரையான சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.45 மணி வரை பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, "சம்பத்பாய"விலுள்ள வன பரிபாலனத் திணைக்களத்தின் கணக்குப் பிரிவிலிருந்து விலைமனுக் கோரும் ஆவணங்கள் மற்றும் உரித்தான ஏனைய ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்கள் 2020 ஒக்டோபர் 09ஆம் திகதி பி.ப. 2.00 வரை பொறுப்பேற்கப்பட்டு, அதே தினம் பி.ப. 2.15 மணிக்கு மூடப்படும்.

ஒரு விமைனுப் பிணையாக மீளளிக்கப்படும் ரூபா 65,000.00 தொகையானது வன பரிபாலன அதிகாரிகள் நாயகம் பெயரில் வரவு வைக்கப்பட்டு, உரித்தான பொது 172 பற்றுச்சீட்டு விலைமனுவுடன் இணைக்கப்படல் வேண்டும். அல்லது ஏதாவதொரு வர்த்தக வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூ. 65,000.00 வங்கி வரைவு விலைமனுக்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

வார நாட்களில் வேலை நேரங்களில் பிரதான கணக்காளரிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**வன பரிபாலன அதிகாரிகள் நாயகம்**

**வன பரிபாலனத் திணைக்களம்,**
**82, "சம்பத்பாய"**
**ரஜமல்வத்த வீதி,**
**பத்தரமுல்ல.**
**தொ.பே: 0112866026.**

## ஊவா மாகாண சபை

### தகுதிச் சான்றிதழ்களை வழங்குவதற்காக மோட்டார் வாகன வேலைத்தளங்களை அனுமதித்தல் – 2021

2021ஆம் வருடத்திலுள்ள பொது மக்கள் சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள வர்த்தக ரீதியான வாகனங்களுக்கு (பஸ், லொறி போன்ற வாகனங்களுக்கு) தகுதிச் சான்றிதழை வழங்குவதற்காக பதிவு செய்து கொண்டுள்ள மோட்டார் வாகன வேலைத்தளங்களின் உரிமையாளர் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குரிய டிப்போக்களிடமிருந்து ஊவா மாகாண சபை போக்குவரத்து அமைச்சின் செயலாளரினால் விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**01. தேவைப்படும் தகைமைகள்**

**1. பௌதிக வசதிகள்**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பௌதிக வசதிகள் உங்கள் வேலைத்தளத்தில் காணப்படல் வேண்டும்.

அ. 20 அடி நீளம் 2½ அடி அகல 4½ அடி ஆழமுள்ள குழியொன்று அவ்வாறில்லையெனில் கான் படிக்கட்டு அல்லது உயர்த்தியொன்று (Ramp), பரீட்சார்த்தம் தொடர்பாக அவ்வாறான வசதிகளைக் கொண்டமைந்த இடமொன்று (அமுக்க உயர்த்தியொன்றேனும் ஏற்றுக்கொள்ளலாம்.)

ஆ. பிரேக்கைப் பரீட்சிக்கும் உபகரணமொன்று (டெப்லி மீட்டர் அல்லது ரோலர் பிரேக்டெஸ்டர்)

இ. குறித்த பரிசீலனைகளுக்கு போதியளவு மட்டமான தரையுடன் கூடிய இடமொன்று சகிதம் ஹெட் லைட்டின் இலக்கைப் பரிசோதிக்கும் உபகரணமொன்று

ஈ. குறித்த பரிசீலனைகளுக்குத் தேவைப்படும் பொறிமுறை கருவிகள் இருத்தல் வேண்டும்

உ. தகுதிச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளும் வர்த்தக ரீதியான வாகனம், மோட்டார் வண்டி வேலைத்தளத்திலுள் திருப்புவதற்கான வசதி காணப்பட வேண்டியதுடன் பிரதான வீதிக்கு சட்ட ரீதியாக பிரவேசிக்கும் இயலுமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இந்த வசதிகள் இல்லாத மோட்டார் வாகன வேலைத் தளங்களுக்கு மேற்படி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு இணங்களினால் விண்ணப்பிக்க முடியும். அத்தாட்சிப்படுத்தும் அலுவலகரின் தகைமைகளைப் பரீட்சித்ததன் பின்னர் மேற்கொள்ளப்படும் துறை பரிசீலனையின் போது குறித்த பொருட்கள் பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**2. பதவி நிலையினர்**

அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த தகைமைகளைப் கொண்டுள்ளவர்கள் மோட்டார் வாகன வேலைத் தளங்களில் வேலைக்கமர்த்தப்படல் வேண்டும்.

- தேசிய தொழில்நுட்ப பொறியியல் டிப்ளோமா (பொறிமுறை) (NDT) சான்றிதழ் மற்றும் மோட்டார் வாகன இயந்திரவியல் தொடர்பாக 03 வருட அனுபவம்

அல்லது

- உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (பொறிமுறை) (HNDE) சான்றிதழ் மற்றும் மோட்டார் வாகன இயந்திரவியல் தொடர்பான 03 வருட அனுபவம்

அல்லது

- தேசிய பொறியியல் கற்கை டிப்ளோமா (பொறிமுறை (NDES) சான்றிதழ் மற்றும் மோட்டார் வாகன இயந்திரவியல் தொடர்பாக 03 வருட அனுபவம்.

அல்லது

- இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் (CGTTI) மோட்டார் தொழில்நுட்பம் தொடர்பான நான்கு (04) வருட (முழுநேர) பாடநெறி சான்றிதழ் மற்றும் மோட்டார் இயந்திரவியல் தொடர்பான 07 வருட அனுபவம்.

அல்லது

- மேலேயுள்ள தகைமைகளுக்கமைவாக NVQVஆம் மட்டத்திலான (NVQ LEVELV) இயந்திரவியல் டிப்ளோமா பாடநெறியொன்றுடன் 05 வருட அனுபவம்

அல்லது

- இலங்கை போக்குவரத்துச் சபையில் IV தரத்திலான டிப்போ பொறியியலாளரொருவராக 10 வருட அனுபவம்.

அல்லது

- மேற்படி தகைமைகளுக்கமைவாக வெளிநாட்டு பாடநெறியொன்றுடன் 05 வருட அனுபவம் (அந்த வெளிநாட்டு பாடநெறிகள் மேற்படி தகைமைகளுக்கமைவானதென விண்ணப்பதாரரால் உறுதி செய்யப்படல் வேண்டும்.)

மற்றும்

D மற்றும் C, E தரங்களுடன் கூடிய செல்லுபடியாகும் கனரக வாகன சாரதி அனுமதிபத்திரம்.

**3. தேவைப்படும் ஆவணங்கள்**

விண்ணப்பத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

- வியாபாரம் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட சான்றிதழின் அத்தாட்சிப்படுத்திய பிரதி
- பரிசோதகர்கள் வருவதற்கு இலகுவானதாக நகரின் மத்தியிலிருந்து செல்ல முடியுமான நுழைவுப் பாதையின் வரைபடம் ஒன்றுடன் மோட்டார் வாகன வேலைத்தளம் அமைந்துள்ள சரியான அமைவிடம் விண்ணப்பதாரரினால் குறிப்பிடப்படல் வேண்டும்.
- அத்தாட்சிப்படுத்தும் அதிகாரியின் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்திய போட்டோ பிரதியொன்றை சமர்ப்பிக்க வேண்டும்.
- மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக ரூ. 250/- தொகையை ஊவா மாகாண போக்குவரத்து அமைச்சின் நிதி உதவியாளருக்கு செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை சமர்ப்பிக்க வேண்டும்.

உரிய முறையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில், 'தகுதி சான்றிதழை வழங்குவதற்காக மோட்டார் வாகன வேலைத்தளங்களைப் பதிவு செய்தல் 2021' எனக் குறிப்பிட்டு, 'செயலாளர், ஊவா மாகாண போக்குவரத்து அமைச்சு', ஊவா மாகாணம், பதுளை' என்ற முகவரிக்கு 2020.10.09 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

(மாதிரி விண்ணப்பத்தை வாரத்தின் அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00 வரை) ஊவா மாகாண போக்குவரத்து அமைச்சின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**டீ.ஜீ.சீ ஜயதுங்க**
**செயலாளர்,**
**போக்குவரத்து அமைச்சு,**
**ஊவா மாகாணம்.**
**2020.09.18**

## இரத்தினபுரி மாநகர சபை - கேள்வி கோரல்

# சேவைகள் மற்றும் இடங்களை 2021ஆம் வருடத்தில் குத்தகைக்கு விடல்

இரத்தினபுரி மாநகர சபைக்குச் சொந்தமான பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள சேவைகள் மற்றும் இடங்களை 2021ஆம் வருடத்தில் குத்தகைக்கு விடுவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| **கேள்வி விண்ணப்பப் படிவங்களை வழங்க ஆரம்பிக்கும் திகதி** | - | 2020-09-18 |
| **கேள்வி விண்ணப்பப் படிவங்கள் வழங்குதல் முடிவுறும் திகதியும் நேரமும்** | - | 2020-10-19 பி.ப. 3.00 மணி |
| **கேள்வி விண்ணப்பப் படிவங்கள் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும்** | - | 2020-10-20 மு.ப. 10.00 மணி |
| **கேள்விகள் திறக்கப்படும் திகதியும் நேரமும்** | - | 2020-10-20 மு.ப. 10.30 மணி |

**அட்டவணை 01**

| தொ. இல. | சேவை மற்றும் இடங்கள் | ஆகக் குறைந்த மாதாந்தக் கட்டணம் | | விண்ணப்பப் படிவக் கட்டணம் | கேள்விப் பிணை வைப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | பொதுச் சந்தையின் மீன் கடை (கடை .இல. 35/38) | கடை இல. 35 | ரூபா 95,360.00 | ரூபா 3,000.00 | ரூபா 20,000.00 |
| | | கடை இல. 38 | ரூபா 45,100.00 | ரூபா 3,000.00 | ரூபா 20,000.00 |
| 2 | பொதுச் சந்தையின் மாட்டிறைச்சிக் கடைகள் (கடை .இல. 36/43/46) | கடை இல. 36 | ரூபா 246,000.00 | ரூபா 3,500.00 | ரூபா 50,000.00 |
| | | கடை இல. 43 | ரூபா 186,000.00 | ரூபா 3,500.00 | ரூபா 50,000.00 |
| | | கடை இல. 46 | ரூபா 325,000.00 | ரூபா 3,500.00 | ரூபா 50,000.00 |
| 3 | பொதுச் சந்தையின் ஆட்டிறைச்சி / கோழியிறைச்சிக் கடைகள் (கடை .இல. 37/42) | கடை இல. 37 | ரூபா 86,500.00 | ரூபா 2,500.00 | ரூபா 10,000.00 |
| | | கடை இல. 42 | ரூபா 76,000.00 | ரூபா 2,500.00 | ரூபா 10,000.00 |
| 4 | மக்கள் சந்தையின் பன்றியிறைச்சிக் கடையை நடாத்திச் செல்லல் | | ரூபா 30,000.00 | ரூபா 2,500.00 | ரூபா 20,000.00 |
| 5 | பொதுச் சந்தையின் மரக்கறி / சில்லறைக் கடை (இறைச்சி/ மீன்/ மதுபானம் தவிர்ந்த) (கடை .இல. 39/40/44) | கடை இல. 39 | ரூபா 25,000.00 | ரூபா 1,000.00 | ரூபா 15,000.00 |
| | | கடை இல. 40 | ரூபா 25,000.00 | ரூபா 1,000.00 | ரூபா 15,000.00 |
| | | கடை இல. 44 | ரூபா 25,000.00 | ரூபா 1,000.00 | ரூபா 15,000.00 |
| 6 | மத்திய பஸ் நிலையத்தில் தனியார் பஸ்களை நிறுத்தி வைப்பதற்கான கட்டணங்களை அறவிடல் (பஸ் ஒன்றுக்கு 50.00 ரூபா) | | ரூபா 385,550.00 | ரூபா 3,500.00 | ரூபா 25,000.00 |
| 7 | மத்திய பஸ் நிலையத்தின் உள்ளக மலசலகூடத்தை நடாத்திச் செல்லல் (கட்டணம் 10.00) | | ரூபா 326,000.00 | ரூபா 2,500.00 | ரூபா 25,000.00 |
| 8 | லக்ஷ்மி திரையரங்கிற்கு அருகிலுள்ள மலசலகூடத்தை நடாத்திச் செல்லல் (கட்டணம் 10.00) | | ரூபா 3,000.00 | ரூபா 250.00 | ரூபா 2,000.00 |
| 9 | புவகுபிட்டிய பொது மலசலகூடத்தை நடாத்திச் செல்லல் (கட்டணம் ரூபா 10.00) | | ரூபா 5,000.00 | ரூபா 250.00 | ரூபா 2,500.00 |
| 10 | மக்கள் சந்தை பொது மலசலகூடத்தை நடாத்திச் செல்லல் (கட்டணம் ரூபா 10.00) | | ரூபா 20,000.00 | ரூபா 500.00 | ரூபா 2,500.00 |
| 11 | தெமுவாவன பொது மலசலகூடத்தை நடாத்திச் செல்லல் (கட்டணம் ரூபா 10.00) | | ரூபா 5,100.00 | ரூபா 250.00 | ரூபா 2,000.00 |
| 12 | மனசர பஸ் முற்றவெளி குளியலறை, சிற்றுண்டிச்சாலை மற்றும் மலசலகூடத்தை நடாத்திச் செல்லல்<br>i. பஸ் வண்டி நிறுத்தி வைத்தல் ரூபா 100,000.00<br>ii. குளியலறை ரூபா 40,000.00<br>iii. மலசலகூடம் ரூபா 20,000.00<br>iv. சிற்றுண்டிச்சாலை ரூபா 40,000.00 | | ரூபா 200,000.00 | ரூபா 2,500.00 | ரூபா 15,000.00 |
| 13 | இரத்தினபுரி மாநகர சபை பொதுச் சந்தை கட்டிடத் தொகுதிக்கு பின்புறமுள்ள வாகனத் தரிப்பிடம் மற்றும் பொது மலசலகூடத்தை நடாத்திச் செல்லல் | | ரூபா 40,000.00 | ரூபா 2,500.00 | ரூபா 20,000.00 |
| 14 | குடுகல்வத்த சந்தைக் கட்டிடத் தொகுதியின் 01ஆம் இலக்க கடை அறை ஆகக் குறைந்த தொகை (கீ மணி) 220,000.00 | | ரூபா 8,500.00 | ரூபா 2,500.00 | ரூபா 20,000.00 |
| 15 | தெமுவான இரத்தினக்கல் சந்தைக் கட்டிடத் தொகுதிக்கு அருகிலுள்ள வாகனத் தரிப்பிடத்தை நடாத்திச் செல்லல் | | ரூபா 25,000.00 | ரூபா 1,500.00 | ரூபா 5,000.00 |
| 16 | மக்கள் சந்தை கட்டிடத்தின் தரைத் தளத்தில் வாகனத் தரிப்பிடத்தை நடாத்திச் செல்லல் | | ரூபா 26,750.00 | ரூபா 2,500.00 | ரூபா 20,000.00 |
| 17 | இரத்தினபுரி மாநகர சபைக்குரித்தான பொம்பகலேயில் அமைந்துள்ள மாநகர பூங்கா மற்றும் நீச்சல் தடாகத்தை நடாத்திச் செல்லல் | | ரூபா 50,100.00 | ரூபா 2,500.00 | ரூபா 15,000.00 |

18 (I) வாகனத் தரிப்பிடக் கட்டணங்களை அறவிடல்

| தொ. இல. | சேவை மற்றும் இடங்கள் | ஆகக் குறைந்த மாதாந்தக் கட்டணம் | விண்ணப்பப் படிவக் கட்டணம் | கேள்விப் பிணை வைப்பு |
|---|---|---|---|---|
| 1 | பிரதான வீதி – குடுகல்வத்த, ஜகத்பிட்டிய சந்தியிலிருந்து வறக்காதொட்ட பாலம் வரை | | | |
| 2 | நகர சபை பிரதேசம் சதொச சந்தியிலிருந்து கங்க அத்தர எல்லை வரை | | | |
| 3 | நகர சபைக்கு முன்னால் நாமடுன்ன எரிபொருள் நிரப்பும் நிலையம் முதல் நகர சபை பிரதேசம் | ரூபா 162,000.00 | ரூபா 3,000.00 | ரூபா 20,000.00 |
| 4 | புதிய நகர மாவட்டச் செயலகம் அருகில் | | | |
| 5 | சரக்கு களஞ்சிய வீதி, பாலித்த ஸ்டோர்ஸ் அருகில் இருந்து செலான் வங்கி வரை | | | |

18 (II) வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக அறவிடக்கூடிய கட்டணங்கள்

| | வாகனத்தின் வகை | கட்டணம் அறவிடல் முதலாம் மணித்தியாலம் | மேலதிக மணித்தியாலம் |
|---|---|---|---|
| அ) | மோட்டார் சைக்கிள் (கட்டணம் ரூபா 20.00) | ரூபா 20.00 | ரூபா 10.00 |
| ஆ) | முச்சக்கர வண்டி (கட்டணம் ரூபா 30.00) | ரூபா 30.00 | ரூபா 20.00 |
| இ) | கார், வேன், இலகுரக வாகனங்கள் (கட்டணம் ரூபா 50.00) | ரூபா 50.00 | ரூபா 20.00 |
| ஈ) | 26 பயணிகள் அல்லது 26 பேருக்குக் குறைந்த எண்ணிக்கையானோரை ஏற்றிச் செல்வதற்கான அனுமதிப் பத்திரத்தையுடைய பஸ் வண்டிக்கான (கட்டணம் ரூபா 50.00) | ரூபா 50.00 | ரூபா 20.00 |
| உ) | 26 பயணிகளுக்கு மேற்பட்ட எண்ணிக்கையானோரை ஏற்றிச் செல்வதற்கான அனுமதிப் பத்திரத்தையுடைய பஸ் வண்டிக்கான (கட்டணம் ரூபா 100.00) | ரூபா 100.00 | ரூபா 25.00 |
| ஊ) | லொறிகளுக்கு - (கட்டணம் ரூபா 50.00) | ரூபா 50.00 | ரூபா 20.00 |
| எ) | ஏனைய வாகனங்களுக்கு - (கட்டணம் ரூபா 50.00) | ரூபா 50.00 | ரூபா 20.00 |
| | **கவனிக்கவும்:** வைத்தியசாலைக்கு அருகில் கட்டணம் அறவிடுவது விலக்களிக்கப்பட்டுள்ளது. | | |

18 (III) பொதுச் சந்தைக் கட்டிடத்தொகுதிக்கு பின்புறமுள்ள வாகனத் தரிப்பிடம் மற்றும் தெமுவாவ இரத்தினக்கல் சந்தைக் கட்டிடத் தொகுதிக்கு அருகிலுள்ள வாகனத் தரிப்பிடத்திற்கு அறவிடக்கூடிய கட்டணங்கள்

| தொ. இல. | வாகனத்தின் வகை | முதலாம் மணித்தியாலத்திற்கான கட்டணம் | மேலதிக மணித்தியாலத்திற்கு |
|---|---|---|---|
| 01 | கார் | ரூபா 50.00 | ரூபா 20.00 |
| 02 | வேன் | ரூபா 50.00 | ரூபா 20.00 |
| 03 | லொறி | ரூபா 50.00 | ரூபா 20.00 |

- முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்களை 2020-10-20ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் இரத்தினபுரி மாநகர சபையின் மாநகர ஆணையாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது மாநகர ஆணையாளர், மாநகர சபை, இரத்தினபுரி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மேற்குறிப்பிடப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் அனுப்பலாம்.
- சமர்ப்பிக்கப்படும் மாதாந்தக் கட்டணங்கள் மற்றும் விண்ணப்பக் கட்டணங்களுக்கு VAT (அரச வரிகள்) அறவிடப்படும்.
- ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விதாரரினால் கேள்வித் தொகையின் மூன்று மடங்குக்குச் சமமான தொகையை உடன்படிக்கை செய்து கொள்வதற்கு முன் சபையில் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.
- கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டமை தெரிவிக்கப்பட்டு 07 நாட்களுக்குள் மூன்று மாத வைப்புத் தொகையைச் செலுத்தி உடன்படிக்கையில் கைச்சாத்திடல் வேண்டும்.
- கேள்விப் படிவங்களை இயைபுடைய கட்டணங்களைச் செலுத்தி மாநகர சபையில் அரச வேலை நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
- கேள்விகள் தொடர்பான இறுதித் தீர்மானத்தை மாநகர கேள்விச் சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
- மேலதிக விபரங்களுக்கான விசாரணைகள்: மாநகர ஆணையாளர்: 045-2222275, 045-2222759
  மாநகர கணக்காளர்: 045-2231900

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**இரத்தனபுரி.**

**2020-09-18ஆம் திகதி**

# மேல் மாகாண மாகாண சபை - பொறியியல் பணியகம்

# விலைக் கோரல் அழைப்பு

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக இயைபுடைய பிராந்தியப் பொறியியலாளரின் பெறுகைக் குழுத் தலைவரினால் தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல் மூலம் ஒப்பந்ததாரர்கள் தெரிவு செய்யப்படுவர்.
3. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்ளும் வெற்றிகரமான விலைகூறுநர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்படாதவர்கள் அல்லது ஒப்படைக்கப்பட்ட ஒப்பந்தங்களை கைவிட்டவர்களாகவும் மற்றும் பூர்த்தி செய்யாதவர்களாகவும் இருக்கக் கூடாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

| | (2) செயற்றிட்டத்தின் பெயர் | (3) பிரதேச பொறியியலாளர் அலுவலகம் | (4) நிதியளிப்பு | (5) தேவையான CIDA பதிவு | (6) வெட் வரியின்றி நிர்மாணத்திற்கான மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தச் செலவு (நேரடியான நிர்மாணத்திற்கான மொத்தச் செலவு) (ரூபா) | (7) மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | (8) மீளளிக்கப்படும் வைப்பு / விலைமனுப் பிணை (ரூபா) | (9) விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் / விலைக்கோரல் வைப்பு செய்ய வேண்டிய/ சமர்ப்பிக்க வேண்டி இடம் மற்றும் தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பாணந்துறை ஆதார வைத்தியசாலை கழிவுநீர் முறைமையின் திருத்தவேலைகள் | பாணந்துறை | மாகாண சுகாதாரம் | C8 | 3,890,192.60 | 2000.00 | ரொக்கம் பணம் 25,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம் (பாணந்துறை), ஸ்ரீ மகா விகார வீதி, பாணந்துறை 038-2243078 |
| 2 | பாணந்துறை கேத்துமதி வைத்தியசாலை ஆய்வுகூடத்தின் திருத்தவேலைகள் | பாணந்துறை | மாகாண சுகாதாரம் | C9 | 2,736,152.80 | 1000.00 | ரொக்கம் பணம் 10,000.00 | |
| 3 | பாணந்துறை கேத்துமதி வைத்தியசாலையின் புதிய பிரசவ விடுதியின் நீர்க் கசிவைத் தடுத்தல் மற்றும் ஏனைய திருத்தவேலைகள் | பாணந்துறை | மாகாண சுகாதாரம் | C8 | 4,457,291.60 | 2000.00 | ரொக்கம் பணம் 25,000.00 | |
| 4 | பாணந்துறை கேத்துமதி வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை கதவுகளைப் பொருத்துதல் | பாணந்துறை | மாகாண சுகாதாரம் | C7 | 5,486,243.50 | 3000.00 | ரொக்கம் பணம் 50,000.00 அல்லது விலைமனுப் பிணை முறி 100,000.00 | |
| 5 | பாணந்துறை ஆதார வைத்தியசாலையின் சத்திரசிகிச்சையத்தின் கதவுகளை பிரதியீடு செய்தல் | பாணந்துறை | மாகாண சுகாதாரம் | C7 | 9,200,000.00 | 3000.00 | ரொக்கம் பணம் 50,000.00 அல்லது விலைமனுப் பிணை முறி 100,000.00 | |
| 6 | வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலையின் 13ஆம் இலக்க வார்ட்டை நவீனமயப்படுத்துதல் | கம்பஹா | மாகாண சுகாதாரம் | C7 | 4,712,699.66 | 3000.00 | ரொக்கம் பணம் 50,000.00 அல்லது விலைமனுப் பிணை முறி 100,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம் (கம்பஹா), நீதிமன்ற வீதி, கம்பஹா. 033-2222515 |
| 7 | கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையில் அம்பியூலன்ஸ் சாரதிகள் மற்றும் சிற்றூழியர்களின் இளைப்பாறும் அறையின் திருத்தவேலைகள் | கம்பஹா | மாகாண சுகாதாரம் | C8 | 3,558,831.00 | 2000.00 | ரொக்கம் பணம் 25,000.00 | |
| 8 | வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலை மின் இணைப்பு முறைமையை பிரதியீடு செய்தல் | கம்பஹா | மாகாண சுகாதாரம் | C6 | 10,119,680.00 | 4000.00 | விலைமனுப் பிணை முறி 2,000,000.00 | |
| 9 | வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலை மேற்கவிகையை (Canapy) பிரதியீடு செய்தல் | கம்பஹா | மாகாண சுகாதாரம் | C9 | 1,848,079.60 | 1000.00 | ரொக்கம் பணம் 10,000.00 | |
| 10 | வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலையின் 01ஆம் இலக்க திருத்தவேலைகள் | கம்பஹா | மாகாண சுகாதாரம் | C9 | 924,601.90 | 1000.00 | ரொக்கம் பணம் 10,000.00 | |
| 11 | மீரிகம ஆதார வைத்தியசாலையின் கண் சிகிச்சைக்காக நோயாளர் காத்திருக்கும் இடத்தை (waiting area) நிர்மாணித்தல் | மினுவாங்கொட | மாகாண சுகாதாரம் | C9 | 2,252,944.74 | 1000.00 | ரொக்கம் பணம் 10,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம் (மினுவங்கொட), மினுவங்கொட 011-2296418 |
| 12 | மீரிகம அரச விசேடத்துவ (ஆண்கள்) சிறுவர் புனருத்தாபன நிலைய மின் முறைமையின் திருத்தவேலைகள் | மினுவாங்கொட | மாகாண சுகாதாரம் | C9 | 1,245,295.75 | 1000.00 | ரொக்கம் பணம் 10,000.00 | |
| 13 | உடுபில வைத்தியசாலையின் அலுவலக அறைக்காக மேலதிக பகுதியொன்றை இணைத்தல் | பியகம | மாகாண சுகாதாரம் | C8 | 4,133,017,65 | 2000.00 | ரொக்கம் பணம் 25,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம் (பியகம), உடுபில வீதி, மாகொல, பியகம. 011-2963524 |
| 14 | உடுபில வைத்தியசாலையின் வெளி நோயாளர் சிகிச்சை பிரிவுக் கட்டிடத்திற்கு மேலதிக பகுதியொன்றை இணைத்தல் | பியகம | மாகாண சுகாதாரம் | C7 | 4,669,160.00 | 3000.00 | ரொக்கம் பணம் 50,000.00 அல்லது விலைமனுப் பிணை முறி 100,000.00 | |
| 15 | பிலியந்தலை மாவட்ட வைத்தியசாலை எல்லைச் சுவரின் திருத்தவேலைகள் (மேலதிக வேலை) | இரத்மலான | மாகாண சுகாதாரம் | C9 | 1,638,668.25 | 1000.00 | ரொக்கம் பணம் 10,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம் (இரத்மலானை), 25, மாளிகாவ வீதி, இரத்மலானை. 011-2622517 |
| 16 | பிலியந்தலை மாவட்ட வைத்தியசாலை கன்னங்கர வார்ட்டின் திருத்தவேலைகள் | இரத்மலான | மாகாண சுகாதாரம் | C8 | 3,081,918.60 | 2000.00 | ரொக்கம் பணம் 25,000.00 | |
| 17 | மீகொட ஆயுர்வேத வைத்தியசாலைக்கு கம்பி வேலியை நிர்மாணித்தல் | ஹோமாகம | மாகாண சுகாதாரம் | C9 | 1,473,779.25 | 1000.00 | 10,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம் (ஹோமாகம), நீதிமன்ற வீதி, ஹோமாகம. 011-2855090 |

04. கேள்வி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

05. இதில் ஆர்வம் கொண்டுள்ள விலைகூறுநர்கள் மேலதிக விபரங்களை அட்டவணையின் மூன்றாம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள இயைபுடைய பொறியியல் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அலுவலக நேரத்தினுள் அந்த அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. மேற்படி அட்டவணையில் ஐந்தாம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறித்த மீளளிக்கப்படாத கட்டணத்தை 2020-09-21ஆம் திகதி முதல் 2020-10-09ஆம் திகதி வரை எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 03.00 மணிக்கிடையில் இயைபுடைய கட்டிடப் பணிப்பாளருக்குச் செலுத்தி (அட்டவணையின் 09ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) செலுத்தியதன் பின் பிரதேச பொறியியலாளர் அல்லது மாகாண கல்விப் பணிப்பாளர் (மே.மா) அவர்களுக்கு எழுத்து மூல விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரில் எந்தவொரு விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதி முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

07. மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை வெவ்வேறான கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டு இரு நகல்களில் தயாரிக்கப்பட்ட விலைமனுக்களை இயைபுடைய பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்கு (9ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம் அல்லது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இயைபுடைய பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்கு அல்லது மாகாண கல்வித் திணைக்களத்திற்கு (மே.மா) கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது 2020-10-12ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது நிறைவடைந்த உடனடுத்து அவ்வேளையிலேயே சமுகம் தருவதற்கு விருப்பமுள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

08. சகல விலைக் கோரல்களுடனும் (மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) மீளளிக்கப்படும் பண வைப்பு பற்றுச்சீட்டு / விலைக்கோரல் பிணை முறியை இணைத்தல் வேண்டும்.

09. தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**பொறியியல் பணியகம்,**
**5ஆம் மாடி, 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**
**தொலைபேசி/ தொலைநகல்: 011-2092510**






# கொழும்பு மாநகர சபை

## மாநகர பொறியியலாளரின் திணைக்களம்

## விலைமனுவிற்கான அழைப்பு

**பின்வரும் வேலைக்காக விலைமனுக்கள் இரு பிரதிகளில் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.**

| | விலைமனு அம்சம் | விலைமனுதாரரின் தகுதித்தன்மை | பெசேவ அடங்கலாக மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் ரூ. ச. | விலைமனுப்பிணைப் பெறுமதி ரூ. ச. | மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|---|---|
| 01. | கிந்த எல நீரேந்தும் பிரதேச மழைநீர் முறைமையின் மேம்படுத்தல் (ஹீன் எலவின் உபநீரேந்தும் பிரதேசம் | CIDA தரம் சி-07 அல்லது மேற்பட்டதில் பதிவு பெற்ற மழை நீர் வடிகாலமைப்பு ஒப்பந்தக்காரர்கள் | 2,160.00 | 100,000.00 ருபா நிபந்தனையற்றதும் முதன் முதலிலேயே சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பத்திலேயே பண வழங்கலுக்கான உத்தரவாதம் | பணிப்பாளர் பொறியியல் (வடிகாலமைப்பு) தொலைபேசி: 011-2674809 |
| 02. | மாளிகந்தயிலுள்ள வடிகாலமைப்பு பிரிவின் இறைக்கும் நிலைய அலகிற்கான களஞ்சியசாலை கட்டிட நிர்மாணம். | CIDA தரம் சி-04 அல்லது மேற்பட்டதில் கட்டிட ஒப்பந்தக்காரர்கள் | 2,160.00 | 1,386,728.00 ருபா நிபந்தனையற்றதும் முதன் முதலிலேயே சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பத்திலேயே பண வழங்கலுக்கான உத்தரவாதம் | பணிப்பாளர் பொறியியல் (வடிகாலமைப்பு) தொலைபேசி: 011-2674809 |

**குறிப்பு:** விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் விலைமனுக்களுக்கான விபரமான அழைப்பு வழங்கப்படும். விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் இணைக்கப்பட்டுள்ள கம்பனிகளின் பதிவாளர் திணைக்கள **PCA/13278** என்ற சுற்றறிக்கையைப் பார்வையிடவும்.

**விலைமனுக்களின் மூடும் நேரம்** : 2020.10.09 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு. மூடும்நேரத்திற்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**விலைமனுக்கோரல் ஆவணத்தை வழங்கல்** : 2020.10.08 ஆம் திகதி மு.ப. 10 வரையும் கொழும்பு-07. நகர மண்டபத்திலுள்ள மாநகர பொறியியலாளரின் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவ பிரிவிலிருந்து.

**விலைமனுவின் செல்லுபடியாகும் காலம்** : விலைமனுவானது 2021.04.06 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் வகையிலிருத்தல் வேண்டும்.

**விலைமனுப்பிணையின் செல்லுபடியாகும் காலம்** : 2021.05.06 ஆம் திகதி வரையும் விலைமனுப்பிணையானது செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

**கேள்விப் பெட்டியின் அமைவிடம்** : மாநகர செயலாளரின் திணைக்களம், நகர மண்டபம், கொழும்பு-07. தபாலில் அனுப்பப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**ஏனைய நிபந்தனைகள் :**

(அ) ஒவ்வொரு விலைமனுதாரரும் CIDA தரத்தை நிரூபிப்பதற்காக செல்லுபடியாகும் தன்மையிலுள்ள ஆவணங்களை கேள்வி ஆவணங்களை கையேற்கும்போது முன்வைத்தல் வேண்டும் (ஏற்புடையதாயின்)

(ஆ) இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(இ) பணக்கொடுப்பனவிற்குப் பின்னர் வியாபார தலைப்புக் கடிதமொன்றில் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கை கடிதமொன்றின் அடிப்படையிலேயே விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும்.

(ஈ) மாநகர பொறியியலாளரின் திணைக்கள செயற்றிட்ட முகாமைத்துவ பிரிவில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.

(உ) மூடும் நேரத்தின் பின்னர் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும். இந்நாள் பொது விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டால், அடுத்துவரும் வேலை நாளன்று மு.ப. 10 மணிக்கு விலைமனுக்கள் மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.

(ஊ) விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

**ரொஷாணி திசாநாயக்க – சட்டத்தரணி,**
**மாநகர ஆணையாளர்,**
**கொழும்பு மாநகர சபை,**
**நகர மண்டபம், கொழும்பு-07.**

# தென் மாகாண சபை

## தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை

***(தெ.மா. கடற்றொழில், விலங்கு உற்பத்தி மற்றும் அபிவிருத்தி, சுற்றாடல் விவகாரங்கள், கிராமிய கைத்தொழில், மின்சக்தி மற்றும் கிராமிய மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு)***

## "பொறுப்பதிகாரி" பதவிக்கு ஆட்சேர்ப்பு

தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை மற்றும் நிலையங்களுக்கு பொறுப்பாக கடமையாற்றுவதற்காக பொறுப்பதிகாரி ஒருவரை சேர்த்துக் கொள்வதற்காக கீழ்க்காணும் தகைமைகளுள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **கல்வித் தகைமைகள்**

I.I. வெளி விண்ணப்பதாரிகள்

I. கல்விப் பொது தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில்,

I. சிங்களம்

II. கணிதம்

III. ஆங்கில மொழி

ஆகிய பாடங்கள் உட்பட (04) பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் ஒரே முறையில் (06) ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரம்) பரீட்சையில் குறைந்த பட்சம் மூன்று பாடங்களில் (பொது அறிவு பரீட்சை தவிர்ந்த (சித்தியடைந்திருத்தல்.

1.2. மேலதிக தகைமைகள்

I. தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தினால் அல்லது தொழில் பயிற்சி அதிகார சபையினால் நடத்தப்படும் தொழிற்பயிற்சி (தச்சுத் தொழில், சிவில் பொறியியல், மரவேலைப்பாடுகள், பூங்கா அலங்காரம்) பாடநெறியைப் பயின்றிருத்தல்.

1.3 உள்ளக விண்ணப்பதாரிகள்

அ. ஆரம்ப தரம் - தேர்ச்சியற்ற, தேர்ச்சி பெறாத சேவை வகைகளில் கீழே (ஆ) மற்றும் (இ) தகைமைகள் உள்ள ஊழியர்களுக்கு இதற்காக விண்ணப்பிக்கலாம்.

ஆ. சேவையில் நிரந்த நியமனம் வகிப்பவராக இருப்பதுடன் அப்பதவிகளில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இ. நியமனம் செய்யப்பட்ட தினத்திற்கு கிட்டிய நிரந்தர பதவியில் குறைந்த பட்சம் 05 வருட தொடர், திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**பொது நிபந்தனைகள்**

2. **வயது :-** 18 வயதிற்கு குறையாத 45 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும். (உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது)

3. **ஏனையவை :**

I. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

II. பதவிக்கு உரிய கடமைகளை சிறப்பாக நிறைவேற்றுவது போலவே நாட்டின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்கு தேவையான உடல் உள தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

III. சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.

4. **சம்பள அளவு மற்றும் விகிதம்** : (MA 1-1) 27,910 - 300 x 10 - 350x7 - 495x4 - 660x20 - 48,540 (முகாமைத்துவ சுற்று நிருபம் 2/2016 ஐ அடிப்படையாகக் கொண்டது. ஆரம்ப சம்பளமான ரூ. 27,910/- 2020.01.01ம் திகதி முதல் செலுத்தப்படும். 2020.01.01ம் திகதிக்கு ஆரம்ப சம்பள மட்டம் ரூ. 27,910/- ஆகும். அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக அரசு அனுமதித்த கொடுப்பனவுகள் செலுத்தப்படும்.

5. **நியமனத்தின் தன்மை -** நிரந்தரமானது ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கு உரித்துடையவர் ஆவார்.

6. **தேர்ந்தெடுக்கப்படும் முறைமை -** திறந்த போட்டிப் பரீட்சை மற்றும் அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் சபையின் மூலம் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்.

முழுமையான விபரங்களுடன் உங்களால் தயாரிக்கப்பட்ட சுயதரவுகளுடனான விண்ணப்பங்களை (உறுதி செய்யப்பட்ட சான்றிதழ்களின் போட்டோப் பிரதியுடன்) 2020.10.05 அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு "தலைவர், தெ.மா. கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை, இல. 349 1/2 மாத்தறை வீதி, கட்டுகொட, காலி" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் கட்டாயமானது, மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பதாரிகளின் மற்றும் குறிப்பிட்டவாறு சமர்ப்பிக்காத மற்றும் தெளிவற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**தெ.மா. கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை**
**இல. 349 1/2, மாத்தறை வீதி, கட்டுகொட, காலி.**
**091-2226296/ 091-3789290**

# பெறுகை அறிவித்தல்

## தென் மாகாண சபை

## பிரதி பிரதம செயலாளர், பொறியியல் சேவைப் பணிமனை கோட்டை - காலி

காலி, கோட்டை, பிரதி பிரதம செயலாளர் (பொறியியல் சேவை) பணிமனையின் தலைவர், பெறுகைக் குழுத் தலைவர், பிரதி பிரதம செயலாளர் (பொறியியல் சேவை) இனால் கீழ்க்காணும் வேலை விடயங்களுக்காக 2020.10.14 மு.ப. 10.30 வரை பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும். 2020.10.14 மு.ப. 10.30 இற்கு இவ் அலுவலகத்தில் கேள்விதாரர்கள் முன்னிலையில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.

| விபரம் | தேவைப்படும் பதிவு | மீளளிக்கப்படும் கேள்வி பிணை ரூ. | மீளளிக்கப்படாத கேள்வி வைப்பு ரூ. | கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளக் கூடிய மாவட்ட பொறியியலாளர் (கட்டிடங்கள் பணிமனை) |
|---|---|---|---|---|
| 1. தென் மாகாண வருமான திணைக்களத்தின் பழுது பார்த்தல்கள் மற்றும் தீந்தை பூசுதல் | C8 | 45,000.00 | 1,500.00 | மாவட்ட பொறியியலாளர் (கட்டிடங்கள்) பணிமனை - காலி |

02. கேள்விப்பத்திரங்களை 2020.10.13 பி.ப. 2.30 வரை குறித்த மாவட்ட பொறியியலாளர் பணிமனையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேலே தரப்பட்டுள்ளவாறு இலங்கை நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தின் (ICTAD) செல்லுபடியாகும் பதிவை பூர்த்தி செய்துள்ள தென் மாகாண சபையின் கீழ் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டும் குறித்த கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படும்.

03. கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் சாதாரண அலுவலக நேரங்களில் குறித்த மாவட்டப் பொறியியலாளர் (கட்டிடங்கள்) பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம். குறித்த தொலைபேசி இலக்கம் கீழே தரப்பட்டுள்ளது. மாவட்ட பொறியியலாளர் பணிமனை, காலி. - 091-2246160.

04. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளுடன் மூலப் பிரதி" மற்றும் இரண்டாம் பிரதி" என வேறு வேறாக பெயர் குறிப்பிட்டு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டு வந்து அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

05. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் வேளையில் கேள்விகளை சமர்ப்பிப்போர் அல்லது அவர் சார்பாக அதிகாரமளிக்கப்படும் பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். விலைமனுக்களில் பூர்த்தியற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விப் பிணைத் தொகையும் அரசுடமையாக்கப்படும். கேள்வப் பத்திரங்களை சமர்ப்பிக்காத கேள்விதாரர்களின் கேள்விப் பிணைத் தொகையும் அரசுடமையாக்கப்படும்.

06. மேற்படி கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட கேள்விப் பிணைக் கட்டணம் மாவட்ட அலுவலகத்திற்கு காசாகச் செலுத்தலாம் அல்லது அரச பெறுகை விதிக் கோவையின் 5: 3: 13 மாதிரிக்கு அமைவாக இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்த வங்கி மூலம் பெற்றுக்கொண்ட குறித்த பெறுமதியுடனான பிணையொன்றை பிரதி பிரதம செயலாளர் (பொறியியல் சேவை) பெயரில் சமர்ப்பித்தல் வேண்டும். காசாக செலுத்துவதாயின் பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியொன்றை கேள்விப்பத்திரத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பிணை செல்லுபடியாகும் காலம் 2020.10.14 முதல் 2021.02.11 வரையானதாக இருத்தல் வேண்டும்.

07. கேள்விகளின் செல்லுபடியாகும் காலம் 3 மாதங்களாகும்.

08. சகல விலைமனுக்களும் உள்ளடங்கிய கேள்விப் பத்திரத்தின் ஓர் அலகின் விலைமனு மற்றும் முழுத்தொகையை காட்டும் நிரல் மற்றும் சுருக்கம் (கழிவைக் காட்டும் நிரல் உட்பட) நிரமற்ற (Transparent) செலோடேப் செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

09. கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல் பற்றிய தீர்மானம் எடுத்தல் பெறுகைக் குழுவிற்கு உரியது.

**பிரதி பொதுச் செயலாளர் (பொறியியல் சேவை)**
**தென் மாகாண பொறியியல் சேவைப் பணிமனை,**
**கோட்டே - காலி.**
2020.09.18

# உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைப் பிரிவு

## மருத்துவ உபகரணத்தை வழங்குவதற்கான பெறுகை அறிவித்தல்

1. கீழே குறிப்பிடப்பட்டுள்ள மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை, கீழே குறிப்பிடப்பட்டுள்ள முடிவுத் திகதியன்று மு.ப. 10.00 மணி வரை, சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சின் பெறுகைக்குழுத் தலைவர் பொறுப்பேற்பார்.

| | உருப்படி | விலைமனுக் கோரும் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமான காலப்பகுதி | | மூடப்படும் திகதி | BES அலுவலகத்தில் மேற்கொள்ளப் படவேண்டிய மீளளிக்கப் படாத கட்டணம் (ரூ) | மதிப்பீடு செய்யப்பட்ட ஆகு செலவு (ரூ. மில்) |
|---|---|---|---|---|---|---|
| | | முதல் | வரை | | | |
| 1 | 100 Nos Multipara Monitors for NDCU | 2020.09.18 | 2020.10.12 | 2020.10.13 | 3,500.00 | 30 |
| 2 | 10 Nos 5 Part haematology Analyzers for NDCU | 2020.09.18 | 2020.10.12 | 2020.10.13 | 3,500.00 | 20 |
| 3 | 25 Nos Ultrasound Scanners for NDCU | 2020.09.18 | 2020.10.12 | 2020.10.13 | 3,500.00 | 30 |

2. இலங்கைச் சந்தைக்காக வழங்கப்படும் குறித்த உபகரணத்தின் உற்பத்தியாளர்களின் ஏக நியமனம் பெற்ற பிரதிநிதிகள்/ தர அங்கீகாரம் பெற்ற முகவர்கள் மாத்திரம் இந்த பெறுகையில் பங்குபற்ற தகைமை பெறுகின்றனர்.

3. எந்தவொரு தகுதியுள்ள ஆர்வங்காட்டும் விலைமனுதாரராலும் கொள்வனவு செய்யப்படும் பிரதிகளிலான முழுமைப்படுத்தப்பட்ட விலைமனுக்கோரும் ஆவண தொகுதியொன்றிலேயே முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. மேலே குறிப்பிடப்பட்ட காலப் பகுதியில், மு.ப. 9.00 மற்றும் பி.ப. 03.00 இடையே, கொழும்பு 10, டீசேரம் பிளேஸ், 27, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைப் பிரிவு, பணிப்பாளரிடமிருந்து (நிதியியல்) விலைமனுக்கோரும் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
(தொ.பே. 011-2691916, 2694479 - பெக்ஸ் இல. 011-2698317)

5. கொழும்பு 10, டீசேரம் பிளேஸ், 27 உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைப் பிரிவு, பணிப்பாளரின் அலுவலகத்தில் (நிதியியல்) விலைமனுக்கள் மூடப்பட்டதன் பின்னர் உடனடியாக அவை திறக்கப்படும்.

6. விலைமனுக் கோரும் ஆவணங்களை, கொழும்பு 10, டீசேரம் பிளேஸ், 27, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைப் பிரிவு, பணிப்பாளரின் அலுவலகத்தில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

7. விலைமனுக் கோரும் ஆவணத்துடன் கம்பனி பதிவாளரினால் வழங்கப்பட்ட ஒப்பந்த பதிவுச் சான்றிதழை தயவு செய்து சமர்ப்பியுங்கள்

8. உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைப் பிரிவின் பணிப்பாளரிடமிருந்து (நிதியியல்) 2684732 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்/ பெறுகைக் குழு,**
**உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைப் பிரிவு,**
**27, டீ சேரம் பிளேஸ்,**
**கொழும்பு - 10.**

Sunday Observer adz it's what you want
தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

Hand over your Classified Advertiesments to Our nearest Branch Office

Latest fees for a Classified Advertiesments (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| ரூ. 300/- (Except Thinakaran Varamanjari) | ரூ. 500/- (Except Thinakaran Varamanjari) | ரூ. 650/- |

Anuradhapura - TEL : 025 2222370 FAX : 025 2235411 / Kandy - TEL : 081 2234200 FAX : 081 2238910
Kataragama - TEL : 047 2235291 FAX : 047 2235291 / Maradana - TEL : 011 2429336 FAX : 011 2429335
Matara - TEL : 041 2235412 FAX : 041 2229728 / Nugegoda - TEL : 011 2828114 FAX : 011 4300860 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 2225361

தினகரன்
விளையாட்டு
2020 செப்டெம்பர் 18 வெள்ளிக்கிழமை
sports.tkn@lakehouse.lk



# மெக்ஸ்வெல், அலெக்ஸ் கெரி இணைப்பாட்டத்தால் ஆஸி வெற்றி

அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகள் இடையிலான ஒருநாள் தொடரின் மூன்றாவதும் இறுதியுமான போட்டியில் அவுஸ்திரேலிய அணி 3 விக்கெட்டுகளால் வெற்றியினைப் பதிவு செய்துள்ளது.

இப்போட்டியில் கிடைத்த வெற்றியுடன் அவுஸ்திரேலிய அணி மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரினையும் 2-1 எனக் கைப்பற்றியிருக்கின்றது.

இந்த ஒருநாள் தொடரின் முன்னைய இரண்டு போட்டிகளிலும் இரண்டு அணிகளும் தலா ஒரு வெற்றி வீதம் பெற்று, தொடர் 1-1 என சமநிலையான நிலையில் மூன்றாவது போட்டி புதன்கிழமை (16) மன்செஸ்டர் நகரில் தொடங்கியது.



போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து இங்கிலாந்து அணியின் தலைவர் இயன் மோர்கன் முதலில் துடுப்பாடும் சந்தர்ப்பத்தினை தனது தரப்பிற்காகப் பெற்றார். இதன்படி, போட்டியில் முதலில் துடுப்பாடிய இங்கிலாந்து அணி நிர்ணயம் செய்யப்பட்ட 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 302 ஓட்டங்கள் குவித்தது.

இங்கிலாந்து அணியின் துடுப்பாட்டம் சார்பாக, ஜொன்னி பெயார்ஸ்டோவ்தன்னுடைய10ஆவதுஒருநாள் சதத்துடன் 2 சிக்ஸர்கள் மற்றும் 12 பௌண்டரிகள் அடங்கலாக 126 பந்துகளுக்கு 112 ஓட்டங்கள் பெற்றார். இதேநேரம், அரைச்சதங்களை பூர்த்தி செய்த துடுப்பாட்டவீரர்களில் சேம் பில்லிங்ஸ் 58 ஓட்டங்களையும், கிறிஸ் வோக்ஸ் ஆட்டமிழக்காது 53 ஓட்டங்களையும் எடுத்தனர்.

மறுமுனையில் அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சு சார்பில் அடம் ஷம்பா மற்றும் மிச்செல் ஸ்டார்க் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகள் வீதம் சாய்த்திருந்தனர்.

பின்னர் போட்டியின் வெற்றி இலக்காக தீர்மானிக்கப்பட்ட 303 ஓட்டங்களை அடைய அவுஸ்திரேலிய அணி தமது பதில் துடுப்பாட்டத்தினை தொடங்கியது.

எனினும், அவுஸ்திரேலிய வெற்றி இலக்கிற்கான தமது பயணத்தில் ஆரம்பத்தில் இருந்து தடுமாற்றம் ஒன்றை காண்பித்தது. அந்தவகையில், தமது முன்வரிசை துடுப்பாட்டவீரர்கள் அனைவரினையும் பறிகொடுத்த அவுஸ்திரேலிய அணி ஒரு கட்டத்தில் 73 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்து இக்கட்டான நிலைக்குச் சென்றது.

இத்தருணத்தில் பொறுப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்திய கிளேன் மெக்ஸ்வெல் மற்றும் அலெக்ஸ் கெரி ஆகியோர் அவுஸ்திரேலிய அணியின் 6ஆம் விக்கெட்டுக்காக 212 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்தனர்.

பின்னர், இந்த இரண்டு வீரர்களின் அபார இணைப்பாட்டத்துடன் அவுஸ்திரேலிய அணி போட்டியின் வெற்றி இலக்கினை 49.4 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 305 ஓட்டங்களுடன் அடைந்தது. அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்த இணைப்பாட்டத்தினை பகிர்ந்த வீரர்களில் கிளேன் மெக்ஸ்வெல் தன்னுடைய இரண்டாவது ஒருநாள் சதத்துடன் 90 பந்துகளுக்கு 7 சிக்ஸர்கள் மற்றும் 4 பௌண்டரிகள் அடங்கலாக 108 ஓட்டங்கள் பெற்றார். மறுமுனையில், தன்னுடைய கன்னி ஒருநாள் சதத்தினைப் பதிவு செய்த, அலெக்ஸ் கெரி 114 பந்துகளுக்கு 106 ஓட்டங்களை எடுத்தார்.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில் கிறிஸ் வோக்ஸ், ஜோ ரூட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைச் சாய்த்த போதும் அவர்களது பந்துவீச்சு வீணானது.

போட்டியின் ஆட்டநாயகனாகவும் தொடர் நாயகனாகவும் கிளேன் மெக்ஸ்வெல் தெரிவு செய்யப்பட்டார்.

இப்போட்டியின் வெற்றியுடன் ஒருநாள் தொடரினை கைப்பற்றியிருக்கும் அவுஸ்திரேலிய அணி, தமது இங்கிலாந்து சுற்றுப்பயணத்தினை நிறைவு செய்து கொள்கின்றது.

SINCE 1978
42nd
OBSERVER MOBITEL
SCHOOL CRICKETER
OF THE YEAR 2020
Recognizing talent, inspiring greatness.
Sri Lanka Telecom Mobitel

**42வது ஒப்சவர்-மொபிடெல்**

**மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை- 2020**

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் ஒப்சேவர் - மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2020**

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2020**

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..........
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..........
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ..........
வாக்களித்தவர் பெயர் : ..........
முகவரி : ..........
மொபைல் இல. : ..........

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : Mobitel 4G Wi-Fi Router
2வது பரிசு: ரூ. 2,500
3வது பரிசு: ரூ.1,500
4வது பரிசு: ரூ. 1,000

42வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்:**

மொபிடெல் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 2020-09-19 இல. 28

UNLIMITED
YouTube
HD quality up to 25GB*
மாதாந்தம்
ரூ.249+வரிகள்
அழையுங்கள் #170#
TRC/M/Promo/20/01
4G LTE
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
Sri Lanka Telecom Mobitel

பேருவளையில்

## உதைபந்தாட்டத் துறை வளர்ச்சிக்காக அனைத்து உதவிகளையும் செய்வேன்

### மர்ஜான் பளீல் எம்பி

பேருவளை விசேட நிருபர்



உதைபந்தாட்டத் துறையின் வளர்ச்சிக்காக அரசாங்கத்தின் மூலம் செய்ய முடியுமான அனைத்தையும் செய்து கொடுப்பேன் என பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் கூறினார்.

பேருவளை உதைபந்தாட்டச் சங்கத்தின் புதிய தலைவராக தெரிவான சுப்பர்சன் விளையாட்டுக் கழக தலைவர் எம். எஸ்.எம். றிஸ்வான் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீலை அண்மையில் அவரது இல்லத்தில் சந்தித்தார். இச்சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பேருவளை உதைபந்தாட்டச் சங்கத்தின் புதிய தலைவராக றிஸ்வான் தெரிவானமை குறித்து பாராளுமன்ற உறுப்பினர் வாழ்த்துத் தெரிவித்தார்.

மர்ஜான் பளீல் எம். பி. மேலும் கூறியதாவது: பேருவளை பிரதேசமானது உதைபந்தாட்டத்துறையில் முன்னணி பிரதேசமாகும். தேசிய, சர்வதேச ரீதியில் விளையாடி நாட்டிற்கும், பேருவளைக்கும் புகழ் சேர்த்த பல வீரர்களை உருவாக்கிய இப் பிரதேச விளையாட்டுத்துறையை மேலும் கட்டியெழுப்ப பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் என்னால் முடியுமான அனைத்தையும் செய்வேன்.

பேருவளையின் விளையாட்டுத்துறை முன்னேற்றத்துக்கு அரசினதும், விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவினதும் பங்களிப்பை பெற்றுக்கொடுப்பேன் என்றும் அவர் கூறினார்.

உதைபந்தாட்ட வீரர்களுக்கு சிறந்த பயிற்சி வழங்குதல், விளையாட்டு உபகரணங்களைப் பெற்றுக்கொடுத்தல், உதைபந்தாட்டத்துறைக்கு தேசிய, சர்வதேச ரீதியில் புகழ்சேர்த்த பேருவளை வீரர்களை கௌரவித்தல் போன்ற நிகழ்ச்சிகளை எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டும் எனவும் றிஸ்வான் பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

பேருவளை பகுதியில் நவீன வசதிகளுடனான அங்கசம்பூரண விளையாட்டரங்கொன்றை அமைப்பதன் அவசியம் குறித்து எடுத்துக் கூறிய றிஸ்வான் எமது உதைபந்தாட்டச் சங்கம் நடாத்தும் லீக் போட்டிகள் தற்போது தர்கா நகர் ஸாஹிரா மைதானம், பாக்கீர் மாக்கார் மைதானம் ஆகியவற்றிலே நடாத்தப்படுகிறதையும் சுட்டிக்காட்டினார். தர்கா நகர் பாக்கீர் மாக்கார் விளையாட்டரங்கினையும், பேருவளை பீச் விளையாட்டரங்கையும் நவீன வசதிகளுடன் புனரமைத்து விளையாட்டுப் போட்டிகளை செவ்வனே நடாத்த வசதிகளைச் செய்து தருமாறு கோரிக்கை விடுத்தார்.

பேருவளை உதைபந்தாட்டச்சங்கம் மூலம் உதைபந்தாட்டத்துறையை மேலும் முன்னேற்ற எதிர்காலத்தில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் தலைவர் றிஸ்வான கூறினார்.

சுப்பர்சன் விளையாட்டுக்கழகத்தின் 35வது வருட பூர்த்திவிழா பற்றியும் அவர் பாராளுமன்ற உறுப்பினரிடம் எடுத்துக் கூறினார்.

## இரவு நேர மின்னொளி கிரிக்கட் விளையாட்டு போட்டிகளுக்கு அனுமதி இல்லை

### - தவிசாளர் அமானுல்லா

ஒலுவில் மத்திய விசேட நிருபர்



அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்கள் இரவு நேர மின்னொளி கிரிக்கட்சுற்றுப்போட்டிகளுக்கு அனுமதி கேட்கின்ற நிலையில், குறித்த விடயத்தை தான் அனுமதிக்கப்போவதில்லை என பிரதேச சபையின் தவிசாளர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரித்த போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் கருத்துதெரிவிக்கையில், கொரோனா வைரசின் தாக்கத்தினால் மாணவர்களின் கல்வி நடவடிக்கை முற்றாகபாதிக்கப்பட்டது. இதனை மீளக் கட்டியெழுப்ப அதிபர்கள், ஆசிரியர்கள் கடுமையான உழைப்புச் செய்கின்றனர். இன்னும் ஓரிரு மாதங்களில் உயர்தர மற்றும் சாதாரண தரப் பரீட்சைகள் இடம்பெறவுள்ளது. எனவே இப்படியான ஒரு காலப் பகுதியில் இரவு நேரமின்னொளிப் போட்டிகளுக்கு அனுமதி வழங்கி மாணவர்களின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு இடைஞ்சலான ஒரு தவிசாளராக நான் இருக்க விரும்பவில்லை .

மேலும் பாடசாலைகளின் அதிபர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் நலன் விரும்பிகள் என எல்லோரும் இந்தவிடயம் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை மழுங்கடிக்கும் என தவிசாளராகிய என்னிடம்முறையிடுகின்றனர்.

எனவே விளையாட்டுக் கழகங்களின் தலைவர்கள், வீரர்கள் மாணவர்களின் சீரான கல்விச் செயற்பாடுகளுக்கு ஆதரவு நல்குதல் அவசியம். அதுவல்லாமல் தவிசாளரை பிழையாக விமர்சிப்பதில் இருந்து தவிர்ந்து கொள்ளுதல் அவசியம்.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் விளையாட்டுகளுக்கு எதிரானவரல்ல ஆனால், அதனால்கல்விச் செயற்பாடுகள் பாதிப்படைதல் கூடாது என்பதிலே நாம் எல்லோரும் ஒன்றுபட்டு கவனம் செலுத்துதல் அவசியம் என்றார்.

நமது மாணவச் செல்வங்களின் கல்விக்கு முன்னுரிமை வழங்கி இக்கட்டான கால சூழலுக்குள் அகப்பட்டமாணவர்களை ஊக்கப்படுத்தி வெற்றிபெறச் செய்வேதே நமது இலக்காக அமைதல் அவசியம் என பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எல். அமானுல்லா குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாண வர்ண விளையாட்டு விழா:

## கல்முனையைச் சேர்ந்த இருவர் கௌரவிப்பு

கல்முனை மத்திய தினகரன் நிருபர்



45 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி 4X100 மீற்றர் அஞ்சல் ஓட்டப்போட்டியில் 2 ஆம் இடத்தை பெற்று கிழக்கு மாகாணத்துக்கு பெருமை தேடி தந்ததற்காக ஜே. எம். இன்சாப் மற்றும் மெய்வல்லுநர் பயிற்றுவிப்பாளர் கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர் ஏ.எம்.அப்ராஜ் ரிலா ஆகியோர் கிழக்கு மாகாண வர்ண விளையாட்டு விழாவில் வைத்து கௌரவிக்கப்பட்டனர்.

கிழக்கு மாகாண கல்வி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜி.முத்துபண்டா தலைமையில் அம்பாறை ஹாடி தொழிநுட்ப கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது 45 வது தேசிய போட்டியில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, மாவட்டங்களில் இருந்து பங்குபற்றி பதக்கங்களை வென்ற வீரர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்ளும் கௌரவிக்கப்பட்டனர்.

இக் கௌரவிப்பு விழாவில் கிழக்கு மாகாண அளுநர் அனுராதா யகம்பத் மற்றும் இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக்க உள்ளிட்ட திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு பணப்பரிசில்கள், சான்றிதழ்களை வழங்கி வைத்தனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 செப்டெம்பர் மாதம் 18ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.